பக்கங்கள்: 12+IV= பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 24 புதன்கிழமை (10-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:286

# இனி நடக்கப்போகும் பேச்சுக்கள்

# கடினமானவை என்கிறார் பிரதமர்!

## மேலும் சில தடவைகள் இடைநடுவில் முறிந்தாலும் ஆச்சரியமில்லையாம்

கோலாலம்பூர்,செப்ரெம்பர்10

**இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் மிக விரைவில் ஆரம்பமாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்.**

**"ஆனால், பேச்சுக்கள் முன்னர் நடந்த பேச்சுக்களை விடக் கடினமானவையாக இருக்கும். அவை மேலும் இரண்டொரு தடவைகள் இடைநடுவில் முறிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்றும் பிரதமர் கூறியிருக்கின்றார்.**

இரண்டு நாள் விஜயமாக மலேசியா சென்றிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அங்கு செய்தியாளர் மாநாட்டில் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புலிகள் மிக விரைவில் மீண்டும் பேச்சு மேசைக்குத் திரும்புவார்கள் என நம்புகிறேன். எனினும், இனி நடைபெறும் பேச்சுக்களின் போது இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படை

(12ஆம் பக்கம் பார்க்க)

# அதிகாரப் பரவலாக்கல் குறித்து பேர்னாட் சுவிற்ஸர்லாந்தில் அறிக்கை

கொழும்பு,செப்.10

சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும் இலங்கையில் மனித உரிமைகளைப பாதுகாப்பது தொடர்பான வருடாந்த மாநாட்டில் இலங்கை அரசின் சார்பில் அரச சமாதானச் செயலகத்தின் பணிபபாளரான பேர்னாட் குணதிலக்க பங்குபற்றுகிறார்.

சுவிற்ஸர்லாந்து வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில் இம் மாநாட்டில் பங்குபற்றும் பேர்னாட குணதிலக்க, மாநாட்டில் அறிக்கை ஒன்றை வாசிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் அதிகாரப் பரவலாக்கல் விடயமும் அந்த அறிக்கையில் இடம்பெறும் என்று சமாதானச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாநாட்டுக்கு இம்முறை விடுதலைப் புலிகளும் அழைக்கப்பட்டிருப்பதால் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளரான புலித்தேவன மாநாட்டில் பங்குபற்ற சுவிற்ஸர்லாந்து சென்றிருக்கிறார்.

சுவிற்ஸர்லாந்தில் பேர்னாட் குணதிலக்கவும் புலித்தேவனும் சந்தித்துப் பேசுவர் எனவும், அப்பேச்சில் புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனைகள், அடுத்த சமாதானப் பேச்சுக்கான திகதி நிர்ணயம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலித்தேவன், பேர்னாட் குணதிலக்க சர்வதேச மாநாட்டில் பங்கேற்பு

அரசு-புலிகள் சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த வேளையில், இரு தரப்பு பிரதிநிதிகளும் சர்வதேச மட்டத்திலான ஒரு மாநாட்டில் முதல் தடவையாக ஒன்றாகக் கலந்துகொண்டுள்ளார்கள். சுவிற்ஸர்லாந்தில் நேற்று நடைபெற்ற ஒருநாள் சர்வதேச மாநாட்டில் இலங்கை அரசின் சார்பில் பிரதமரின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக்கவும், புலிகள் சார்பில் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாடு இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுடன் நேரடியாகத் தொடர்புடையது அல்ல என்று தெரிவிக்கப்பட்டது.

### இராணுவ முன்னரங்குகள் நகர்த்தப்படுவதில்

## கண்காணிப்புக் குழுவின் செயற்பாடு குறித்து விடுதலைப் புலிகள் விசனம்!

கிளிநொச்சி,செப்.10

நாகர்கோயில், கிளாலி, முகமாலை ஆகிய பகுதிகளில் முன்னரங்க நிலைகள் மற்றும் காவலரண்களை படையினர் முன்னகர்த்திய விடயம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினர் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று விடுதலைப் புலிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமுனைத்தளபதி கேணல் தீபனுக்கும் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்ட அதிகாரி கரினாவுக்கும இடையில் நேற்று நடந்த சந்திப்பின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சத்துருக்கொண்டான் படுகொலைகள்: 13ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு

கிளிநொச்சி,செப்.10

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் 184அப்பாவிப் பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டதன் 13ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் படையினராலும், ஊர்காவற்படையினராலும் 184 அப்பாவிப்பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த துயரச் சம்பவத்தின் 13ஆவது நினைவு தினம் மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

சத்துருக்கொண்டானில் நேற்றுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## டென்மார்க் தூதர் கிளிநொச்சி விஜயம்

கிளிநொச்சி,செப்.10

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த டென்மார்க் தூதர் மைக்கல் ஸ்ரீன்பேர்க் தரைவழியாகக் கிளிநொச்சி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று சந்திக்கவிருக்கின்றார்.

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை உட்பட பல விடயங்கள் தொடர்பாக அவர் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுவார்.(ஓ-3)

## வன்னிக்கு ரெலிவ்சன் அடுத்த வாரம் வருகிறார்

கிளிநொச்சி,செப்.10

திருகோணமலை குரங்குபாஞ்சான் முகாம் விவகாரம் குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலிவ்சன் அடுத்த வாரம் கிளிநொச்சி வருகின்றார்.

பெரும்பாலும் எதிர்வரும் 15 ஆம் அல்லது 16 ஆம் திகதி அவர் வன்னி வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சந்நிதி ரதோற்சவத்தில் கட்டுத்தேர் சரிந்தது!

## அனர்த்தம் குறித்து பக்தர்கள் பேரதிர்ச்சி

யாழ்ப்பாணம், செப்.10

வரலாற்றுப் புகழ்மிக்க செல்வச்சந்நிதி ஆலயத்தின் ரதோற்சவம் நேற்று நிகழ்ந்தபோது சுவாமி வீதியுலா வந்த கட்டுத்தேர் குடைசாய்ந்தது.

எனினும், தேரில் இருந்து சுவாமியைப் பத்திரமாக பக்தர்கள் தோளில சுமந்து செல்ல வீதியுலா பூர்த்தியானது.

கட் டுத்தேர். குடைசாய்ந்த சம்பவம் யாழ். குடாநாட்டு மக்களிடையே


(12ஆம் பக்கம் பார்க்க)



செல்வச்சந்நிதி ஆலயத்தின் ரதம் இருப்பிடத்திலிருந்து புறப்பட்ட போது...



ஆலயப் பின் வீதியில் குடைசாய்ந்த ரதம்...



குடைசாய்ந்த ரதத்திலிருந்து சுவாமி இறக்கப்பட்ட காட்சி...



குடைசாய்ந்த ரதத்தின் ஒரு தோற்றம்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன

## 30 ஆயிரம் பேருக்கு வேலை; அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு,செப்.10

சமாதானச் சூழ்நிலை நிலவுவதை அடுத்து இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகள் மூன்று மடங்காக அதிகரித்துள்ளன. கடந்த ஆண்டு முதல் ஆறு மாதங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் 30 ஆயிரம் பேர் வெளிநாட்டு முதலீடுகள் காரணமாக நேரடி வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். 15 ஆயிரம் பேர் மறைமுகமாக தொழில் பெற்றுள்ளனர்.

அரசியலமைப்பு விவகார, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக் காலை தகவல் திணைக்களத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தகவல் தருகையில் கூறியதாவது:-

இவ்வாண்டில் முதல் ஆறு மாதங்களில் மாத்திரம் 1,700 கோடி ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டு இறுதியில் இந்த முதலீடுகள 3,000 கோடி ரூபாவாக இருக்கும் என்று முதலீட்டுச் சபை இலக்கு நிர்ணயித்துள்ளது.

முதலீட்டுச் சபை அனுமதித்த திட்டங்களில் 60 சதவீத திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இதுவரை கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் மாத்திரமே முதலீடு செய்துள்ளனர். இருந்தும் இவ்வருடம் வெளிமாவட்டங்களிலும் முதலீடு செய்ய ஆர்வம் காட்டியுள்ளனர். குருனாகலை மாவட்டத்தில் வெளிநாட்டு முதலீட்டுடன் 15 திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொல்காவலையில் பாரிய முதலீட்டுடன் கார் தொழிற்சாலையொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இத்தொழிற்சாலையில் நூற்றுக்கணக்கானோர் தொழில் வாய்ப்புப் பெறுவர்.

மலேசிய தொலைத் தொடர்பு நிறுவனம் இவ்வருடம் 9 கோடி டொலர்களை தொலைபேசி அபிவிருத்திக்கென இலங்கையில் முதலீடு செய்யும் அத்துடன், மூன்று மலேசிய காஸ் கம்பனிகள் அடுத்த வருடம் இலங்கையில் முதலீடு செய்யவுள்ளன.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் சொன்னார். (ஒ-5)

## வடக்கு-கிழக்குப் பகுதியில்

# கண்ணிவெடி அகற்றும் பணி மூன்றாண்டுகள் தொடரும்

## இணைப்பு அலுவலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ். மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் 2006 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து இடம் பெறவுள்ளதாக யாழ். செயலகத்தில் இயங்கும் மிதிவெடி அகற்றுவது தொடர்பான இணைப்பு அலுவலர் எல்மோ தெரிவித்தார்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் தற்போது பல்வேறு அமைப்புக்கள் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன.

- இவ்வாறு மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சகல தொண்டு நிறுவனங்களுமே தொடர்ந்தும் இப்பணிகளில் ஈடுபடவுள்ளன.

படையினரின் மிதிவெடி அகற்றும் பிரிவினரும் இப்பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். அரசின் தகவல்களின்படி மிதிவெடி அகற்றுவது சம்பந்தமான பயிற்சியைப் பெறுவதற்காக படையினர் சிலர் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளார்கள் என்றார் அவர்.

யாழ். மாவட்டத்தில் புதைக்கப்பட்டிருக்கும் வெடிபொருள்களை முற்றாக அகற்றுவதற்கான மூன்றாண்டுத் திட்டத்திற்கமைவாகவே கண்ணிவெடி அகற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5-12-185-ரி)

# திருக்கோவிலுக்கான நிதிகள் திறைசேரிக்குத் திரும்புகின்றன

## பொதுமக்கள் ஆத்திரம்; நேரு எம்.பி. விசாரிப்பு

காரைதீவு,செப்.10

திருக்கோவில் பிரதேச அபிவிருத்தி எதிர்காலத்தில் தடைப்படும் ஆபத்து தோன்றியிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த ஒரு வருட காலத்தில் இப்பிரதேச அபிவிருத்திக்கென கிடைத்த 20 லட்சத்து 63 ஆயிரத்து 963 ரூபா நிதி மீண்டும் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டிருப்பதே இதற்கான காரணமாகும்.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு நிதி ஒதுக்கப்படுவது மிகவும் குறைவு; நிதியைப்பெறுவதென்பது கல்லில் நார் உரிப்பது போன்றது. இந்நிலையில் கிடைக்கும் அற்ப சொற்ப நிதியையும் இவ்விதம் திருப்பி அனுப்புவதென்பது பொதுமக்களின் ஆவேசத்தையும், ஆத்திரத்தையும் தூண்டியிருக்கிறது.

பணம் திருப்பி அனுப்பப்படுவது தொடர்பாக பிரதேச செயலக கணக்காளர் பகுதி மீது குற்றஞ்சாட்டப்படுகிறது. பொதுமக்களிடமிருந்து கிடைத்த ஏகப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் தகவல்களையடுத்து அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, திருக்கோவில் பிரதேச செயலாளர் ஏ.கே.தவராஜாவிடம் இது பற்றி விசாரித்தார்.மற்றும் சில உயர் அதிகாரிகளையும் சந்தித்து பேசினார். பிரதேச செயலக உயர் மட்ட உத்தியோகத்தர்களிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடு, அதிகாரப்போட்டி ஆகியன அம்பலதகுக்கு வந்துள்ளன. நிதி திருப்பி அனுப்படுவதற்கான காரணங்களில் முக்கியமானது இது என்று கூறப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யனுக்கும் இந்த விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. சமுர்த்தி கிணறு அமைப்பதற்கென வந்த 1 லட்சத்து 16 ஆயிரத்து 274 ரூபா, வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தினால் தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்திற்கு நன்கொடையாக 2002 இல் வழங்கப்பட்ட 1 லட்சத்து 15 ஆயிரம் ரூபா, வீட்டுத்திட்ட நிதியில் 3 லட்சத்து 72 ஆயிரத்து 689 ரூபா ஆகியவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

நெதர்லாந்து அரசினால் 2002 இல் 50 வீடுகள் கட்ட முதற்கட்ட கொடுப்பனவாக அனுப்பப்பட்ட 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபா நிதி பயன்படுத்தப்படாமல் கணக்காளரினால் மீண்டும் கச்சேரிக்கு அனுப்பப்பட்டுளளது.

இறுதியாக வெள்ள நிவாரணம் வழங்குவதற்காக வந்த 18 லட்சம் ரூபாவில் 9 லட்ச ரூபா மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதுபோன்று இன்னும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சந்திரநேரு எம்.பி. கூறுகிறார். (ஒ)



நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் அடியார்களால் தவற விடப்பட்ட மற்றும் களவு கொடுத்து பின்னர் மீட்கப்பட்ட பொருள்களை உரியவர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று நல்லூர் அரசியல்துறைப் பணிமனையில் இடம்பெற்றது. அப்போது யாழ், நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ. ஈஸ்வரன் முன்னிலையில் தமது பொருள்களை உரிமையாளர்கள் சிலர் அடையாளம் காட்டுகின்றனர்.

# நல்லூரில் மீட்கப்பட்ட பொருள்கள் உரியவர்களிடம் நேற்று ஒப்படைப்பு

வலி. வடக்கு,செப்.10

நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் தவறவிடப்பட்ட மற்றும் களவு கொடுத்து மீட்கப்பட்ட பொருள்களில் ஒரு பகுதியை அடையாளம் காட்டி பொதுமக்கள் பெற்றுச் சென்றுள்ளார்கள்.

நேற்றுக்காலை நல்லூர் யாழ்ப்பாணக் கோட்ட அரசியல்துறைப் பணிமனையில் வைத்து கோட்டப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் மா.பூமகள் ஆகியோர் முன்னிலையில் இப்பொருள்கள் உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டன.

தாலிக்கொடி உட்பட தங்க நகைகளை உற்சவ காலத்தில் பறிகொடுத்தவர்கள் தமது நகைகளை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொண்டனர்.

பணத்துடன் பறிகொடுக்கப்பட்ட கைப்பைகளில் இருந்த பணத்தை திருடர்கள் எடுத்து விட்டு அவற்றை எறிந்து இருந்த போதே அப்பணப்பைகள் பொதுமக்களினால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்தமையை உரியவர்கள் கூறிய தகவல்களிலிருந்து அறியக்கூடியதாக இருந்தது. (ஒ-86)

## பெற்றோர் தினவிழா

யாழ்ப்பாணம்,செப்.10

தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலய பெற்றோர் தின விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் மு.ஜெயகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும், சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆசிரிய ஆலோசகர் கலாபூசணம் ந.சிவசண்முகமூர்த்தியும் கலந்துகொள்வர். (ஒ-5)

## கற்சிலைமடுவில் தியாக தீபம் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,செப்.10

கற்சிலைமடு கிராமத்தில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைப் பிரிவினர் மருத்துவ முகாம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் இம்மருத்துவ முகாம் இடம்பெற்றது. கண், பல், குழந்தை மருத்துவம், பொது மருத்துவம் மற்றும் இதய நோய் ஆகியவற்றுக்கான சிகிச்சைகள் அங்கு வழங்கப்பட்டன.

இம்மருத்துவ சேவை மூலம் சுமார் 625 பேர்வரை பயனடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## சமுர்த்தி வங்கி திறப்பு விழா

வட்டுக்கோட்டை,செப்.10

வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கி சங்க திறப்புவிழா நாளை வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு உதவி பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் வலி.மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. அன்புவும் கலந்துகொள்வர். (ஒ-161)

# பொலீஸ் காவலில் கைதி இறந்தால் பொறுப்பதிகாரியே பொறுப்பாவார்!

## பொலீஸ் மா அதிபர் சுற்றறிக்கை

கொழும்பு,செப்.10

பொலீஸாரினால் கைதுசெய்யப்படும் ஒருவர் பொலீஸ் காவலில் இருக்கையில் இறந்தால் குறிப்பிட்ட பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

பொலீஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா சகல பொலீஸ் நிலையங்களுக்கும் அனுப்பியிருக்கும் ஒரு சுற்றறிக்கையில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

ஊடகங்களுக்கும் வேறு நபர்களுக்கும் உயர் பொலீஸ் அதிகாரிகள் மட்டுமே தகவல்களை வழங்க வேணடும் என்று பொலீஸ்மா அதிபர் அச்சுற்றறிக்கையில் மேலும் தெரிவித்திருக்கிறார்.

பொலீஸ் காவலில் இருக்கையில இறந்தோரின் எண்ணிக்கை சமீபகாலமாக அதிகரித்திருப்பதை அடுத்தே இச்சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருப்பதாக பொலீஸ் தலைமையகம் கூறுகிறது.

## கருத்தரங்கு

யாழ். பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் மாதாந்த முழுநிலா துறைசார் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் பிரம்மக்குமார் ரங்கநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'நிக்கொட்' நிறுவனத்தின் தொழில்நுட்பப் பணிப்பாளர் வேதநாயகம் ரகுநாதன், யாழ். பல்கலைக்கழக வேலைகள் பிரிவு எந்திரவியலாளர் சி.தயாபரன், பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய இணைப்பாளர் பிரம்மக்குமார் ஹரிகரன் ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர். (ஒ-10)

## பிரார்த்தனை

கோப்பாய் சைவநற்சிந்தனைக் கழகத்தின் மாதாந்த முழுநிலா நாள பிராத்தனைக்கூட்டம் இன்று புதன் கிழமை காலை வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆன்மீகப் பிராத்தனை, தியானம் சிறப்பு சொற்பொழிவு, அன்னதானம் என்பன நடைபெறும். (ஒ-72)

# ஐ.தே.க. எம்.பிக்களுக்கான ஒழுக்கக் கோவை அங்கீகரிப்பு

கொழும்பு,செப்.10

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சகல மக்கள் பிரதிநிதிகளுக்குமான ஒழுக்கக் கோவை அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. நேற்றுமுன்தினம் ஐ.தே.க. தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நடைபெற்ற ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஐ.தே.க. பிரதித் தலைவரும் அமைச்சருமான கருஜயசூரிய தலைமையிலான ஒரு குழுவால் இந்த ஒழுக்கக் கோவை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்க கடப்பாடுகள் தேசியப பொறுப்புக்கள், கௌரவமான நடத்தை ஒழுக்கம், சுயலாபங்களையும் சலுகைகளையும் தவிர்த்தல் ஆகிய மூன்று தலைப்புக்களில் இந்த ஒழுக்கக் கோவை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

ஒழுக்கமுடைய கனவான் அரசியலை நோக்கி நாட்டை ஈடுபடுத்தும் இப்பாரிய செயற்பாட்டில் இணைந்து கொள்ளுமாறு ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் கருஜயசூரிய அழைப்பு விடுத்திருக்கிறார்.

# விவசாயக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள விரிவாக்கப் பிரிவு, விவசாயக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது.

இக்கண்காட்சி திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் செயற்கைமுறை சினைப்படுத்தும் நிலையம் ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை இடம்பெறும் இக்கண்காட்சியை விவசாயத் திணைக்களத்துடன் விவசாய ஆராய்ச்சிப் பிரிவும் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமும் இணைந்து நடத்துகின்றன.

'21ஆம் நூற்றாண்டுக்குரிய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்' என்ற தொனிப் பொருளில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் விவசாயத்துறை சார்ந்த பல்வேறு அம்சங்களுடன் பயிர்ச் செய்கை முறைகள், ஆராய்ச்சித் தகவல்கள், விலங்கு வேளாண்மை ஆகிய விடயங்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

அத்துடன் விவசாய இயந்திரங்கள் தொடர்பான தனியார் நிறுவனங்களும் இக்கண்காட்சியில் கலந்து கொள்ளவுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் கல்வி வலய மாணவர்கள் 18ஆம் திகதியும் வடமராட்சி கல்வி வலய மாணவர்கள் 19ஆம் திகதியும் தென்மராட்சி மற்றும் தீவக கல்வி வலய மாணவர்கள் 20ஆம் திகதியும் கண்காட்சியைப் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்தம்பி தெரிவித்தார். (ஒ-9)

# அம்பாறை மாவட்ட நிலைமைகள் குறித்து நோர்வே தூதுவர் ஆராய்வு

நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கர் நேற்று அம்பாறை மாவட்டத்திற்கு விஜயஞ்செய்து அம்மாவட்ட நிலைமைகளைப் பார்வையிட்டார். அம்பாறை [illegible] தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் தூதுவர் கலந்துகொண்டார். அம்பாறை மாவட்டத்தின் நிலைமைகள், அரசியல், சமாதான, பொருளாதார நிலைமைகள் ஆகியவை இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டன என்று மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## அதிபர்களுக்கான ஆயத்த வகுப்பு

யாழ்ப்பாணம்,செப்.10

எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ள அதிபர்களுக்கான வினைத்திறன் பரீட்சைக்கான ஆயத்த வகுப்பு இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணி முதல் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும் என்று வடமாகாண அதிபர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த ஆறாம் ஏழாம் திகதிகளில இடம்பெற்ற ஆயத்த வகுப்புக்களின் தொடர்ச்சியாகவே இன்றைய வகுப்பு இடம்பெறுகிறது. (ஒ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவின் பெரிய ஆயுதச்சந்தை பிரிட்டனில் நேற்று திறந்து வைப்பு

ஐரோப்பாவின் மிகப்பெரும் ஆயுதச சந்தையொன்று லண்டனில் நேற்று திறக்கப்பட்டது. போர்க்கப்பல்கள், உலங்கு வானூர்திகள், நவீனரக விமானங்கள் உட்பட ஆயுதங்களும் இந்தச் சந்தையில் உள்ளன.

புதிதாக திறக்கப்பட்டுள்ள இந்த ஆயுத சந்தை கட்டடத்தொகுதியை தீவிரவாதிகள் தாக்கலாம் என்ற அச்சத்தால் அங்கு ஆயிரக்கணக்கான படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை படையினர் சந்தேகத்திற்கிடமான 60 பேரை கைது செய்துள்ளனர்.

அல்ஜீரியா, அங்கோலா, கொலம்பியா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் ஆயுத உபகரணங்கள் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மனித உரிமை விடயத்தில் மிகவும் மோசமாக செயற்படும் நாடுகள் இந்தச் சந்தைக்கு வந்து ஆயுதங்களை கொள்வனவு செய்யக்கூடும் என்று அச்சம் எழுந்துள்ளது.

அத்தோடு, போரை எதிர்ப்பவர்கள் இந்தச்சந்தைக்கு முன்பாகக் கூடி கலவரத்தில் ஈடுபடும் வாய்ப்புகள் உள்ளன என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். ஆயுத விற்பனைக்கு எதிரான பிரசார இயக்கம் இந்தச் சந்தையில் குழப்பங்களை ஏற்படுத்தி விற்பனையை சீர்குலைக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால். இது ஒரு கண்காட்சியே என்றும் இங்கு விற்பனைகள் நடைபெறமாட்டா என்றும் இந்தச் சந்தையைத் திறந்து வைத்த பிரிட்டிஷ பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

## தெற்காசிய மாநாடு எதிர்வரும் ஜனவரியில்!

இஸ்லாமாபாத்,செப்.10

தெற்காசியத் தலைவர்களின் மாநாடு பாகிஸ்தான் தலைநகரில் எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி முதல் ஆறாம் திகதி வரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் பிரதமர்கள் கலந்துகொள்வர்.

மாநாட்டுக்கான அழைப்பை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்திஸ் மகமூத்கசூரி கலந்து கொள்ளவுள்ள நாடுகளின் பிரதமர்களுக்கு நேரில் சென்று வழங்குவார்.

# சிங்கப்பூரில் மீண்டும் 'சார்ஸ்'



சிங்கப்பூர்,செப்.10

'சார்ஸ்' நோய் அடக்கப்பட்டுள்ளது என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்ட சிங்கப்பூரில், மீண்டும் இந்நோய் பரவியிருக்கிறது. அங்கு இளைஞர் ஒருவருக்கு 'சார்ஸ்' நோய் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் வசித்துவரும் சீனர் ஒருவருக்கே இந்நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

'சார்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டுள்ள இவருக்கு மேலதிக சிகிச்சைகள் நடைபெறவிருக்கின்றன.

சிங்கப்பூரில் கடந்த ஐந்து மாதங்களாக கடுமையான மூச்சுத் திணறலை உண்டாக்கும் இந்நோய் காணப்படவில்லை. ஆனால், அது தற்போது மீண்டும் தொற்றியிருக்கிறது.

'சார்ஸ்' நோய் சீனாவில்தான் முதல் முதலில் ஆரம்பமானது. இந்நோய்க்கு உலகம் முழுவதும் எண்ணூறுக்கும் மேற்பட்டோர் பலியானார்கள். இவர்களில் 33 பேர் சிங்கப்பூரில் பலியாகினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### பேச்சு முறிந்ததையடுத்து

# நேபாள அரச கட்டடங்களில் தொடர் குண்டு வெடிப்புகள்!

காத்மண்டு,செப்.10

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடனான பேச்சு முறிந்த ஒரு வாரத்தில் நேற்றுமுன்தினம் பல்வேறு அரச கட்டடங்களில் அடுத்தடுத்து ஆறு குண்டுகள் வெடித்தன.

காலை எட்டு மணிக்கு முதலாவது குண்டு வெடித்தது. அதனைத் தொடர்ந்து காலை பத்து மணிக்குள் ஆறு குண்டுகளும் வெடித்துச் சிதறின.

அரச வங்கிக் கட்டடம் ஒன்றிலும், நிதி வருவாய்த்துறை அதிகாரியின் அலுவலக கட்டடத்தினுள்ளும், தொழிலாளர் நலத்துறை அதிகாரியின் அலுவலக அறைக்குள்ளும், போக்குவரத்துத் திணைக்களத்திலும் இந்தக் குண்டுகள் வெடித்தன.

நிதி வருவாய்த்துறை அலுவலகம் உள்ள மூன்று மாடிக்கட்டடத்தில் மட்டும் மூன்று குண்டுகள் வெடித்தன. இதனால் அந்தக் கட்டடம் பாரிய சேதமடைந்தது.

குண்டு வெடிப்புக்களில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்; இருபது பேர் காயமடைந்தனர்.

குண்டுகள் வெடித்ததையடுத்து அங்கு அவசரகால நிலையை மன்னர் ஞானேந்திரா பிறப்பித்தார். அவசர கால நிலை பிறப்பிக்கப்பட்டமைக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இருநூறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறிருக்க மாவோயிட்ஸ் தீவிரவாதிகளை தேடி அழிக்கும் பணியில் பொலஸாரும் படையினரும் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் தேடுதல் நடவடிக்கையில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

# நான்கு வாகனங்கள் மோதியதால் நைஜீரியாவில் எழுபது பேர் மரணம்!

### ஆறு உடைப்பெடுத்ததாலும் அங்கு மோசமான அழிவுகள்

நான்கு வாகனங்கள் விபத்தில் சிக்கியதால் நைஜீரியாவில் 70பேர் கொல்லப்பட்டுள்ளனர்.டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தலைநகர் அபுஜாவில் இருந்து லொக்கோஜா என்ற நகரை நோக்கி சென்றுகொண்டிருந்த சொகுசு பஸ் பிரதான நாற்சந்தியொன்றில் இன்னொரு பஸ்ஸுடன் மோதியது. இதனால், வேகமாக வந்துகொண்டிருந்த மற்றொரு வாகனம் விபத்தில் சிக்கிய பஸ்களுடன் மோதியது.

அதேவேளை,

பௌச்சி என்ற இடத்தில் நடைபெற்ற மற்றொரு வாகன விபத்தில் இருபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

ரயில் தண்டவாளம் அருகே உள்ள வீதியில் பயணித்துக்கொண்டிருந்த இந்த பஸ் திடீரென புரண்டதில் இந்தக் கொடூரம் நடந்துள்ளது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணம் செய்த ஒருவர் மட்டும் உயிர் தப்பியுள்ளார்.

நைஜீரியாவில் உள்ள மோசமான வீதிகளில் இவ்வாறான வாகன விபத்துக்கள் அடிக்கடி நடந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க -

நைஜீரியாவில் உள்ள கடுணா ஆற்று அணைக்கட்டுக்கள் உடைந்ததால், ஆற்றுநீர் கிராமங்களுக்குள் பெருக்கெடுத்து ஒடுகிறது. இதனால், ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் வீடுகளை கைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

ஆயிரக்கணக்கான வீடுகளும், முப்பதாயிரத்துக்கும் அதிகமான கல்லறைகளும் நீரினால் மூழ்கியுள்ளன.

இடம்பெயர்ந்தவர்களை தங்க வைக்க தற்காலிக முகாம் ஒன்றை அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

ஆனால், தமது உடைமைகளை எடுத்துக் கொள்வதற்காகவும் கள்வர் அச்சத்தாலும் இடம்பெயர்ந்தவர்கள் உடைப்பெடுத்த ஆற்றங்கரைக்கு அண்மையில் தங்கவே விரும்புகின்றனர். கடுமையான மழை தொடர்ந்து பெய்ததால்தான் கடுணா ஆறு உடைப்பெடுத்துள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### களவாடியபோது அகப்பட்டதால்

# சுண்டுவிரலை வெட்டி தன்னையே தண்டித்துக் கொண்ட சீனச் சிறுமி!

பெய்ஜிங்,செப்.10

சிறுதொகைப் பணத்தைத் திருடியபோது கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்ட சீனச்சிறுமி, அவமானம் தாங்க முடியாமலும், தனது குற்றத்திற்கு தானே தண்டனை கொடுக்கும் முகமாகவும் தனது சுண்டு விரலை வெட்டி எறிந்தாள்.

சீனாவின் கிழக்கு மாகாணமான ஜிவாசியில் நடந்த இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

14 வயதான இந்தச் சிறுமி கடை ஒன்றிற்கு பொருளகள் வாங்கச் சென்றிருந்தவேளை, அங்கிருந்த 1500 யுவான்ஸ் பணத்தை திருடமுயன்றபோது கடை உரிமையாளரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டாள்.

இதனால், அவமானம் அடைந்த அந்தச் சிறுமி தனக்குத் தானே தண்டனை கொடுக்கும் முகமாக அந்தக் கடையில் இருந்த கத்தியால் தனது சுண்டு விரலை வெட்டி எறிந்துள்ளாள்.

சுண்டுவிரல் துண்டாடப்பட்டதால் அந்தச் சிறுமியை பாடசாலைக்கு அனுப்ப அவளது தாயார் மறுத்து வருகின்றபோதும், தான் பாடசாலைக்கு செல்ல வேண்டுமென அவள் அடம்பிடித்து வருகிறாள்.

# ஆசியாவில் அமைதி வேண்டுமானால் இந்தியாவுடன் நல்லுறவு வேண்டும்

### சீன கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு

ஆசியாவில் வளர்ச்சி, அமைதி, ஸ்திரத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டும் என்றால் இந்தியாவுடன் நல்லுறவை பேணிப் பாதுகாப்பது மிக முக்கியம் என்று சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை கருதுகிறது.

இத்தகவலை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்தது.

அக்கட்சியின் மத்திய கமிட்டி செய்தித் தொடர்பாளர் யூ ஹோங்ஜிங் இது குறித்து மேலும் கூறியதாவது:-

இந்தியாவுடன் உறவை மேம்படுத்திக் கொள்வதற்கு சீனாவின் புதிய தலைமை மிக்க ஆர்வம் காட்டுகிறது; முன்னுரிமை அளிக்கிறது.

அனைத்துத் துறைகளிலும் ஒத்துழைப்பை வளர்த்துக் கொள்ள ஆர்வமாகவுள்ளோம். ஆசிய பிராந்திய ஒத்துழைப்புக்கு ஆக்கபூர்வமான இந்திய - சீன உறவு மிக அவசியம். இதன் மூலம் பல வளர்ச்சியடைந்த நாடுகளை அந்தப் பிராந்தியத்தில் உருவாக்க முடியும்.

மேலும், தாராள பொருளாதாரக் கொள்கையை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளமுடியும். பல சர்வதேச பிரச்சினைகளில் இரு நாடுகளிடையே ஒத்த கருத்தே நிலவுகிறது - என்றார்.

# ஈராக்குக்கு மேலும் துருப்புக்கள்

லண்டன்,செப்.10

ஈராக் நிலைமை கட்டுமீறிப் போவதால் மேலதிகமாக 1,200 துருப்பினரை அங்கு அனுப்ப பிரிட்டிஷ் முடிவு செய்திருக்கின்றது.

இதனை பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஜியோவ் ஹீன் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஈராக்கின் தென்புல நகரான பஸ்ராவில் ஏற்கனவே 11,000 பிரிட்டிஷ் துருப்பினர் நிலைகொண்டுள்ளனர். ஆனால், அங்கு பாதுகாப்பை உறுதிப்படுத்த அவர்களால் முடியவில்லை. இதனால், மேலதிக துருப்பினரை அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே, சதாமின் சொந்த ஊரான திக்ரித்தை நேற்றுமுன்தினம் அதிகாலை திடீரென முற்றுகையிட்ட அமெரிக்கப் படையினர், அங்குள்ள அனைத்து வீடுகளையும் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தியிருக்கின்றனர்.

இந்தத் தேடுதலின்போது சதாமின் ஆதரவாளர்களுக்கு நிதியுதவி அளிப்பவர்கள் எனக்கூறி நான்கு பேரை அவர்கள் கைதுசெய்தனர். திக்ரித்தை முற்றுகையிட்டுள்ள அமெரிக்க படையினர் அங்கிருந்து இன்னமும் வெளியேறவில்லை.



இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வந்துள்ளார். அவர் நேற்று மகாத்மா காந்தியின் நினைவிடத்துக்குச் சென்று மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். அவரது இந்திய விஜயத்துக்கு இடதுசாரிக் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஆர்ப்பாட்டங்களையும் அவை நடத்தின. ஷெரோனின் இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் மேம்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### சூகி உண்ணாவிரதம் இருக்கவில்லை என்ற

# உண்மை வெளியானதால் அமெரிக்கா மழுப்புகிறது

வாஷிங்ரன்,செப்.10

ஆங்சாங் சூகி உண்ணாவிரதம் இருக்கவில்லை என்பதைக் கேட்டு தாம் ஆறுதல் அடைவதாகவும், ஆனால், அவர் உணவு உட்கொள்ள மறுத்து வந்தது உண்மையே என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்திற்கான சர்வதேசக் குழு ஆங்சாங் சூகி உண்ணாவிரதம் இருக்கவில்லை என்ற உண்மையை வெளிப்படுத்தியது. இதனால், அமெரிக்கா வெட்கித் தலை குனிந்தது.

எனினும், தம்மீதுள்ள பிழையை ஒப்புக்கொள்ள மறுக்கும் அமெரிக்கா, ஆங்சாங் சூகி உண்ணாவிரதம் இருக்கவில்லை என்றால், அது தமக்கு ஆறுதலளிக்கிறது என்று தெரிவித்து தனது பிழையை மழுப்பியுள்ளது.

இதுகுறித்து தெரிவித்துள்ள அமெரிக்க இராஜாங்க பேச்சாளர் றிச்சர்ட் பௌச்சர் உண்மை என்னவாக இருந்திருக்கும் என்பதை ஊகிப்பது கடினம் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த எட்டு நாளகளுக்கு முன் வெள்ளை மாளிகை வெளியிட்ட தகவலின்படி சூகி உண்ணாவிரதம் இருக்கிறார் என்று முதலில் கூறியது இவர்தான்.

இவரின் இந்தக் கூற்று காரணமாகவே - உண்மையை வெளிப்படுத்தவே - சூகியை சந்திக்க செஞ்சிலுவைச் சங்கத்திற்கான சர்வதேச குழுவை அனுமதித்தோம் என்று மியான் மாரின் புதிய பிரதமர் கூறியுள்ளார். சர்வதேசத்தின் அழுத்தத்தை மியான்மார் இராணுவ ஆட்சியாளர் மீது ஏற்படுத்தும் நோக்கத்திலேயே வெள்ளை மாளிகை, சூகி உண்ணாவிரதம் இருக்கிறார் என்று திரித்துக் கூறியதாக, பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரிகள் சிலர் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

## நிறுவுநர் நினைவுச் சிறப்பு மலர் 10.09.2003

SRI SOMASKANDA COLLEGE PUTTUR

### தர்மகர்த்தாசபைத் தலைவரின் செய்தி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, அதன் நிறுவுநர் தினத்தையும் பரிசில் நாளையும் இன்று கொண்டாடுகின்றது.

1931 ஆம் ஆண்டில் கொடைவள்ளல் அமரர் மழவராயர் கந்தையா அவர்களால் நிறுவப்பட்ட இக் கல்லூரியானது பல்துறை ஆற்றல் மிக்க சமூகத்தின் பிரசவிப்பிற்கு ஊற்றுக்காலாக அமைந்துள்ளது.

ஈழத்தமிழரின் தேசிய விழிப்பிற்கும், கல்வி மேம்பாட்டிற்கும் உறுதுணையாக விளங்கிய அப்பெருமகனாரின் எண்ணங்களுக்கு உயிர் கொடுக்கும் வகையில் புத்தூர்ப் பிரதேசமும் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியும் செயற்பட வேண்டுமென அவாவி நிற்கிறேன்.

-ப.விக்னேஸ்வரன்

தலைவர், கல்லூரித் தர்மகர்த்தா சபை (பதவி வழி)
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### கல்வித்தானம் வழங்கிய காமதேனு

கிராமிய சமூகங்களில் விழிப்புணர்வும், வினைத்திறனும் கொண்ட செயற்பாடுகளை முனைப்படுத்துவதில் பாடசாலைகள் முக்கிய பங்காற்றி வருகின்றன. புத்தூர்க் கிராமத்தின் செழிப்பு, செயற்திறன் என்பவற்றை எப்போதும் புத்தம் புதிதாய்ப் பேணுவதில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி அளப்பரிய சேவையாற்றி வருகிறது.

ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் ஒரு சமய கலாசார வெற்றிடம் இருப்பது போல் புத்தூர் பிரதேசப் பெற்றோரும் பிள்ளைகளும் உணர்ந்தனர். இந்த ஏக்கத்தைக் கொண்டை வள்ளல் மழவராயர் கந்தையா நன்றாகவே உணர்ந்தார். இதற்குத் தக்கதொரு தீர்மானம் எடுத்துச் செயலாக்க முனைந்தார். 1931 ஆம் ஆண்டு தை மாதத்தில் அந்த நட்சத்திர தினத்தில் அக் கல்லூரிக்கான அத்திவாரத்தை ஆத்ம தூய்மையுடன் இட்டார்.

புத்தூர்க் கிராமத்தில் பெரும் செல்வந்தராக விளங்கிய மழவராயர் குடும்பத்தவர் கிராம மக்களுக்கு வித்தியாதானம் செய்வதிற் காட்டிய மிகுந்த ஈடுபாடு இக்கல்லூரி வளர்ச்சிக்கு அவர்கள் நல்கிய இடையறாத ஆதரவின் வழியாக வெளிப்பட்டது. வள்ளண்மை என்பது அவர்களது குடும்பச் சிறப்பு. புத்தூர் விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமான் ஆலயத்தையும் அதற்கருகில் அன்னசத்திரம் ஒன்றையும் அக்காலத்தில் அவர்கள் நிறுவினர். விஸ்வநாதப் பெருமான் ஆலயமே இன்று புத்தூர் சிவன் கோவில் என்ற திருநாமத்துடன் அருளாட்சி செய்து வருகிறது. நல்லை நகரில் நல்லை ஆதீனம் அமைந்துள்ள இடமும் இவர்களது அடியுடைச் சொத்து என்பதும் பெருமைப்படத்தக்கது.

ஊர்ப் பற்றும் தூர சிந்தையும் கொண்ட மழவராயர் குடும்பத்தினரால் நிறுவப்பட்டு, போஷிக்கப்பட்ட புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இன்று புத்தூர்ச் சிறார்களுக்கு மாத்திரம் அறிவூட்டவில்லை. அயற் கிராமங்களான அச்சுவேலி, ஆவரங்கால், வாதரவத்தை, நீர்வேலி, அச்செழு, நவக்கிரி போன்ற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அறிவூட்டி அவர்களைச் செழுமைப்படுத்தி வருகிறது.

பாரதி சொல்வது போல் "ஏழைக்கு எழுத்தறிவூட்டல்" என்பதற்கு ஒப்பான அறம் வேறெதுவுமில்லை.இத்தகைய அறப்பணியை மழவராயர் குடும்பம் செம்மையுறச் செய்துள்ளது.

2006 இல் பவள விழாக்காணும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியென்ற இப்பெரிய அறிவாலயம் நாட்டுக்குழைக்கும் நல்லவர்களையும் வல்லவர்களையும் தந்துள்ளது. சாதனைகள் நிகழ்த்துவதால் சமூகத்தை மேன்மைப்படுத்தும் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியை நிறுவிய வள்ளல் மழவராயர் கந்தையாவை இச்சிந்தனையுடன் இணைத்துப் பார்ப்பது பொருத்தமானதும் நேர்மையானதுமாகும்.

மா. சின்னத்தம்பி.
தலைவர், கல்வியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### பல்கலைக்கழகங்களுக்குத் தேர்வாகிய மாணவர்களின் பிரார்த்தனை

"வெள்ளத்தால் போகாது, வெந்தணலால் வேகாது, வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவொழியக் குறைவுபடாது" நிலைத்து நிற்கின்ற கல்விச் செல்வத்தை நமக்கு வழங்கி, உயர்நிலையடையச் செய்த ஆசிரியர்களை இன்றைய நன்னாளில் மனதார வாழ்த்துகின்றோம். எமது கல்வியை எமது பிரதேசத்திலேயே கற்கக்கூடிய சூழலை உருவாக்கிப் பற்பல கல்வியாளர்களைப் பிரசவித்த வள்ளலாரது பணிகளை இந்நாளில் நினைவு கூர்வதுடன் இவ் அறிவாலயம் மேன் மேலும் ஓங்கி வளரச் சோமாஸ்கந்தன் திருவருளையும், நிறுவுநரின் குருவருளையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அ.செந்தூரன், ஸ்ரீ.சிவசுந்தரம், இ.தங்கேஸ்வரன், வி.தர்சினி, ந.நளாயினி, ப.பிரபா, க.புகழேந்தி, ந.முரளி தாஸ், செ.விஜிதா, மு.ரூபநிதி, ந.லோகிதன், சி.ஷேம கலா, ம.ஜனார்த்தனா, ரி.பிரசன்னா, எஸ், உதயகுமாரி, எம்.செல்வேந்திரன், கே.காயத்திரி.



### நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா வள்ளலார்

-சில மீள் பதிவுகள்-

| | | |
|---|---|---|
| தந்தை | : | சிற்றம்பலம் மணியகாரன் மகன் மழவராயர் |
| தாய் | : | சின்னையா மகள் சின்னத்தங்கச்சிப்பிள்ளை |
| தோற்றம் | : | 10.09.1887 (விபவ வருடம் ஆவணி மாதம் 25ஆம் நாள் ரோகினி நட்சத்திரம்) |
| மறைவு | : | 15.05.1936 (வைகாசி மாத பூர்வ பக்கப் பஞ்சமி) |
| சிறப்பான பணிகள் | : | ★ விசாலாட்சி சமேத விஸ்வநாதப் பெருமானுக்கு ஆலயம் அமைத்தமை<br>★ சைவத்தையும் தமிழையும் காக்கவென ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியை நிறுவி இலவசக் கல்வி வழங்கியமை<br>★ பசிப்பிணி போக்க அன்னசத்திரம் அமைத்தமை<br>★ நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்காக, கதிர்வேலாயுத சுவாமி மடாலயத்துடன் கூடிய நிலத்தை வழங்கியமை. |


உ
சிவமயம்
"கற்றாங்கு ஒழுகுக"
SRI SOMASKANDA COLLEGE PUTTUR
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.
நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்
காலம் : 10-09-2003 புதன் மு.ப. 9.30 மணி
தலைவர் : திரு.வ.ஆறுமுகம் (அதிபர்)
அருளாசி வழங்குநர்
சிவஸ்ரீ.சாமி.சோமசுந்தரக் குருக்கள்
பிரதம விருந்தினர்
திரு.ப.விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்.கல்விவலயம்
தலைவர்,கல்லூரித் தர்மகர்த்தா சபை
சிறப்பு விருந்தினர்
திரு.இ.சிவஞானசுந்தரம்
உதவிக்கல்விப்பணிப்பாளர்,கோப்பாய்கல்விக் கோட்டம்
"சோமாஸ்கந்தர்" : மலர் மதிப்புரைஞர்
கவிஞர்.கலாநிதி.இ.முருகையன்
நிறுவுநர் நினைவுப்பேருரைஞர்
திரு.க.சிதம்பரப்பிள்ளை
கல்லூரியின் பழைய மாணவர்
நிர்வாக உத்தியோகத்தர் கோப்பாய் பிரதேச செயலகம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
புத்தூர்
04.09.2003
அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சபை
பழைய மாணவர் சங்கம்.
UTHAYAN Graphics (C/30077)


### ஆசிச்செய்தி

இந்து மதமும் இனிய தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்ற நோக்கில் அமரர் மழவராயர் கந்தையா அவர்கள் அரணாலயம், அறிவாலயம், அன்னசத்திரம் ஆகிய மூன்றையும் அமைத்து அறக் கட்டளைகளையும் வகுத்துவிட்டார். இத்தகைய பெருமை கொண்ட மகானை நினைவு கூரும தினமாக கொண்டாடப்படும் "நிறுவுநர் நினைவு நாளில்" 10.09.2003 அமரர் நாமம் ஓங்கவும் பாடசாலை மேன்மேலும் சிறப்புற்று உயர்ச்சி பெறவும் எல்லாம் வல்ல ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ விஸ்வநாதப் பெருமானை பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றேன்.

"சுபமஸ்து'
சாமி சோமசுந்தரக் குருக்கள்
பிரதம சிவாச்சாரியார்
ஸ்ரீ விஸ்வநாதப் பெருமான் கோவில், புத்தூர்

### வள்ளலார்க்கு அர்ப்பணமாகும் புதுமலர்

**சோமாஸ்கந்தன்**

(கல்லூரிச் சஞ்சிகை-2003)

**மலரின் உள்ளே மணம் வீசுபவை**

**வாழ்த்தியல்**

★ இந்து விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன்
★ வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு.இ.தியாகலிங்கம்
★ யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்

**பொதுவியல்**

* அறிஞர்களின் அரும்பெரும் ஆக்கங்கள்
★ பேராசிரியர் கா. சிவத்தம்பி
★ திரு.தி.வேல்நம்பி (கல்லூரியின் பழைய மாணவர், சிரேஷ்ட விரிவுரையாளர், யா.ப.க)
★ திரு.து.ஸ்ரீகனகசபேசன் (கல்லூரி ஆசிரியர்)

**பதிவியல்**

★ மாணவர் பகுதி ( தமிழ் . ஆங்கிலம்)
★ மன்றங்களின் செயற்பாட்டறிக்கைகள்
★ கடந்த ஓராண்டுச் செயற்பாடுகளின் காட்சிப் பதிவுகள்
★ பரிசுப்பட்டியல், பணிக்குழுப் பட்டியல்

-மலர்க்குழு

### வள்ளலாரை வழுத்துவம்

எங்கள் அறிவுக் கலைக்கூடம் இன்று விழாக் கோலம் பூண்டிருக்கிறது. வள்ளலார் அமரர் மழவராயர் கந்தையா அவர்களின் பிறந்த தினமாகிய இந்நாள் அவர்தம் பணிகளை நினைத்து வணங்கும் பொன் நாளாக மிளிர்கிறது.

வித்தியா தானத்திற்கென ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியையும், ஆன்ம ஈடேற்றத்திற்கென புத்தூர்ச்சிவன் தேவஸ்தானத்தையும் ,பசிப்பிணி போக்கவென அன்ன சத்திரத்தையும் அமைத்த பெருமகன் அவராவார்.

வள்ளலார் எங்கள் கல்லூரிக்கென விட்டுச் சென்ற அசையும் அசையாச் சொத்துக்கள் மூலம் இன்று . கல்லூரியிலுள்ள சோமாஸ்கந்தப் பெருமானுக்குத் தினமும் இரு வேளைப் பூசை வழிபாடுகள் ,அறுபத்து மூவர் குருபூசைகள் ,மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு உண்டி கொடுத்து நடத்தப்பட்டுவரும் பின்னூட்டல் வகுப்புகள், பல்கலைக்கழகத்திற்குத் தேர்வாகும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில்கள், மாவட்ட மட்டத்திலான திருக்குறட் போட்டிகள் போன்ற நற்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சைவமும் ,தமிழும் நம் இரு கண்கள் எனக் கொண்டு வள்ளலார் நினைவுகளுடன் வழுத்தும் எங்களை சோமாஸ்கந்தனின் திருவருளும் வள்ளலாரின் குருவருளும் என்றும் நல்லாற்றுப்படுத்தும்.

வ.ஆறுமுகம்.
அதிபர், ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்


கணேசன் ரெக்ஸ்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சாரங்கன் நகைமாடம்
அன்ட் சென்ரர்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ரட்ணம்ஸ் பாட்டா
49, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

CITY TAILORS
Specialist in Wedding Coats & Suits
78, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.வாச் வேக்ஸ்
55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மதுரா நகைமாடம்
59, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2204

EVEREST WATCH WORKS
65, Kasthuriar Road,
Jaffna.

விஷ்ணு பவான்
சைவ உணவகம்
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## காவல்துறையின் வழிகாட்டி

கிளிநொச்சியில் தமிழீழக் காவல்துறையின் நடுவப் பணியகத்தைக் கடந்த திங்களன்று திறந்துவைத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அங்கு காவல்துறை உறுப்பினர்களோடு கலந்துரையாடினார். அப்போது காவல்துறை குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் அர்த்தம் பொதிந்தவை.

ஈழத்திலும் இலங்கையிலும் உள்ள காவல்துறையினர் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியாக சகல காவல்துறையினரும் கைக்கொள்ளவேண்டிய உயர் வழிகாட்டி நெறிகளை இந்தச் சந்திப்பின்போது தலைவர் பிரபாகரன் தெளிவாக - விளக்கமாக - எடுத்துரைத்திருக்கின்றார்.

தமிழீழ காவல்துறை பெறுப்புணர்வோடும், கடமையுணர்வோடும் செயற்பட்டு வருவதைப் பெருமையுடன் நினைவு கூர்ந்துள்ள அவர், காவல்துறை உறுப்பினர்கள் ஒழுக்கத்தையும் உயர் விழுமியங்களையும் கைக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருக்கின்றார்.

"குற்றவாளிகள் பிறப்பதில்லை; உருவாக்கப்படுகின்றார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். குற்றங்களின் பின்னணியில் குற்றவாளிகளை நோக்காமல், குற்றத்திற்கான சூழ்நிலையின் பின்னணியில் குற்றங்களை ஆராயுங்கள். அதன் மூலம் அத்தகைய குற்றச் செயல்களிலிருந்து அவர்களைத் திருத்தி எங்களுடைய சமூக வாழ்க்கையில் நல்ல பிரஜைகளாக அவர்களை எவ்வாறு வாழ வைக்க முடியும் என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும். சமூகச் சூழ்நிலைகள்தாம் குற்றவாளிகளை உருவாக்குகின்றன என்பதையும் மறந்துவிடாதீர்கள்.

"குற்றவாளிகளையும் மனிதர்களாக மதித்து நடத்துங்கள். கண்டிப்பு இருக்கும் அதேநேரம் உங்களிடமிருந்து அன்பும் அவர்களுக்குச் செலுத்தப்படவேண்டும்." - என்று காவல்துறையினருக்கு அறிவுரை கூறியிருக்கின்றார் தலைவர் பிரபாகரன்.

ஒழுக்கமும் சீலமும் நிறைந்த தமிழ்ச் சமுதாயம் ஒன்றை வார்த்தெடுக்கும் - வடித்தெடுக்கும் - ஒரு சிற்பியின் மனநிலையில் அவரது கனவுகள் - எதிர்பார்ப்புகள் - விரிந்து செல்வதை அவரது இந்தக் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதற்கு அப்பால் தமிழீழ காவல்துறையின் சீருடை குறித்து அவர் தந்துள்ள விளக்கம், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படைக் காரணத்தையே தொட்டுச் சென்றிருப்பதும் நோக்கற்பாலது.

தங்களுக்கும் சம்வுரிமை கேட்டு ஈழத் தமிழர்கள் அஹிம்சை வழியில்தான் ஆரம்பத்தில் போராடினார்கள். மூன்று தசாப்த காலம் தொடர்ந்த இந்தப் போராட்டம் சிங்களப் பேரினவாதிகளால் ஆயுத முனையில் அடக்கி ஒடுக்கப்பட்டது. அந்த அடக்குமுறையின் சின்னமாக - வெளிப்பாட்டுக் கருவியாக - பேரினவாத அரசின் காக்கிச் சட்டை அணிந்த பொலீஸும், இராணுவமுமே விளங்கின.

தமிழரின் உரிமைப் போராட்டத்தை அடக்குவது மட்டுமல்லாமல், தமிழர்களின் வாழ்வியலையே அடக்கி ஒடுக்கும் கொடூரப் படையாகப் பொலீஸ் துறையும் இராணுவமும் பரிணாமித்து, அட்டூழியம் புரிந்தபோதுதான் - அதன் அழிவு, நாச நடவடிக்கைகளுக்கு எதிர்ப்போராட்ட சக்தியாக தமிழரின் விடுதலைப் போராட்டம் ஆயுத வழியில் துளிர்க்கத் தொடங்கியது; தலைவர் பிரபாகரன் போன்ற போராளிகள் முளைவிட்டனர்.

அடக்குமுறை அரசுகளின் ஏவலாளர்களாகச் செயற்பட்ட காக்கிச் சட்டை அணியினர் மீது தமிழர்களுக்கு இயல்பாகவே இருக்கும் வெறுப்பை - அந்த அணியினரின் அடக்குமுறையை நேரடியாக எதிர்கொண்ட தலைவர் பிரபாகரன் நன்கு புரிந்துகொண்டுள்ளார். அதன் விளைவே தமிழீழ காவல்துறைக்கு வித்தியாசமான நிறத்தில் சீருடைத்துணியை அவரைத் தெரிவுசெய்ய வைத்துள்ளது.

"தமிழீழக் காவல்துறையின் சீருடை ஸ்ரீலங்காக் காவல்துறையினருடைய சீருடையைவிட வித்தியாசமானது. ஸ்ரீலங்கா பொலீஸினுடைய சீருடை காக்கி நிறம். உங்களுடைய சீருடை மெல்லிய இளநீல நிறம். நான் இந்த நிறத்தைத் தெரிவுசெய்வதற்குக்கூடக் காரணம் இருக்கிறது. காலங்காலமாக எங்களுடைய மக்களிடம் பொலீஸ் என்றால் ஒரு பயம். காக்கி உடுப்பென்றால் ஒரு பயம் என்ற நிலைமை இருந்தது. அடக்குமுறை புரிகின்ற காவல்துறையைத் தொடர்ந்து பார்த்ததால் ஏற்பட்ட ஒரு விளைவு இது. எனவே, நாங்களும் அந்த உணர்வைப் பிரதிபலிக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சீருடையைத் தெரிவுசெய்தேன். ஸ்ரீலங்கா காவல்துறையைப் பார்த்துப் பார்த்துப் பழகிய மக்களுக்கு அவர்களில் இருந்த அந்த வெறுப்பு, அதே மாதிரிச் சீருடையைத் தமிழீழக் காவல்துறையினரும் தரித்தால் அவர்கள் மீதும் வரும்"

"மக்களின் மனங்களில் உள்ள - அத்தகைய - அச்ச உணர்வுகளை மாற்றவேண்டும். அதனை நீக்க வேண்டிய கடமை தமிழீழக் காவல்துறையைச் சார்ந்தது" - என்று தலைவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தக் கலந்துரையாடலில் 'அதிகாரம்' குறித்து அவர் குறிப்பிட்ட கருத்துக்களும் ஈண்டு கவனிக்கத்தக்கவை.

"அதிகாரம் கைக்கு வந்து சேரும்போது அந்த அதிகாரம் என்ற தலைப்பாரத்தை உங்கள் மீது ஏற்றிக் கொள்ளாதீர்கள். அன்பு என்ற ஆயுதத்தால் அதனை விரட்டி, மக்களுடன் உங்கள் உறவுகளை இன்னும் நெருக்கமாக வளர்த்துக் கொள்ளுங்கள்" கடமையைச் சிறப்பாகச் செய்யுங்கள் - அவரின் இந்த அறிவுரை சமூக வழிகாட்டிகள் தங்கள் மறையாகக் கொள்ளவேண்டிய நன்னெறியாகும்.

# வவுனியா மக்கள் மத்தியில் 'பொங்கு தமிழ்' விழிப்புணர்வு

## ஏற்பாட்டுக் குழுவினர் வீடுவீடாகச் சென்று பிரசாரம்

யாழ்ப்பாணம்,செப்.10

வவுனியாவில் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள 'பொங்கு தமிழ்' நிகழ்வினை மிக எழுச்சிபூர்வமாகக் கொண்டாட அதன் ஏற்பாட்டுக் குழுவினர் தயாராகி வருகின்றனர். இதற்காக வவுனியாவின் கிராமங்கள் தோறும் சென்று 'பொங்கு தமிழ்' விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றனர்.

'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக் குழுவினா, கடந்த சனியன்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ இயக்கத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனைச் சந்தித்துப் பேசினர். இந்நிகழ்வினை எவ்வாறு எழுச்சி பூர்வமாகக் கொண்டாடுவது என்பது தொடர்பாக அவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

இதன்படி, இம்மாதம் 14ஆம் திகதி முதல் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவர், 'பொங்கு தமிழ்' காரியாலயத்தில் இருந்து பூரண ஒத்துழைப்புக்களை வழங்குவார் எனவும் -

கூட்டமைப்பின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக் குழுவுடன் இணைந்து செயற்பட இருப்பதாகவும் -

செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. உறுதி அளித்திருப்பதாக 'பொங்கு தமிழ்' ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (ம-9-164)

# கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பற்றிய பூர்வாங்க அறிக்கை அடுத்தமாத இறுதியில்

## மனித உரிமைகள் ஆணைக்குழு தலைவரிடம் கையளிக்கப்படும்

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ். குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள் தொடர்பான பூர்வாங்க அறிக்கை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி வைபவ ரீதியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ராதிகா குமாரசுவாமியிடம் கையளிக்கப்படவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் கொழும்பு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகள் கடந்த ஒரு வருட காலமாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அமைக்கப்பட்ட விசேட விசாரணைக் குழுவொன்றினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதிமுதல் 4 ஆம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன. இவ்விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசாரணைக்குழுவின் தலைவர் தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவினர் யாழ். வரவுள்ளனர்.

இக்குழுவினர் விசாரணைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து, அது தொடர்பான இறுதி அறிக்கை ஒன்றை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி கொழும்பில் சர்வதேச பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள் முன்னிலையில் வைத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கையளிக்கவுள்ளனர்.

யாழ். குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பான சகல விடயங்களும் இந்த அறிக்கையின் மூலம் தெரியவரும் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-8)

# வடபகுதிக்கு உதவி செய்வதில் உலகநாடுகள் பெரும் நாட்டம்

## டென்மார்க் தூதர் பல்கலை நிகழ்வில் தெரிவிப்பு



வடமராட்சி,செப்.10

சர்வதேச நாடுகள் இலங்கையின் வடபகுதிக்கு பெரும் உதவிகளை வழங்கவிரும்புகின்றன. டென்மார்க் அரசாங்கமும் வடபகுதி மக்களுக்கு காத்திரமான உதவிகளை வழங்கும்.

- இவ்வாறு இலங்கைக்கான டென்மார்க் தூதுவர் மைக்கல் ஸ்ரன்பேர்க், யாழ். பல்கலைக்கழகத்தில் வைத்து யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகை நிறுவனங்களுக்கும் சிற்றி ஹோலுக்கும் நவீன கணனி இயந்திரங்களை வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் யுனெஸ்கோவின் பத்திரிகைப் பயிற்சி நெறிப் பொறுப்பாளர் எஸ்.அருள்செல்வமும், வட இலங்கை பத்திரிகையாளர் சங்க உறுப்பினர்களும் பத்திரிகைகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் டென்மார்க் தூதுவர் மைக்கல் ஸ்ரன்பேர்க் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இந்நாட்டில் சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு சுதந்திரமான ஊடகங்களின் பங்கு முக்கியமானது. சமாதானத்தை நிலைநாட்ட எங்களாலான உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறோம்.

தமிழ் சிங்கள இனங்களுக்கிடையே ஒன்றுமைப் பாலத்தைக் கட்டி நாட்டுமக்கள் சுபீட்சமான வாழ்க்கையை நடத்துவதற்கு வழிவகுப்பதே எமது பிரதான நோக்கமாகும்.

பத்திரிகைத்துறையை முன்னெடுத்துச் செல்ல யாழ்.பல்கலைக்கழகத்தில் தனியான பீடம் ஒன்று அமைப்பது மிக அவசியமானது. இப்பீடத்துக்கான உதவிகளை வழங்க எமது நாடு அக்கறையாக இருக்கிறது.

வடக்கில் மட்டுமல்ல. தென்பகுதியிலும் நாம் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்தி வருகிறோம். தென்கிழக்குப் பகுதியில் ஒலுவிலில் 15 கோடி டொலர் செலவில் அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்த உதவிகளைப் புரிந்துள்ளோம்.

பேராசிரியர் சிற்றம்பலம் பேசுகையில், சிற்றி ஹோலைப் புனரமைத்து அங்கு புதிய கட்டடம் நிறுவப்படவேண்டும். யாழ். பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத்துறைக்கென தனியான பீடம் அமைக்கப்படுவதுடன், பத்திரிகை டிப்ளோமா பயிற்சி நெறியும் ஆரம்பிப்பதோடு இவற்றிற்கான நிதி உதவிகளை டென்மார்க் அரசு வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

மொத்தம் 18 நவீன கணனிகளில் 10 சிற்றி ஹோலுக்கு வழங்கப்பட்டன. (ம-173-6)



யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற கணனி வழங்கும் நிகழ்வில் டென்மார்க் தூதுவர், பேராசிரியர் க.சிற்றம்பலம், பத்திரிகைப் பயிற்சி இணைப்பாளர் எஸ். அருள்செல்வம் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# குடிதண்ணீர் விநியோகத்தை சீராக்குவதற்கு நடவடிக்கை

## நீர்ப் திட்டம் செயற்படுத்தும்

யாழ்ப்பாணம்,செப்.10

வடக்கு - கிழக்கு அவசர புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் (நீரப்) குடாநாட்டில் குடிதண்ணீர் விநியோகம் சீராக்கப்படவிருக்கின்றது.

இத்திட்டத்தின் கீழ் குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள் புனரமைக்கப்படுவதுடன் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவும் ஏனைய பகுதிகளில் புதிய நீர்விநியோகத் திட்டங்களும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

தற்போது தேசிய நீர்வழங்கல் வ்டிகாலமைப்புச் சபையினால் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலத்தடிக் குழாய்கள் மூலமான குடிதண்ணீர் விநியோகத் திட்டங்கள் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன.

இதன்மூலம் சுத்திகரிக்கப்பட்ட சுத்தமான குடிதண்ணீரை குடாநாட்டு மக்களுக்குக் கிடைக்கச் செய்வதே இதன் நோக்கம் என்று கூறப்பட்டது.

இதற்கான நிதி ஒதுக்கீடுகள் யாவும் பிரதேச செயலக ரீதியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

இதேவேளை -

அண்மையில் குடாநாட்டின் குடிதண்ணீர் வளம் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட ஜேர்மன் நாட்டுக் குழுவினர் குடிதண்ணீரில் நச்சுத்தன்மை காணப்படுவதாகத் தெரிவித்ததையடுத்தே இந்த அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

### நாளை

ஆவணி 25
வியாழக்கிழமை
(11.09.2003)
திதி : பிரதமை
முன்னிரவு 11.16 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
பிற்பகல் 5.42 வரை
மஹாளய பக்ஷாரம்பம்
சுபநேரம்: 7.33 - 9.03
[illegible]
[illegible]

### உதயவாக்கு

பேராசையை ஒழிக்க விரும்பினால் அதன் தாயான ஆடம்பரத்தை முதலில் ஒழிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்.



2000 ஆம் ஆண்டு மாவட்ட ரீதியாக பிரதேச செயலகங்களுக்கிடையேயும், கிராம அலுவலர் காரியாலயங்களுக்கிடையேயும் நடத்தப்பெற்ற முகாமைத்துவப் போட்டியில் வலி. கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் முதலாம்இடத்தையும், யாழ். மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று கௌரவிக்கப்பட்ட கோப்பாய் வடக்கு கிராமசேவையாளரும் வடகோவை இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் போசகரும் ஆகிய

**திரு. எஸ்.ரீ.வரதராஜன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல உயர்வுகள் பெற்று நற்பணியாற்றி வாழவேண்டுமென விநாயகப்பெருமானை வேண்டுகிறோம்.

பரிபாலனசபையினரும்,
விநாயக அடியார்களும்.

வடகோவை இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயம்,
கோப்பாய் வடக்கு.

(22248)(21-11-14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



துன்னாலை கிழக்கைச் சேர்ந்த
முன்னாள் தபால் அதிபரும்,
பின் கிரேக்க, ஜேர்மன் கப்பல்களில்
வானொலி
உத்தியோகத்தருமாக இருந்த

**திரு. தெட்சணாமூர்த்தி செல்வராசா**

அவர்கள் தற்போது துன்னாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும், வெல்லிக்கந்தோட்டப் பிள்ளையார் ஆலய நிர்வாகசபைப் பொருளாளராகவும் பணியாற்றுவதோடு மற்றும் பல பொதுச் சேவைகளிலும் முன்னின்று உழைப்பவர்.

இவர் யாழ். மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக 08.09.2003 அன்று யாழ். மேலதிக மாவட்ட நீதிபதி உயர் திரு.பா.சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். இவரின் சேவை மேலும் சிறந்தோங்கவேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

த.சிவனடியார்,
தலைவர், வெல்லிக்கந்தோட்டப் பிள்ளையார்
ஆலய நிர்வாக சபை.
ச.செ.சுப்பிரமணியம,
தலைவர், குடவத்தை பிள்ளையார் நிர்வாக சபை,
ப.நோ.கூ.ச.துன்னாலை தெற்குக்கிளை.

(22396)(21-14-17)

## தெங்குச் செய்கையாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,செப்.10

வடமாகாண தெங்கு பயிர்ச் செய்கையாளர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் வடமாகாண தெங்கு பயிர்ச் செய்கையாளர் சங்கத்தின் தலைவர் அ.நல்லதம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிர்வாக சபைக் கூட்டத்தில அனைத்து தென்னந்தோட்ட உரிமையாளர்களையும் கலந்து கொள்ளும்படி தலைவர் கேட்டுள்ளார். (ம-ரி)

## அங்குரார்ப்பணம்

பொது நிலையினர் மகளிர் அமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு இம்மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி அமைப்பில் பணியாற்ற விரும்பும் பெண்கள் பங்குத் தந்தையின் சிபாரிசுடன் அன்று காலை 10 மணிக்கு சமுகமளிக்குமாறு பொது நிலையினர் ஆணைக்குழுவின் இயக்குநர் அருள்திரு.றெஜி ராஜேஸ்வரன் அடிகள் கேட்டுள்ளார். (ம-8)

## கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்.மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இவ்வருட ஆரம்பத்தில் நடத்தப்பட்ட 'இன்றைய மாணவர்களின் கல்வி நிலையில் பெற்றோரின் பங்கு" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

★முதலாம் இடம் - செல்வி மேரி - டிலோஜினி,

★இரண்டாம் இடம் - அமிராக் ஷாயினி எட்வேட் (வைராக் கண்டி)

பரிசு பெற்றவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக தமது பரிசில்களை 'அருள் கதிர்', 28, குருசோ வீதி, யாழ்ப்பாணம் என்னும முகவரியில் அமைந்துள்ள இளைஞா ஆணைக்குழு பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## தேவை

எமது நிலையத்திற்கு கணனி படித்த, கணக்கியல் அறிவுள்ள ஒருவர் உடன் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராயின் முன்னுரிமை அளிக்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு:

K.S.M.தொலைத் தொடர்பகம்,
146, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

(22409) (21•11-14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 11 - 1937



மறைவு 22 - 08 - 2002

**அமரர் நடராசா கதிர்காமநாதன்**

(இளைப்பாறிய உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்)

திதி 10-09-2003

அறிவுப் பெட்டகமாய் ஆற்றலின் உறைவிடமாய்த் திகழ்ந்தீர்!
அன்போடும் பாசத்தோடும் எம்மோடு ஒன்றாய்ப் பழகினீர்
ஆண்டு ஒன்றும் ஆயிற்றோ அந்தோ உமைப் பிரிந்து?
ஈண்டு உமது நினைவுடனேயே இப்பூவுலகில் வாழ்கின்றோம்
தூண்டாமணி விளக்காய்ப் பிரகாசித்து மறைந்து விட்டீர்!
ஆண்டுதோறும் நினைந்தே அஞ்சலி செலுத்துகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை, சகோதரர்கள்,
உறவினர்கள்.

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.

(22400)(21-11-14)

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் சின்னத்தம்பி மகாலிங்கம்**

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

திதி: - 10.09.2003

அன்போடும் பண்போடும் எமை வளர்த்து
சீரோடும் சிறப்போடும் வாழ வைத்து
பேரோடும் புகழோடும் பூவுலகை நீத்து
விண்ணுலகம் நோக்கிச் சென்ற தந்தையே!
நீங்கள் எங்களுடன் இருந்த
காலங்கள் போல் வராது
இனி வரும் காலம் - ஓராண்டு வந்தது
உங்கள் நினைவுகளை
சுமந்த இதயங்கள்
அழுகின்றன.....
எங்களை ஏன் பார்க்க மறந்தீர்கள்?
இமைகள் மூடினால் உங்கள் நினைவுகள்
நீங்கள் வரமாட்டீர்கள் என்றாலும்
எம்மால் உங்களை என்றும் மறக்கமுடியாது!
அப்பா எங்களின் ஒவ்வொரு நிகழ்வையும்
நீங்கள் தெய்வமாக இருந்து நடத்தவேண்டும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்திமில்,
ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
தாய், சகோதரர்கள்.

தோற்றம்: 10.01.1947

மறைவு: 22.08.2002

UTHAYAN Graphics (22363)(11-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி – பிரதமர் புதிய மோதல் களம்!

ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கும் பிரதமரிற்கும் இடையிலான புதிய களமொன்று ஐக்கிய நாடுகள் சபையின் பேரால் இப்போது திறக்கப்பட்டுள்ளது. கடந்த பல மாதங்களாகவே சமாதானம் தொடர்பான விசனத் தெரிவிப்புக்களையும், தன்னிச்சையான முடிவுகளையும் மேற்கொண்டு வந்த ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் பங்குபற்றுவது தொடர்பான அக்கறையை வெறுமனவே தட்டிக் கழித்துவிட முடியாதபடி அமைவுபெற்றுள்ளது ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரல். எனவே, இது தொடர்பான பார்வையாக இவ்வாரத்தை எடுத்துச் செல்வோம்.

இன்றைய திகதி தமிழர் தரப்புத் தொடர்பான தாராள பயத்தைப் பெற்றவர்களாக ஜனாதிபதிசார் தரப்பு மாற்றம் பெற்றுவிட்டது. இதனையே காரணமாக்கி ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியைக் கைபார்க்கும் முயற்சிகளை சந்திரிகா இந்த வருட ஆரம்பத்தில் இருந்து மேற்கொண்டாராயினும், கடந்த மாதத்திலிருந்து அது முனைப்பு பெற்றுள்ளது. குறிப்பாக கடந்த மாதம் 15ஆம் திகதியளவில் கதிர்காமரினால் மேற்கொள்ளப்பட்ட இந்தியப் பயணம் இதற்கான எதிர்வு கூறலாக அமைவு பெற்றது. அதனடுத்தபடியாக இடம்பெறும் சம்பவங்களை ஜனாதிபதியே நேரடியாக முன்னெடுத்துச் செல்லுவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு கதிர்காமரினால் மேற்கொள்ளப்பட்ட இந்தியப் பயணத்தின் போது இந்தியப் பங்களிப்புத் தொடர்பான நாடிபிடிப்பு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக ஜப்பான், நோர்வே ஆகியவற்றின் சமாதானப் பங்குபற்றுகை தொடர்பான டெல்லியின் பார்வை பெறப்பட்டது. மேற்படி நாடுகள் தொடர்பாக நல்ல அபிப்பிராயத்தை இந்தியா கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்த கதிர்காமர், இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தை இந்திய வெளியுறவு அமைச்சு தனியலகொன்றின் மூலம் கையாளவேண்டும் என வேண்டுகோள் விடுத்து சந்திரிகா சார்பிலான இம்முயற்சிகளிற்கு அடித்தளமிட்டார்.

கதிர்காமரின் இந்திய நாடிபிடிப்பின் அடுத்த கட்டமாக, நோர்வே, ஜப்பானிற்கு இணையான சமாதானச் சக்தியொன்றின் பங்குபற்றுகையை அறிமுகப்படுத்துவதற்காக பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியான மார்டின் அக்டிசாரி சந்திரிகாவால் அழைக்கப்பட்டார். நமீபியா, கொசாவோ மற்றும் வட அயர்லாந்து தொடர்பான சமாதான முயற்சிகளில் பங்காற்றிய மார்டின் அக்டிசாரியுடனான ஜனாதிபதியின் கருத்துப் பகிர்வில், அவர் குறிப்பிட்ட விடயங்களின் மூலம், தான் வெறுமனே தற்போதைய சமாதான முயற்சிகளிற்குள் தேவையற்று வலிந்து தள்ளப்படுவதை உணர்ந்த மார்ட்டின் தானாகவே விலகிக்கொண்டார்.

அத்தோடு, தனது மூன்றுநாள் விஜயத்தின்போது மார்டின் அக்டிசாரி அரசியற் தலைவர்களையும் பல்வேறு சட்டநிபுணர்களையும் சந்திப்பார் என ஜனாதிபதி செயலகம் உறுதி செய்திருந்தும், இவ்வாறானதொரு சந்திப்பிற்கு இன்றைய கட்டத்தில் பலரும் விருப்பம் கொண்டிருக்கவில்லை என்பது நிலைமையின் தாற்பரியத்தை அவருக்கு விளக்கியது. குறிப்பாக ரணிலைச் சந்திக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் நேரப்பற்றாக்குறையைக் காரணம் காட்டி ரணிலால் தவிர்க்கப்பட்டதானது சந்திரிகாவின் முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிவதாக அமைந்திருந்தது.

இவ்வாறாக தனது முயற்சிகள் சலிப்புத்தன்மையினதாக முடிவுற்றதையடுத்து, ஐக்கிய நாடுகள் சபையைக் களமாக்கும் முயற்சிக்கு வித்திட்டார் சந்திரிகா. இம்மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரில் ரணில் மற்றும் டிரோன் பெர்ணான்டோவின் பங்குபற்றுகை மற்றும் ரணில் பங்குபற்றுகையைத் தவிர்த்து தான் அதில் பங்குபற்றுவதன் மூலம் தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பான தனது அபிலாசைகளை உலகத் தலைவர்களிற்கு எடுத்துக்கூறும் களமாக்க முயல்கின்றார் சந்திரிகா.

அத்தோடு, பிரதமர் ரணிலினதும், வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோவினதும் ஒரு வருடகாலக் கனவான இந்த ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தொடரின் பங்குபற்றுகையை இல்லாது செய்யும் முயற்சியிலும் சந்திரிகா வெற்றியடைவார் என்பதையே கிடைக்கப்பெறும் தரவுகள் தெரிவிக்கின்றன. அதே வேளை, சந்திரிகா - ரணில் ஆகியோரின் அதிகாரங்கள் பற்றிய பலப்பிரயோகத்தின் பொருதுகளமாக மாற்றப்பட்டுள்ள மேற்படி கூட்டத்தொடர் ஸ்ரீலங்கா அரசின் வலுவற்ற ஆட்சியமைப்புக்கள் தொடர்பான உண்மை நிலையையும் அறியப்படுத்தும் களமாகவும் மாற்றமடையும்.

ஏனெனில், அநேகமான நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் இம்மாநாட்டில் ரணில் பங்குபற்றுவதன் மூலம சமாதானம் தொடர்பான பயன்பாட்டைப் பெறமுனைந்த அரசு, மறுபுறததே இப்பயணத்தின்போது அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அவர்களையும் மேலும் பல அமெரிக்க இராஜதந்திரிகளையும் சந்திப்பதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தது. அமெரிகக விவகாரங்களைக் கையாளும் அமைச்சரொருவர் மற்றும் தூதரக இராஜதந்திகளினால் முன்னோடியாகத் திட்டமிடப்பட்ட இந்த முயற்சி ரணில் அரசின் சர்வதேச வலைப்பின்னலின் திறனை வெளிப்படுத்துவதாக அமைவுபெற இருந்தது.

**கனடாவிலிருந்து.... சுதர்மா**

இம் மாதம் 26ஆம் திகதிய அமர்வில் உரையாற்றவிருந்த ரணிலின் திட்டம் மேற்குறிப்பிட்டவாறமைய, மறுபுறமாக இம்மாதம் 22ஆம் திகதிய அமர்வில் உரையாற்றவிருக்கின்ற வெளிவிவகார அமைச்சரின் திட்டம் வேறுவிதமாக அமைந்திருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த பொதுச் செயலாளருக்கான தேர்தலில் போட்டியிட விருப்புக் கொண்டுள்ள டிரோன் பெர்ணான்டோ இக்கூட்டத்தைத் தனது பிரசாரக் களமாக்க விளைந்து நின்றார். குறிப்பாக, உலக நாடுகளின் விருப்புக்களை தனது வெற்றியின் பக்கம் திருப்புவதற்கான களமாக்க முனைந்தார்.

ஆனால், மேற்படி இருவரின் விருப்புக்களையும் சாத்தியமற்றதாக்கி, தனது அதிகாரத்தின் தன்மையை அறிவிக்க முனையும் சந்திரிகா, தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்துமளவிற்கு ரணிலின் அரசு முறைகேடுகளை இந்த ஐ.நா. கூட்டத்தொடர் சம்பந்தமான விடயத்தில் மேற்கொண்டுள்ளது என்கிற குற்றச்சாட்டை இப்போது ஜனாதிபதி செயலகம் சுமத்தி நிற்கிறது. எனவே, இது தொடர்பான தெளிவான பதிலை ரணில் தரப்பு வழங்காதவிடத்து சந்திரிகாவின் நிலைப்பாடு நியாயமானதே என்கிற முடிவையே அது ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படும்.

ஏனெனில், நாடுகளின் தலைவர்களிற்கான இக் கூட்ட அழைப்பிதழ் ஐ.நாவிலுள்ள இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியான சி. மகேந்திரன் ஊடாக ஐ.நாவின் செயலாளர் நாயகத்தால் ஜூலை 23, 2003இல் அனுப்பப்பட்டது. அந்த அழைப்பிதழ் ஜனாதிபதியின் காரியாலயத்தை ஏனோ சென்றடையவில்லை. மேற்படி அழைப்பிதழிற்கான பதில் கிடைக்காத காரணத்தால் ஜூலை 31, 2003இல் ஐ.நாவின் செயலாளர் நாயகம் மீண்டும் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார். இக்கடிதம் இரண்டு வாரத்தின் பின், ஓகஸ்ட் 15ஆம் திகதியன்று வெளிவிவகார அமைச்சரால் ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்டது.

ஐ.நாவின் உத்தியோகபூர்வ அழைப்பிதழிற்கே சந்திரிகா பங்குபற்ற விருப்புத் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கும் ஜனாதிபதி செயலகம், நாடுகளின் தலைவர்களிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அமர்வில் கலந்துகொள்வதற்கான முன்னுரிமை, பிரதமர் மற்றும் அமைச்சர்களைவிட நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிக்கே உண்டு எனவும் தெரிவித்துள்ளதோடு, ஜனாதிபதியின் பங்குபற்றுகை தொடர்பான மேலதிக ஏற்பாடுகளைச் செய்யுமாறு தாம் வெளிவிவகார அமைச்சிற்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்தோடு, பிரதமர் இதில் கலந்துகொள்ளவுள்ளதைப் பற்றி தங்களிற்கு எதுவுமே தெரியாதெனவும், அதுபற்றிய செய்தியை செப்ரெம்பர் 03, 2003இல் தாங்கள் பத்திரிகையொன்றில் கண்ணுற்றதாகவும் ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. ஆனால், மறுபுறத்தே பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், இல்லையில்லை... பிரதமர் கலந்துகொள்வதற்கான சகல ஏற்பாடுகளும், அதனோடிணைந்த ஏனைய இராஜாங்கச் சந்திப்புக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டன என்று தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்ட முதல் அழைப்பிதழிற்கு என்னவாயிற்று, நிகழ்ச்சி நிரலில் எவ்வாறு வெளிவிவகார அமைச்சரும், பிரதமரும் இடம்பெற்றார்கள் என்ற கேள்விகளிற்கான விடை அறியப்படாவிட்டாலும், அழைப்பிதழ் அனுப்பப்படுவதற்கு பல மாதங்களிற்கு முன்னரேயே அமெரிக்கத் தலைவர்களைச் சந்திக்க அனுமதி பெற்றுக் காத்திருக்கும் ரணிலும், தனது செயலாளர் நாயகம் பதவிக்கான வேட்புமனுவிற்கான ஆதரவை நாடி களமிறங்கிய டிரோன் பெர்ணான்டோவும் எவ்வாறு இதனைக் கையாளப்போகின்றார்கள் என்பதே சிங்களத்தின் இன்றைய கேள்வி.

மறுபுறத்தே, சிங்களத்தின் தலைமைகளிடையேயான இப்போட்டி தமிழர் தரப்புச் சார்ந்த நிலைகளில் மாற்றமெதனையுமே உண்டு பண்ணாத அளவிற்கு சிங்களத்தின் விட்டுக்கொடுக்காப்போக்கு அமைவுபெற்றுள்ளது. குறிப்பாக, மக்களைக் குடியேற அனுமதிக்காமல் தொடர்ந்தும் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தை தககவைத்திருததல், இடைக்கால நிர்வாக அலகு தொடர்பான தமிழர் தரப்பின் இராஜதந்திரக் கையாளுகை என்பன சமாதானம் தொடர்பான குற்றச்சாட்டெதனையும் சிங்களம் இதர நாடுகளின் தலைவர்களிடையே முன்வைக்க முடியாத அளவிற்கு நிலைமையை இட்டுச் சென்றுள்ளது. ✳

---

# மலையக மக்களின் அரசியல் எதிர்கால விடயம் இன்னும் சர்வதேச கவனத்தை ஈர்க்கவில்லை

## அமைச்சர் சந்திரசேகரனிடம் நோர்வே அரசியல்வாதிகள் கருத்து

இலங்கை மலையக பெருந்தோட்டத்துறை மற்றும் நகர்ப்புற மக்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய விடயம் இதுவரை சர்வதேச கவனத்தை ஈர்க்கவில்லை என்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன், சமூக அபிவிருத்தி, பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் கிறிஸ்டியன் ஜோன்சன், சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

நோர்வே வெளிவிவகார அமைச்சில் இம்மூன்று அரசியல்வாதிகளையும் சமூக அபிவிருத்தி அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ.சந்திரசேகரன் சந்தித்துப் பேசியபோதே அவர்கள் மேற்படி கருத்துக்களைத் தெரிவித்தனர்.

மலையக மக்களின் சர்ச்சைக்குரிய அரசியல் எதிர்காலம் தொடர்பாகவும் சமூக, பொருளாதார அபிவிருதகி தொடர்பாகவும் அமைச்சர் சந்திரசேகரன் அவர்களிடம் எடுத்துக் கூறினார்.

சமாதானப் பேச்சுக்களில் மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் கேள்விக்குறியாக இருந்தால் இனப்பிரச்சினை முற்றுமுழுதாகத் தீர்ந்துவிடும் என்று நினைக்கமுடியாது எனவும் அமைச்சர் கருத்துத் தெரிவித்தா என்று அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

### கிணற்றில் தவறிவீழ்ந்து வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம்,செப்.10

வயல் கிணற்றில் தவறிவீழ்ந்த வயோதிபர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை கந்தரோடைப் பகுதியில் இருக்கும் தனது வீட்டிற்கு அருகில் உள்ள வயல் பிரதேசத்தில் நடந்து சென்றசமயம், வயலில் உள்ள கிணற்றில் இவர் தவறி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் கந்தரோடை சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி உமாபதி (வயது - 68) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார். இவரது சடலம் வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு வைத்திய பரிசோதனையின்பின் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(ம-15-ரி)

### மின் விநியோகம் வழங்கக் கோரிக்கை

குப்பிளான் வடக்குப் பகுதியில் மின் விநியோகம் வழங்கப்படாத பகுதிகளுக்கு உடனடியாக அதனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி திலகநாயகம்போல் பத்தினியம்மா யாழ். மாவட்ட உதவி மின் அத்தியட்சகருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

குப்பிளான் வடக்குப் பகுதியில் சில இடங்கள் கடந்த பல வருடங்களாக மின் விநியோகம் இன்றி இருளில் மூழ்கிக்கிடக்கின்றன. இப்பகுதிகளுக்கு மின்விநியோகம் வழங்குமாறுகோரி இப்பகுதிவாழ் மக்களும் விகனேஸ்வரா சனசமூக நிலைய நிர்வாகமும் அரச அதிபருக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து இப்பகுதிகளுக்கு மின்விநியோகத்தினை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரும் கடிதத்தை மேலதிக அரச அதிபர் அனுப்பிவைத்துள்ளார்.(ம-15)

# பூஞ்சணம் பிடித்திருந்த தயிர் முட்டிகள் அழிப்பு

## சந்நிதி ஆலயச்சூழலில் சம்பவம்

வடமராட்சி,செப்.10

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தின்போது, விற்பனைக்காக மட்டக்களப்பிலிருந்து எடுத்துவரப்பட்ட 14 தயிர் முட்டிகள் முற்றாக அழிக்கப்பட்டன.

தனியார் வியாபாரி ஒருவரினால் எடுத்துவரப்பட்ட தயிரில் பூஞ்சணம் பிடித்திருந்ததை கோயிலில் விசேட கடமையில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள் குழு கண்டுபிடித்ததுடன் -

அவை பாவனைக்கு உதவாதது எனத் தெரிவித்து, 14 தயிர் முட்டிகளையும் முற்றாக அழித்தனர். (எ-173)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் 1,200 பேருக்கு நிரந்தர நியமனம்

## கொள்கையளவில் பிரதமர் இணக்கம்

கொழும்பு,செப்.10

நாடெங்கிலும் உள்ள பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்களில் ஆயிரத்து 200 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமிழ் - முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் இந்த இணக்கம் ஏற்பட்டது.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மேற்கொண்ட போராட்டம் குறித்து இச்சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தமிழ், சிங்கள பாடசாலைகளில் 3ஆயிரம் ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உள்ளது என்றும் - அந்த வெற்றிடங்களில் ஆயிரத்து 200 பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆசிரியர்களில் விசேட சித்தி பெறாதவர்கள் தகுதிகாண் காலத்தில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தி (டி) பெற சந்தர்ப்பம் வழங்கலாம் என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆலோசனை தெரிவித்தார்.(ம-3)

# பாரதியார் விழா

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்றத்தின் 40ஆவது ஆண்டு நிறைவும், பாரதி விழாவும் நாளை வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு பாரதி கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

'தாயகம்' சஞ்சிகை ஆசிரியர் க. தணிகாசலம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் கருத்தரங்கு, கவியரங்கு, நடன, நாடக நிகழ்வுகள் இடம்பெறுவுள்ளன.

'பண்பாட்டின் வேராக பாரதி' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை சி.கா.செந்தில்வேல் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

'பண்பாடு உயர்ந்திடப் பாடு' என்னும் தலைப்பில் கவிஞர் இ.முருகையன தலைமையில் இடம்பெறும் கவியரங்கில் கவிஞர்கள் சோ.பத்மநாதன், கல்வயல் வே. குமாரசாமி, பகீரதன், செல்வி கண்ணா, சோ.தேரொசா ஆகியோர் பங்கேற்பர். (ம-30)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லூர் திருட்டுக்கள் தொடர்பாக கைதானோரில் 12 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.10

நல்லூர் உற்சவ காலத்தில் ஆலயப் பகுதியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 12 பேர் நேற்று யாழ்நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் நாகராசா சண்முகநாதன் என்பவரை 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 10 ஆயிரம ரூபா அரச ஊழியர் ஆள்பிணையிலும் செல்லுமாறு யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

பாலசிங்கம் பாலமணி, பாலசிங்கம் சரஸ்வதி, செல்லத்துரை ர்ராஜினி, சண்முகநாதன் லக்ஷமி, ராஜா மல்லிகா, கந்தையா ராணி, ராஜேஸ் ஜெயா, வல்லியம்மா கந்தசாமி, குமாரசாமி சிறீதேவி, அசோகா மணிவண்ணன். றஞ்சன் ரவி ஆகிய 11 பேரும் நீதிமன்றினால் விடுதலைசெய்யப்பட்டனர். (ம-8)

## கிணற்றில் வீழ்ந்து காயம்!

தொலைக்காட்சிப் படம் பார்த்து விட்டுத் திரும்பியவர் அருகில் இருந்த கிணற்றை மறந்து அதனுள் கால் இடறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

உடுவில் ஆலடிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சின்னராசா பிரியான்ஸி (வயது 18) என்ற இளம் பெண்ணே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ம-15)




# பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு. மா. தேவேந்திரன்

(கல்விப்பணிப்பாளர், மு/து/கல்விவலயம்)

அகில இலங்கை சைவர் கழகத்தைச் சேர்ந்த இவர் 1977இல் ஆசிரியராகவும் 1990 இல் கணித ஆசிரிய ஆலோசகராகவும் 1993 இல் அதிபராகவும் 1999 இல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் 2001இல் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் உயர்வு பெற்று கல்விச்சேவையில் 25 வருடங்கள் பூர்த்தி செய்து வெள்ளிவிழா காணும் நற்குணமும் நற்பண்பும் உள்ள சிறந்த கல்விமானைப் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

(22441) (26-11-13-32) அகில இலங்கை சைவர் கழகம்.


## விசேட பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாகிகளுக்கான விசேட பயிற்சி நெறி எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைகளின் கீழ் செயற்படும் நிர்வாகிகள் மட்டுமே இப் பயிற்சி நெறியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதால் அவர்கள் தொடர்பான விவரங்களை அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சி உதவியாளர்களை அபிவிருத்திக்கான கழக நிறுவனத்தின் (SOND) நிறைவேற்றுப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பயிற்சிநெறியில் கலந்துகொள்வோருக்கு உணவு, தங்குமிட வசதி மற்றும் போக்குவரத்துச் செலவு ஆகியன வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10-185)


### தேவை
### DEUTSH GERMAN

ஜேர்மன் (DEUTSH GERMAN) மொழி கற்பிப்பதற்கு ஆசிரியர்/ஆசிரியை தேவை.

தொடர்பு:

**பிள்ளைகள் இல்லம்**
**மானிப்பாய்.**

தொலைபேசி: 222 3204.



யாழ். நகரில்!

மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா

# KUMARAN PHARMACY

மேற்படி Pharmacy இன்று (10.09.2003) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படுகின்றது. இங்கு அனைத்து மருந்துப் பொருள்கள், பால்மா வகைகள் மற்றும் குழந்தைகளுக்கான பராமரிப்புப் பொருள்கள், அழகு சாதனப் பொருள்கள் அனைத்தையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் Baur & Co Ltd. இன் வடமாகாண ஏக விநியோகஸ்தர்களான NEELAN PHARMACEUTICALS (PVT) Ltd. இன் இணைந்த சேவை.

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

## குமரன் பார்மஸி

அன்பர்கள். நண்பர்கள். வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

KUMARAN PHARMACY

(சாமுவேல் அன் சன்ஸ் கட்டட அருகாக)

பஸ் நிலையம் முன்பாக
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.




UTHAYAN Graphics (22432)



வனிலா சுவையூட்டப்பட்டது

Action
Nutritional Food Drink

போஷாக்கு நிறைந்த பானம்







450 கிராம் ரூ.380/=

ஒவ்வொரு 100g *Action* ஆனது பின்வரும் போஷணைகளை வழங்குகின்றது

| | | |
|---|---|---|
| சக்தி | 383.82 | Kcal |
| புரதம் | 20.9 | g |
| கொழுப்பு | 6.6 | g |
| காபோவைதரேற்று | 63 | g |
| மினரல் ஆஷ்(Ash) | 4 | g |
| ஈரப்பற்று | 4 | g |
| **கனியுப்புக்கள்** | | |
| கல்சியம் | 1200 | mg |
| பொசுபரசு | 624 | mg |
| மகனீசியம் | 74.85 | mg |
| சோடியம் | 348 | mg |
| பொற்றாசியம் | 1025 | mg |
| குளோரைட்டு | 633 | mg |
| நாகம் | 15 | mg |
| இரும்பு | 15 | mg |
| செப்பு | 1.5 | mg |
| மங்கனீசு | 2 | mg |
| அயடீன் | 100 | mcg |
| **விற்றமின்கள்** | | |
| விற்றமின் A | 2500 | iu |
| விற்றமின் D | 100 | iu |
| விற்றமின் E | 10 | Iu |
| விற்றமின் K1 | 60 | mcg |
| விற்றமின் C | 100 | mg |
| விற்றமின் B1 | 2.2 | mg |
| விற்றமின் B2 | 2.2 | mg |
| விற்றமின் B6 | 2 | mg |
| விற்றமின் B12 | 2.5 | mcg |
| நயசினமைட் | 22 | mg |
| பன்டோதனிக்கமிலம் | 10 | mg |
| போலிக்கமிலம் | 200 | mcg |
| பயோடின் | 100 | mcg |
| பீற்றா கரோட்டின் | 1 | mg |

*Action* இன் போஷனை அனுகூலங்கள்

*Action* ஆனது 11 கனியுப்புக்கள், 13 விட்டமின்கள், புரதம், காபோவைதிரேற்று, கொழுப்பு அடங்கலாக 27 அத்தியாவசிய போஷணை பதார்த்தங்களை முழுக்குடும்பத்திற்கும் (1 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள்) வழங்குகின்றது. *Action* பீற்றா கரோட்டினையும் கொண்டுள்ளது.

தயாரிக்கும் முறை

சூடாகவோ குளிர்பானமாகவோ நீங்கள் விரும்பியவாறு பருகலாம்

1) நிரம்பிய இரண்டு கரண்டிகள் *Action* இனை 240ml டம்ளரில் போடவும்.
2) அதற்கு சிறிதளவு இளம் சூடான நீர் சேர்த்து கலக்கவும்.
3) மேலதிக நீர் சூடாகவோ, குளிராகவோ தேவையான அளவு சேர்த்து சுவையான பானத்தை தயாரித்துக் கொள்ளவும்.

Manufactured by :
Astron Limited,
388, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741 Fax: 2636173 E-mail: astron@astron.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராணுவத்தினரின் பிடியிலுள்ள

# அலுவலகக் கட்டடத்தை விடுவித்துத் தர வீதி அபிவிருத்தி அதிகாரசபை கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.10

குருநகரில் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அடங்கியுள்ள தமது அலுவலகக் கட்டடத்தை இராணுவத்தினரின் பிடியிலிருந்து விடுவித்துத் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கை தொடர்பாக இராணுவ உயர்பீடத்துக்கும் அதிகாரசபை கடிதம் அனுப்பியுள்ளது.

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகக் கட்டடம் 1995 ஆம் ஆண்டுமுதல் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு எல்லைக்குள் உள்ளது.

இதனால் ஐயனார் கோயில் வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றிலேயே அதிகாரசபை தற்காலிகமாக இயங்கிவருகின்றது.

எனினும், கட்டட உரிமையாளர்கள் தற்போது இந்த அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு வேண்டியுள்ளார்கள்.

அலுவலகத்தை மாற்றுவதற்கு இடமின்றி அவதியுறும் நிலைக்கு அதிகாரசபை தள்ளப்பட்டுள்ளது. இதனால், அலுவலகச் செயற்பாடுகள் முடங்கும் நிலை உருவாகியுள்ளது.

இவற்றைச் சுட்டிக்காட்டி யாழ். அரச அதிபர் மற்றும் படை உயரதிகாரிகள் முதலானோருக்கு வீதி அபிவிருத்திச் சபையினர் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் தமது பழைய அலுவலகம் இருக்கும் இடத்தை மீண்டும் பெற்றுத்தருமாறும் உயர் பாதுகாப்பு வலயத்தைக் காரணம் காட்டி தமது பணிகளை முடக்க வேண்டாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-12)

## கால்நடைகளுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ். கால்நடை வைத்திய பணிமனையில் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி இலவசமாக ஏற்றப்படுகின்றது.

தடுப்பூசி ஏற்றவிரும்புவோர் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத்தில் இயங்கும் அரச கால்நடை வைத்திய பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு அதன் அதிகாரி டாக்டர் திருமதி வ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை -

கொழும்புத்துறை, நாவாந்துறை பிரதேசங்களில் கோழிகளுக்கு அம்மைநோய் பரவி வருவதனால் அது பற்றிய மேலதிக விவரங்களுக்கு கோழிப்பண்ணையாளர்கள் தம்முடன் தொடர்புகொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## அஞ்சல் சேவை தொடர்பாக பாடசாலைகளில் கருத்தரங்கு

### சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டுப் பாடசாலைகளில் அஞ்சல் சேவை தொடர்பான கருத்தரங்குகள் இடம்பெற்றுவருகின்றன.

யாழ். பிராந்திய உதவி அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் தலைமையில் இந்தக் கருத்தரங்குகள் ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

அடுத்த வாரம் கொக்குவில் இந்துக்கல்லூரி, தாவடி இந்துக் கல்லூரி, கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை முதலானவற்றில் இக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

'மக்களுக்கான அஞ்சல் சேவை' என்னும் தொனிப் பொருளிலேயே இந்தக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

"பாடசாலை அதிபர்களின் வேண்டுதலின்பேரிலேயே இக்கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் அஞ்சல் சேவையின் முழுமையான விவரங்கள் மாணவர்களுக்கு விளக்கப்படுகின்றது" என்று எஸ்.சிவராஜசிங்கம் தெரிவித்தார். (ம-12)

# இலங்கையுடனான உறவுகளை வளர்ப்பதில் அமெரிக்கா ஆர்வம்

### அந்நாட்டு பிரதி அமைச்சர் தெரிவிப்பு

வாஷிங்ரன்,செப்.10

இலங்கையுடனான உறவுகளை மேலும் வளர்த்துக்கொள்வதில் அமெரிகா அதிக நாட்டம் காட்டி வருகின்றது என்று அதன் வெளிவிவகார பிரதி அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான புதிய அமெரிக்கத் தூதர் ஜெப்ரி ஜே.லன்ஸ்டெட்டின் பதவியேற்பு வைபவத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இதுவரை காலமும் இலங்கையில் இரத்த ஆறு ஓடியதால் இலங்கையுடன் உறவுகளை வளர்ப்பதில் அமெரிக்கா ஓரளவு ஒதுங்கியே நின்றது. தற்போது நிரந்தர சமாதானத்திற்கான நடவடிக்கைகள் தொடர்வதாலும் வெளிநாட்டு உறவுகளை வளர்ப்பதிலும் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும் நாட்டமுள்ள அரசாங்கம் பதவியில் இருப்பதாலும் இலங்கையுடன் உறவுகளை வளர்த்துக்கொள்ள அமெரிக்கா விரும்புகின்றது.

இலங்கை ஓர் அழகான நாடு. அதன் மக்கள் தாராள மனப்பான்மை உடையவர்கள். இப்போது நாட்டின் சரித்திரத்தில் ஒரு முக்கிய நிகழ்வு இடம்பெறுகின்றது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைபெற்ற வன்முறைகளால் இலங்கையில் ஏராளமானோர் கொல்லப்பட்டார்கள். நாடு பாரிய இழப்புகளைச் சந்தித்தது. ஆயினும், 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், யுத்தத்தில் ஈடுபட்ட இருதரப்பினரும் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்கள். அன்றிலிருந்து இன்றுவரை ஒளிமயமான ஓர் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கான கடினமான முயற்சியில் இருதரப்பினரும் ஈடுபட்டு வருகின்றார்கள் எனவும் ஆர்மிடேஜ் தெரிவித்தார்.



புதிதாக நியமிக்கப்பட்ட அமெரிக்கத் தூதர் ஜெப்ரி ஜே.லன்ஸ்ரெட் தமிழ்மொழியையும் கற்றுள்ளார் என்றும் அவர் கூறினார். (ம)

# யாழ். குடாநாட்டில் கனரக வாகனங்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை

### அதற்காக சாரதி பயிற்சிக் கல்லூரி நிறுவவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.10

கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரத்தை யாழ்ப்பாணத்திலேயே வழங்குவதற்கான முன்னோடி நடவடிக்கையாகக் குடாநாட்டில் இந்தமாத இறுதிக்குள் சாரதி பயிற்சிக் கல்லூரி ஒன்று நிறுவப்படவுள்ளது.

யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை தாமதமாவது குறித்து கேட்கப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முதல்தர சாரதி பயிற்சிக் கல்லூரி ஒன்றை குடாநாட்டில் அமைப்பதற்கு கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அனுமதி அளித்துள்ளது.

இதன் பிரகாரம் ஆனைக்கோட்டையில் 'சாரிகா பயிற்சிக் கல்லூரி' என்னும் பெயரில் சாரதி பயிற்சிக் கல்லூரி ஒன்று நிறுவப்படவுள்ளது.

இங்கு பயிற்சிபெறும் சாரதிப் பயிற்சியாளர்களை உடற்பரிசோதனைக்குட்படுத்தி சான்றிதழ் வழங்க ஒரு வைத்தியரை நியமிப்பதே தற்போது எதிர்நோக்கும் சிக்கல்.

இதற்கான அனுமதியைப் பெற்றபின் விரைவில் இங்கு கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

இந்நடவடிக்கை இம்மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படவுள்ளது.

- எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-12)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் ஜேர்மன் நிறுவன உதவியில் அபிவிருத்தி

கடந்த இரு தசாப்தங்களாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக, மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட களுவாஞ்சிக்குடி, பட்டிப்பளை, வெல்லாவெளி ஆகிய பிரதேசங்கள் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கான ஆய்வு நடவடிக்கைகளை நிறுவன அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர் நடைபெற்ற காலங்களில் இப்பிரதேசங்கள் மிகவும் பாதிக்கப்பட்டன. இன்றுவரை இப்பிரதேசங்களில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனைக் கருத்திற்கொண்டு மிகவும் பின்தங்கிய இப்பகுதிகளில் கல்வி, சுகாதாரம் மின்சாரம், நீர்ப்பாசனம் உட்பட மக்களின் அடிப்படைத் தேவைகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் நிறைவுசெய்யவுள்ளது.

இது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் வெல்லாவெளி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறுவன அதிகாரி செல்வி மெலோனி, திட்ட முகாமையாளர் கே.தேவராஜா உட்பட பல அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ம)

# அரசியலில்....

'அப்ப எப்படி' என்ற தலைப்பில் ஞாயிறு 'லங்காதீப'வில் வெளியான அரசியல்வாதிகளின் கருத்துக்களை இங்கே தொகுத்துத் தருகிறோம்.

### அனுரகுமார திஸாநாயக்க ஜே.வி.பி.



இடைக்கால நிர்வாகத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தும் ஜே.வி.பி., அரசாங்கத்தை எதிர்த்து மேலும் பல ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவுள்ளது என ஜே.வி.பியின் நியமன உறுப்பினர் அனுர திஸாநாயக்க தொிவிக்கிறார்.

★ பாதயாத்திரை வெற்றியடைநததா?

❒ நினைத்ததைவிட வெற்றி கிட்டியுள்ளது. அரசின் பொய் புரட்டுக்களை மக்கள் தற்போது நன்கு அறிந்துள்ளனர்.

★ அடுத்து என்ன திட்டம்?

❒ சகல மட்டங்களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம்.

★ இவ்வளவு தூரம் ஏன் எதிர்க்கிறீர்கள்?

❒ அரசை விழ்த்தும்வரை எமது போராட்டம் ஓயாது.

★ எப்போது அரசை விழ்த்த உத்தேசம்?

❒ அது மிகவும் விரைவில்.

★ அதன் பின்னர் என்ன நடக்கும்?

❒ நாட்டை நேசிக்கும் 'தேசப்பிரேமிகளின்' அரசு அமையும்.

★ அரசு அபிவிருத்திப் பொதிகளை முன்வைக்கவுள்ளது. எனவே, நீங்கள் நினைத்துள்ளதை செயற்படுவது கடினம்?

❒ எமது பாதயாத்திரை அழுத்கமவை அடைந்தபோது அரசுக்குக் காய்ச்சல் உண்டானது. இவைகள் அபிவிருத்தி அல்ல. காய்ச்சல் காரணமாக ஏற்பட்ட நடுக்கம்.

★ உங்களது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை பிரபாகரனும் அவதானித்தவாறு இருக்கிறார் அல்லவா?

❒ அவர் பல விடயங்களை அவதானித்துக்கொண்டுதான் இருக்கிறார். மரங்கொத்தி மரங்களைக் கொத்துகிறது. சரியான இடத்தில் கொத்தும் நாளை எதிர்பார்க்கலாம்.

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



அடுத்த மாதத்திலிருந்து ஆயிரத்து 800 கோடி ரூபாவில் பாரிய கிராம அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும், அப்போது அரசை எதிர்த்துப் பிரசாரங்களை மேற்கொள்ள எதிர்க்கட்சிகளுக்கு முடியாத நிலை ஏற்படும் எனவும் கிராமியப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

★ அரசு ஆட்சிக்கு வந்து 2ஆண்டுகளை நெருங்குகிறது. எப்போதும் நாட்டை அபிவிருத்தி செய்வதாகக் கூறுகிறீர்களே?

❒ அழிந்துபோன நாட்டை எடுத்த எடுப்பில் கட்டியெழுப்ப முடியாது. அதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு அதன்படி செயலாற்ற வேண்டும்.

★ தற்போது அவ்வாறான திட்டங்கள் உள்ளனவா?

❒ அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து பாருங்களேன் வேலைகளை.

★ இவை ஒன்றும் சரிவராத வேலைகள் என எதிர்க்கட்சியினர் கூறுகின்றனரே?

❒ எதிர்க்கட்சிகள் அப்படிக்கூறி மகிழ்ச்சியடைவது நல்லது. அவர்கள் அனைத்தையும் தூர்க்குறியுடனேயே பார்க்கின்றனர்.

★ பொருளாதாரம் அபிவிருத்தியடைந்துள்ளதாக நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் அப்படித் தெரியவில்லையே?

❒ நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது. கட்டடங்கள் கட்டப்படுகின்றன. உல்லாசப் பயணத்துறை மேம்பட்டுள்ளது. ரூபாவின் மதிப்புக் குறையவில்லை. வட்டி வீதம் குறைந்துவிட்டது.

★ போதும்! போதும்! என்றாலும் மக்களிடம் பணமில்லையே?

❒ நாங்கள் விரைவில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவுள்ளோம்.

### டக்ளஸ் தேவானந்தா



வடபகுதிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முக்கிய அரசியல் கட்சிகள் இரண்டும் இணைந்து செயற்படவேண்டும் எனத் தெரிவிக்கும் ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து வடபகுதி மக்களை காப்பாற்றும் போரில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கிறார்.

★ தங்களின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் எவ்வாறானவை?

❒ வடக்கில் ஜனநாயக அரசியல் வழிமுறைகளை உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அதற்கான போராட்டத்தை நாம் கைவிடவில்லை.

★ பயனேதும் உள்ளனவா?

❒ ஆம். புலிகளின் பாஸிச நடவடிக்கை குறித்து உலகிற்கு எடுத்துக் கூறுகிறோம். எமது இந்த நடவடிக்கை காரணமாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளன.

★ புலிகளின் வன்முறைகள் குறையவில்லை?

❒ குறையவில்லை. புலிகள் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு வந்து எமது கட்சியினர், பொதுமக்கள் ஆகியோரைக் கொல்கின்றனர். புரிந்துணர்வு உடன்படிக்கை பயனற்றதாகிவிட்டது.

★ போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடவில்லையா?

❒ முறையிட்டோம். அவர்கள் செயலற்றவர்களாக உள்ளனர்.

★ புலிகளுக்கு எதிராக இப்படிச் செயற்படும்போது பயமேதும் இல்லையா?

❒ நாங்கள் பனங்காட்டு நரிகள். எமக்குப் பயம் இல்லை. வடபகுதி மக்களைப் புலிகளின் பாஸிசவாத நடவடிக்கைகளிலிருந்து காப்பாற்றும் வரை நாங்கள் போராட்டத்தைக் கைவிடமாட்டோம்.

- தொகுப்பு : கஜனி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்க அணியின் தடுமாற்றத்தால் இங்கிலாந்து 9விக்கெட்டுகளால் வெற்றி!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி ஒன்பது விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக மார்க்கஸ் ட்ரெஸ்கொதிக்கும், தொடரின் சிறப்பாட்டக்காரர்களாக பிளின்டொவ், கிறேம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, 69.2ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 299 ஓட்டங்களுடன் சுருண்டது.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சை முதலில் நிதானமாகக் கவனித்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, பின்னர் தடம் புரண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஸ்மித் எல்.பி.டபிள்யூ முறையில் 19 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து 9ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கிப்ஸ் ஆட்டமிழந்ததும் தென்னாபிரிக்க அணி ஆட்டம் காணத் தொடங்கியது.

எனினும், கலிஸ், மெக்கன்ஸி, பொலொக் ஆகியோர் நிதானமாகத் துடுப்பெடுத்தாடியதால் அணியின் ஓட்ட எண்ணிக்கை 229 ஆக உயர்ந்தது.

இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை மாத்திரமே இழந்து வெற்றி இலக்கை இலகுவாக எட்டியது.

ஆட்டமுடிவின்போது, ட்ரெஸ்கொதிக் ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும், புட்சர் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். வோகன் 13 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் கைல்ஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இரண்டாவது இன்னிங்ஸில், இங்கிலாந்து அணி சார்பில் ஹார்மிஸன், பிக்னெல் ஆகியோர் தலா 4விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தனர்.

இந்தப் போட்டியை இங்கிலாந்து வென்றதன் மூலம், 5போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடர்2-2 விகிதத்தில் சமநிலையில் முடிவுற்றது.

(ம)

# சிங்கப்பூர் மெய்வன்மைப் போட்டிகளில் இலங்கைக்கு இரு தங்கப் பதக்கங்கள்

சிங்கப்பூரின் 65ஆவது பகிரங்க மெய்வன்மைப் போட்டிகளில் இலஙகை மெய்வல்லுநர்கள் இரு தங்கப்பதக்கங்களையும், 4 வெள்ளிப் பதக்கங்களையும் வென்றனர்.

செப்ரெம்பர் 6, 7ஆம் திகதிகளில் இப்போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டிகளில் இலங்கை வீரர் நிஷாந்தவும், இலங்கை வீராங்கனை விமல் சந்ராணியும் முறையே ஆண், பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்றனர். இவ்விருவரும் 1,500 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கங்களையும் வென்றனர்.

இலங்கை அணியின் தலைவியான ஸ்ரீயானி குலவன்ஸ 100 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தை வென்றார். ஆசியாவின் முதல்நிலை வீராங்கனையான தாய்லாந்தின் ரொபர்ட் ட்ரேசியா இப்போட்டியில் தங்கப்பதக்கத்தை பெற்றார்.

(ம)

# இந்தியாவை வெல்வது கடினம் ஆஸி.வீரர் பிரெட்லி கூறுகிறார்

இந்தியாவை வீழ்த்துவது என்பது கடினமானது என்று ஆஸ்திரேலிய அதிவேகப்பந்து வீச்சாளரான பிரட்லீ தெரிவித்துள்ளார்.

இவ்வருட இறுதியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு செல்லவுள்ளது. இது குறித்து பிரட்லீ கூறுகையில்:-

இந்தியாவை வீழ்த்துவது என்பது எப்போதுமே கடினமானது. தற்போது ஆஸ்திரேலிய அணியில் சிறப்பான வேகப்பந்து வீச்சு உள்ளது. அன்டிபிக்ஸல் அணிக்குள் நுழைந்துள்ளார்.

நல்லமுறையில் முன்னேறியும் வருகிறார். கிலெப்ஸி, மெக்ராத் ஆகியோரும் மிகச்சிறப்பாக பந்து வீசி வருகின்றனர் - என்று கூறினார்.

இந்தியா, நியூஸிலாந்து அணிகளுக்கிடையேயான டெஸ்ட் தொடர் முடிந்ததும் மூன்றாவது அணியாக ஆஸ்திரேலியா கலந்துகொள்ளும் முத்தரப்புத் தொடர் நடைபெறவுள்ளது.

இது குறித்து பிரட்லீ கூறுகையில்,

"நான்காவது முறையாக நான் இந்தியா வரவுள்ளேன். இதற்கு முன்பு கனிஷ்ட அணியுடன்தான் இந்தியாவுக்கு வந்துள்ளேன். இந்த முறை மட்டுமே சிரேஷ்ட அணியுடன் வரவுள்ளேன்" - என்று கூறினார்.

19வயதுக்குட்பட்ட ஆஸ்திரேலிய அணியுடன் 1994 இல் முதன் முதலாக பிரட்லீ இந்தியாவுக்குச் சென்றிருந்தார்.

மைதானத்தில் அநாகரிகமாக நடந்து கொள்ளும் சர்ச்சையில் ஆஸி வீரர்கள் சிக்கி இருப்பது குறித்து பிரட்லி கூறுகையில்:

"இந்திய அணி வீரர்களுக்கும் எனக்குமிடையே நல்ல உறவு உள்ளது. சச்சின், திராவிட், கங்குலி போன்ற உலக தரமிக்க வீரர்களுக்கு எதிராக விளையாடுவது என்பது திரில்லான ஒன்றாகும் . இந்திய அணியின் முன்னணி ஆறு வீரர்கள் சர்வதேச தரம் மிக்கவர்கள்.

"எனவே இந்தத் தொடரானது மிகவும் சவாலான தொடராகும் என்று கூறிய பிரட்லீ உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் பெற்ற தோல்வியை இந்தியா மறந்திருக்காது என்றும் இதற்குப் பழிவாங்க துடித்துக்கொண்டிருக்கும்" என்றும் கூறினார்.

# நடிகர்கள்-வீரர்கள் பங்கேற்ற கிரிக்கெட்: "கங்குலி லெவன்" அணிக்கு வெற்றி!

இந்தியாவில் நடிகர்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்ற கண்காட்சிக் கிரிக்கெட் போட்டியில் கங்குலி லெவன் அணி 33ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிரஞ்சீவி லெவன் அணியை தோற்கடித்தது.

இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் மற்றும் தெலுங்குத் திரைப்பட நடிகர்கள் பங்கேற்ற கண்காட்சி கிரிக்கெட்போட்டி ஆந்திர மாநிலத்தின் விசாகப்பட்டினத்தில் அண்மையில் நடந்தது.

இதில் ஒரு அணிக்கு கங்குலி தலைவராக இருந்தார். இந்த அணியில் நடிகர்கள் நாகார்ஜுனா (உப தலைவர்), வெங்கடேஸ் மற்றும் வினோத் காம்ப்ளி, அகர்கார், தினேஸ் மொங்கியா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

மற்றொரு அணிக்கு நடிகர் சிரஞ்சீவி தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்த அணியில் டெண்டுல்கர், வி.வி.எஸ் லக்ஸ்மன் , ஹர்பஜன்சிங், பகஹுதுலே, பார்த்தீவ் பட்டேல், நடிகர்கள் தருண், ஸ்ரீகாந் ஆகியோர் இடம் பிடித்திருந்தனர்.

இதில் முதலில் ஆடிய கங்குலி லெவன் அணி 38.3 ஓவரில் 283 ஓடடங்கள் எடுத்து சகல விக்கட்டுக்களையும் இழந்தது. அதிகபட்சமாக அகர்கார் 89 ஓட்டங்களை எடுத்தார்.

இதில் 9பௌண்டரிகள், 6சிக்ஸர்களும் அடங்கும். தினேஷ் மொங்கியா 72 ஓட்டங்களும், காமப்ளி 43ஓட்டங்களும் எடுத்தனர்.

284ஓட்டங்கள் என்ற இலக்குடன் பின்னர் ஆடி சிரஞ்சீவி லெவன் அணி 41.3 ஓவரில் 250 ஓட்டங்களுடன் சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் கங்குலி லெவன் அணி 33ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக டெண்டுல்கர் 67 ஓட்டங்களும், பார்த்தீவ் பட்டேல் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களும் ,ராயுடு 37 ஓட்டங்களும், வி.வி.எஸ். லக்ஸ்மன 31 ஓட்டங்களும் எடுத்தனர். கங்குலி லெவன் தரப்பில் தினேஸ் மொங்கியா, மதுர்க்கா ஆகியோர் தலா 3 விக்கட்டுக்களை வீழ்த்தினர். காம்ப்ளி 2 விக்கெட்டை கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக தினேஸ் மொங்கியா தேர்வுசெய்யப்பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக டெண்டுல்கரும், அதிரடி ஆட்டக்காரராக அகர்காரும் தேர்வுசெய்யப்பட்டனர். சிறந்த பந்து வீச்சாளருக்கான விருது ஹர்பஜன் சிங்குக்கும், சிறந்த களத்தடுப்பாளருக்கான விருது நடிகர் தருணுக்கும் வழங்கப்பட்டது.

## உதைபந்தாட்டம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிகக்கு ஆரம்பமாக உள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்:-

**14 வயதுப் பிரிவு**

★ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் நவாலி மகா வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

★மாதகல் சென்யோசேப் வித்தியாலயம் எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

★ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எதிா பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்கப் பாடசாலை.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள்:-

**14 வயதுப் பிரிவு**

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

★ மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. (ம-86-152)


## தேவை

எமது நிறுவனத்தில் பணிபுரிய கீழ்வரும் தொழிற் தகைமை உடையவர்கள் தேவைப்படுகின்றனர்.

★ வெல்டர்
★ கணனியில் ரைப்செற்றிங் தெரிந்தவர்கள்
★ ஸ்கிறீன் பிறிண்டிங் தெரிந்தவர்கள்
★ பிளாஸ்ரிக் வேலை தெரிந்தவர்கள்

மேற்படி தொழிற் தகைமை உடையவர்களும் பழக விரும்புபவர்களும் இன்று (10.09.2003) புதன் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நேரில் வரவும்.

சம்பளம் 3,500 இலிருந்து...

"யசோ"
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(22446) (22-18-12-29)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

தங்கப் பவுண் சங்கிலி ஒன்று கடந்த வாரம் மீசாலையில் ஏ-9 பாதையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் கீழ்க்காணும் முகவரியில் ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

லக்ஷ்மி மல்ரி சொப்
கண்டி வீதி,
மீசாலை, சாவகச்சேர'.
(22-12-18-29) (C/30093)

உ
மகா விஷ்ணு துணை

## மங்களகரமான திறப்பு விழா

எமது அன்பு வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களின் நன்மைகருதி காங்கேசன்துறை வீதி, வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலடியில் இயங்கி வந்த

சிவன் கோயிலடி முறிவு நெரிவு வைத்தியசாலை

இன்று (10.09.2003) புதன்கிழமை காலை 9.20 (பழைய நேரம்) மணிக்கு மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தியில் சேவையைத் தொடர உள்ளமையை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (22444) (12-18-29-24) DR.T.சோமசுந்தரம் விஜயன்.

## துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மீனவர் வங்கி

## திறப்பு விழா அழைப்பு

காலம் : இன்று (10.09.2003) புதன்கிழமை
நேரம் : மு.ப. 10.30 (பு.நே.)
இடம் : துறையூர் வேலணை

### நிகழ்வுகள்

★ பொதுச் சுடரேற்றல் ★ வரவேற்புரை
★ தேசியக் கொடியேற்றல் ★ தலைமையுரை
★ அமைதி வணக்கம் ★ சிறப்பு விருந்தினர் உரை
★ அலுவலகத் திறப்பு ★ நன்றியுரை

திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-நிர்வாகம்.
(22443) (12-18-29)

## விற்பனையில்

**VCD SONG**
★ பிரியமான தோழி
★ காக்க காக்க
★ தித்திக்குதே

**AUDIO CD**
★ பக்தி இசைமாலை
★ உழைப்பாடும் தொழில் இன்றி
★ கானமூர்த்தி பஞ்சமூர்த்தி நாதஸ்வரம

New MP3

விலை 95 மட்டுமே
வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

மூர்த்தி வீடியோ
அன் எலக்ரோனிக்ஸ்
மானிப்பாய்.
(C/30092) (22-18-29)

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பணியாளர் நலன்புரிச் சங்கம் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

சங்க நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 08.09.2003 திங்கட்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது.

முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு : இல. 2494
இரண்டாம் பரிசு : இல. 11387
மூன்றாம் பரிசு : இல. 9472

ஆறுதல் பரிசுகளுக்குரிய இலக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| 7460 | 11693 | 4320 | 5423 |
| 6386 | 4775 | 8705 | 4953 |
| 7041 | 4223 | 1884 | 4397 |
| 10261 | 4510 | 6828 | 2986 |
| 3044 | 3787 | 9788 | 9711 |

எமது அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பை நடத்துவதற்கு சகலவிதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், கூட்டுறவாளர்கள், கூட்டுறவு அங்கத்தவர்கள், பணியாளர்கள் மற்றும் ஏனையோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

☛ பரிசுபெற்ற அதிர்ஷ்டசாலிகள் சிட்டைகளைச் சமர்ப்பித்து சங்கக் காரியாலயக் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்
பணியாளர் நலன்புரிச் சங்கம்.
(22447) (22-12-18-29)


## மரண அறிவித்தல்

### வைத்தியாம்பிள்ளை நீக்கிலாஸ்

(தம்பிராசா - அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டி, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது சில்லாலையில் வசித்தவருமான வைத்தியாம்பிள்ளை நீக்கிலாஸ் அவர்கள் 08.09.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மரியம்மாவின் அன்புக் கணவரும் பிலோமினாவின் சகோதரரும் விக்ரோறியாவின் மைத்துனரும் தேவதாஸ், அக்கினேஸ், றோசறிமலர், சிங்கராயர் (ஜேர்மனி), சகாயநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மாகிறேற், தேவநாயகம், மரியநாயகம், மேரி இமல்டா (ஜேர்மனி), சூசைப்பிள்ளை ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.09.2003) புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு சில்லாலையில் இருந்து அல்லைப்பிட்டிக்கு எடுத்துச்செல்லப்பட்டு புனித உத்தரிய மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ம. யோண் றாஜகுமார் (பேரன்)

'றோசறி இல்லம்',
தெற்கு ஒழுங்கை,
சில்லாலை.
(22440) (26-18-13-29)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பத்துமைல் மரதன் ஓட்டப் போட்டி

இருபாலை கிழக்கு, பாரதி கலாமன்றம் சனசமூகநிலைய 40ஆவது ஆண்டு நிறைவு, பாரதி விழாவையொட்டி நடத்தப்படும் மாபெரும் திறந்த பத்து மைல் மரதன் ஓட்டப்போட்டி 11.09.2003 வியாழன் காலை நடைபெற இருப்பதால், இதில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் அன்று காலை 6.00 மணிக்கு நிலையத்திற்கு தயாராக சமுகமளிக்கும்படி வேண்டுகின்றோம். பெறுமதிமிக்க பரிசில்கள் மாலை நிகழ்வில் வழங்கப்படும்.

அனுசரணை:
- தயா நகைப் பூங்கா
- மேசியா நகைமாடம்
- ரவி ரெயிலர்ஸ்
- மது கல்வி நிலையம்

(22448) (12-18-29)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப் படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே ! என்வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணை யான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதிற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப் பினும் எக்காரணங் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என் னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

*யாழ்ப்பாணம்.* - ஓர் அடியாள்.

(22451) (32-12-18-29)

## நினைவுப் பேருரை அழைப்பு

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபரும் பேரறிஞருமாகிய **அமரர் வி.சிவசுப்பிரமணியம்** B.A, B.Sc, PGT, FRGS, JP அவர்களின்

### 7 ஆவது ஞாபகார்த்த நினைவுப் பேருரை

காலம்: 12.09.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி
இடம்: கல்லூரி கந்தையா உபாத்தியாயர் மண்டபம்

தலைவர்
திருமிகு க.சிவாஜி (முதல்வர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**நிகழ்ச்சிகள்**

★ மங்கள விளக்கேற்றல் (அமரரின் மைந்தன் டாக்டர் சிவானந்தராசா - பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்)
★ நினைவுப் பாமாலை: திரு.சி.சிவஞானராஜா (இசையாசிரியர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
★ சிறப்புரை: திரு.சு.தம்பித்துரை B.A. Dip Edu.S.L.P.S. I (இளைப்பாறிய அதிபர்)
★ நினைவுப் பேருரை: முதறிஞர் பேராசிரியர் C.சிவஞானசுந்தரம் (நந்தி) (வாழ்நாள் பேராசிரியர், சமூக மருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

விடயம்: "அறிவின் அர்த்தங்கள்"

★ நன்றியுரை: திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் (அதிபர், இராமநாதன் கல்லூரி, அமரரின் குடும்ப உறுப்பினர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்.* (C30098) (32-12-18-29) -அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 19 - 10 - 1932



உதிர்வு 27 - 07 - 2003

### அமரர் சிவக்கொழுந்து நடராஜா

(முன்னாள் கச்சேரி லிகிதர்)
திதி:சதுர்தசி 10.09.2003

அன்பான அப்பாவே! ஆருயிரே!
எம்மைக் கண்கலங்காது காத்து வளர்த்த மாணிக்கமே!
45 ஆம் நாள் சென்றாலும் நாம் வாழும் காலம் வரை எம் நினைவில் நீங்காத இடம் கொண்ட உத்தமரே!
உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (22453) (18-12-29) -அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் பாலசரஸ்வதி (கமலினி)

தன்னைக்களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பாலசுப்பிரமணியம் பாலசரஸ்வதி நேற்று (09.09.2003) அதிகாலை அகால மரணமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம்-பரமேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வியும் வசந்தி (தட்டெழுத்தாளர்,கிளிநொச்சி உதவி அரச அதிபர் பணிமனை), டாக்டர் பவானி (யாழ்.போதனா வைத்தியசாலை), நந்தினி (பொறியியலாளர், நீர்ப்பாசனப் பயிற்சி நிறுவனம்,கல்கமுவ), சிவசங்கர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருணகிரிநாதரின் (இராமநாதபுரம்) அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (09.09.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5மணிக்கு கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*தற்காலிக முகவரி: 55/7, சபாபதி ஒழுங்கை, தலையாழி, கொக்குவில்.*
*நிரந்தர முகவரி: தன்னைக்களபூமி, காரைநகர்* (22457)
தகவல்: பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர்.

## சமய சந்நிதிகளில்

தென்மராட்சி.செப்.10

அல்லைப்பிட்டி கொக்குளபதி மூன்று முடிகருமாரி அம்மன் கோயில மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு நடைபெறும்.

கும்பாபிஷேக கிரியைகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாகும். நாளை காலை 10 மணி தொடக்கம் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (ஓ-117)

★ ★ ★

கொழும்புத்துறை, செப்.10

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று மாலை 4 மணி முதல் 7 மணிவரை விஷேட குணமாக்கல் வழிபாடு இடம்பெறும்.

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள அருட்தந்தை இக்குணமாக்கல் வழிபாட்டை நடத்தவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப்.10

கோண்டாவில் குமரகோட்டம், சித்திரைபரவர் அம்பாள் ஆலய கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 6.04 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7.26 மணிக்கு இடம்பெறும்.

எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 6 மணி முதல் பிற்பகல் 9 மணிவரை இடம்பெறும். (ஓ-9)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.10

இணுவில் ஞானவைரவர் ஆலய வருடாந்த உற்சவத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு விசேட பூசைகள் இடம்பெறவுள்ளன.

இரவு 8 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வைரவப் பெருமான் வீதியுலா வருவார்.

இரவு 9 மணிக்கு உடுவில் பாரதியார் கழகத்தினர் வழங்கும் சினிமா சமுதாயத்தை சீரபடுத்துகின்றதா, சீரழிக்கின்றதா என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும். தொடர்ந்து கலாவித்தர் சின்னமணியின் வில்லிசையும் இடம்பெறும். (ஓ-9)

## இரு விபத்துக்களில் பெண்கள் இருவர் காயம்!

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இரண்டு வீதி விபத்துக்களில் இரு பெண்கள் படுகாயமடைந்தனர்.

அரியாலை கனகரட்ணம் வீதியில் வானும், சைக்கிளும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் சென்றவரான அரியாலையைச் சேர்ந்த பகவத்சிங்கம் ஜெயகௌரி (வயது-26) என்பவர் படுகாயமடைந்தார். இவர் ஒரு ஆசிரியையாவார்.

நேற்று யாழ். இராசாவின் தோட்ட வீதியில் மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் மோதிக்கொண்ட விபத்தில் சைக்கிளில் சென்ற அத்தியடியைச் சேர்ந்த ரவிராஜ் கமலராணி (வயது-38) என்பவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-15)

## பணியாளரை மின் தாக்கியது!

தென்மராட்சிப் பகுதிக்கு 24 மணிநேர மின்சார விநியோகத்தை மேற்கொள்ளும் பொருட்டு, மின்சார இணைப்பு வேலையில் ஈடுபட்டிருந்தவரை மின்சாரம் தாக்கியது.

சாவகச்சேரிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் மின் இணைப்புப் பணியாளரான, மீசாலையைச் சேர்ந்த கந்தையா குணரட்ணம் (வயது-47) என்பவரே மின் சாரத்தாக்குதலுக்கு இலக்கானவராவார்.

மின்சாரத் தாக்குதலுக்குள்ளான அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-15)

## அமெ. தூதரக அதிகாரி வருகை

யாழ்ப்பாணத்துக்கு நான்குநாள் விஜயம் மேற்கொண்டு அமெரிக்க தூதரகத்தின் முதலாவது செயலர் ஹெடி கொய்லர் அம்மையார் நேற்று இங்கு வந்துள்ளார்.

நேற்று முற்பகல் அரச அதிபர் செபத்மநாதனைச் சந்தித்த அவர் குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்துக் கேட்டறிந்தார்.

பொது அமைப்புகள், தொண்டர் அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனும் அவர் சந்தித்து கலந்துரையாடிவருகின்றார். (ஓ-3)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை முன்னாள் ஆசிரியை
**திருமதி கமலாதேவி பூபாலசிங்கம்**
அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம். (22454) (29-12-18) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

கன்னாதிட்டியைச் சேர்ந்த எனது மருமகனாகிய சிவஞானம் கணேசன் அவர்களின் அன்புச் சகோதரி
**திருமதி பொதிகாசலம் சாந்தாராமன்** (சத்தியபாமா)
அவர்கள் நேற்று (09-09-2003) செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் எமது கண்ணீர்க் காணிக்கைகளையும் சொரிகின்றோம்.

(22458) (12-18-29)

*சுபேந்திரன் நகைத் தொழிலகம், சசிக்குமார் நகையகம், K.K.S.வீதி, சுன்னாகம்.*
*நிரந்தர முகவரி: தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.*
நல்லதம்பி, பொன்னுத்துரை குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொதிகாசலம் சாந்தாராமன் (பாமா)

யாழ்ப்பாணம், கன்னாதிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொதிகாசலம் சாந்தாராமன் நேற்று (09.09.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பிஷா ஜுவெல்லர்ஸ் சாந்தாராமனின் (சாந்தா) அன்பு மனைவியும் விட்டல், நரசிம்மன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பஞ்சரெத்தினகோபால் - இராஜம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் லெட்சுமணபிரசாத், கஸ்தூரி, தீனபந்து, காலஞ்சென்ற சம்பத் மற்றும் கௌரி, ஜானகிராமன், மோகாம்புஜம் (மோகனா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கண்ணம்மா, லோகநாயகி, பாவநாசம்சிவன், கிருஷ்ணமூர்த்தி, வேலம்மா, கணேசன், இராதா, பாலமுரளிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.09.2003) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12/34, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.* (22456) (18-13-29) தகவல்: சா.விட்டல் (மகன்).

### சபாபதி கனகசபை ஜெகநாதன்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியர் சபாபதி கனகசபை ஜெகநாதன் அவர்கள் 05.09.2003 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி கனகசபை - கண்மணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பவளமலரின் (பவளம்-முன்னாள் ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி) பாசமிகு கணவரும் சுதர்சன் (லண்டன்), சுகந்தி (ஆஸ்திரேலியா), பாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகனா (லண்டன்), நிமலன் (ஆஸ்திரேலியா), ஐங்கரநேசன் ஆகியோரின் மாமனும் விஷ்ணு (லண்டன்), திரிசூலன் (ஆஸ்திரேலியா), ஹரினி (ஆஸ்திரேலியா), அஞ்சலி, பைரவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2003) புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*92/6, திருவள்ளுவர் லேன், அரசடி றோட், கந்தர்மடம்.* (22433)(29-13-18) தகவல்: சுதர்சன் (மகன்)

### திருமதி கந்தையா இலட்சுமி

காரைநகர், வெடியரசன் வீதியைச் சேர்ந்த திருமதி கந்தையா இலட்சுமி அவர்கள் நேற்று (09.09.2003) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் நடராசா (காணிப் பதிவகம் கச்சேரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும் கேசவன் (ஆசிரியர், யாழ்/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), யனுஸ்யா (IIS, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2003) புதன்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெடியரசன் வீதி, காரைநகர்.* (22449) (18-13-29) தகவல்: க.நடராசா (மகன்)

### திருமதி கந்தையா நகுலேஸ்வரி

கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி க.நகுலேஸ்வரி அவர்கள் 07.09.2003 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகேசு - காலஞ்சென்ற பரமவல்லி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கந்தையாவின் அன்பு மனைவியும் மங்கையர்க்கரசி (சு.வை. அ.ப.தெல்லிப்பழை), மனோன்மணி (நாவலர் வித்தியாசாலை), விக்கினேஸ்வரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மகேஸ்வரி (கிளை முகாமையாளர், துணுக்காய்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவீந்திரன் (வலி. வடக்கு பிரதேச சபை), தனவீரசிங்கம், அனுஷா, கிருபாகரன் ஆகியோரின அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சற்குணலிங்கம், அமிர்தலிங்கம், சண்முகலிங்கம், இராசேஸ்வரி, மங்களேஸ்வரி, பஞ்சலிங்கம், விநாயகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிவேதிகா, துளசிகா, ஆதவன், வைதேகி, வேந்தன், கவிதரன், தரணியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2003) புதன்கிழமை பி.ப. 1 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(22455) (18-13-29) தகவல்: மா.கந்தையா (கணவர்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு பூரண ஆதரவு என்கிறார் மலேசியப் பிரதமர்

கொழும்பு,செப்.10

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தம்மால் இயன்றளவு பூரண ஆதரவை வழங்குவதாக மலேசியப் பிரதமர் மொஹமட், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.

மலேசியாவிற்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நண்பகல் மலேசியப் பிரதமரின் அலுவலகத்தில் பிரதமர் மொஹமட்டை சந்தித்து சுமார் ஒரு மணிநேரம் கலந்துரையாடினார்.

இதன் போதே மலேசியப் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் நேற்றுக்காலை கோலாலம்பூர் விமான நிலையத்தைச் சென்றடைந்தார். மலேசியப் பிரதமரின் அலுவலக பிரதிப் பிரதமர் எம்.கெவியாஸ் அங்கு பிரதமர் ரணிலை வரவேற்றார்.

விமான நிலையத்திலிருந்து பிரதமரும் அவரது குழுவினரும் கார் பவனியில் ஷெங்கிரிலா ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மலேசியப் பிரதமருடனான சந்திப்பின் போது இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கினார். உல்லாசப் பயணத்துறை, பெற்றோலிய உற்பத்தி, மின்சாரம், கைத்தொழில், தகவல் தொழில்நுட்பம், கல்வி, உயர் கல்வி போன்ற விடயங்கள் குறித்து இரு நாட்டுப் பிரதமர்களும் விரிவாக ஆராய்ந்தனர்.

இங்கு மலேசியப் பிரதமர் மேலும் தெரிவிக்கையில்:-

பிராந்திய நாடுகள் சகல துறைகளிலும் பரஸ்பர ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டு நாடுகளின் அபிவிருத்தியில் இது அவசியமானது - என்று கூறினார்.

இதற்கு முன்னர் நேற்றுக்காலை தன்னைச் சந்தித்த மலேசியப் பாதுகாப்பு அமைச்சருடன், மலேசியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஏற்படுத்துவது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆராய்ந்தார்.

**மலேசிய ஆயுதப் படைகளின் நவீனமயம் பற்றி அறிவதில் பிரதமர் ரணில்** ஆர்வம் காட்டினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மலேசிய பாதுகாப்பு அமைச்சர் அப்துல் றஸாக் இலங்கைப் பிரதமருடன் நடத்திய பேச்சுக்களில் பாதுகாப்பு ஒத்துழைப்பு விடயம் இடம்பெற்றதாக ஏஜென்சி செய்தி நிறுவன செய்தியொன்று தெரிவித்தது.

இலங்கையில் 18 மாதங்களாகப் போர்நிறுத்தம் இரு தரப்பினராலும் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த பிரதமர் ரணில், சமாதான முயற்சியில் நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்று மலேசியப் பாதுகாப்பு அமைச்சர் பின்னர் நிருபர்களிடம் கூறினார்.

இதையடுத்து பிரதமர் அந்நாட்டு வேலைத்துறை அமைச்சர் தத்தோ சாமிவேலுவைச் சந்தித்தார்.

கொழும்பு-கண்டி அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு-கண்டி மாற்று நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் தொடர்பாக நவம்பர் மாதமளவில் இலங்கைக்கு அறிக்கை ஒன்றை அனுப்பிவைப்பதாக அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.



பிரதமர் ரணிலை வரவேற்கும் மலேசியப் பிரதமர் மகதீர் மொஹமட்.

---

## அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவை குறித்து ஆராயப்படும் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும், பேர்னாட் குணதிலக்கவுக்கும், புலித்தேவனுக்குமிடையே பேச்சு எதுவும் இடம்பெறாது எனவும், சுவிற்ஸர்லாந்து மாநாட்டில் பங்குபற்றுவதற்கு மட்டுமே பேர்னாட் குணதிலக்க அங்கு சென்றார் எனவும் சமாதானச் செயலகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

---

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது புலிகள் தரப்பின் இந்த விசனம் கண்காணிப்புக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் உள்ள சமாதானச் செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இந்த விவகாரம் குறித்து கண்காணிப்புக் குழுவின் முன்னாள் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது என்றும் -

இது தொடர்பாக இன்று வரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் - விடுதலைப் புலிகள் அப்போது சுட்டிக்காட்டியுள்ளனர். (ஓ-3)

---

## சந்நிதி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் பரபரப்பையும், பேரதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. எதிர்கால விபரீதங்களுக்கு இதுவொரு துர்க்குறியோ என்று பலரும் தங்களுக்குள் அச்சம் தெரிவித்துப் பேசிக் கொண்டனர்.

நேற்றுக்காலை சுவாமி கட்டுத் தேரில் வீதியுலா வந்துகொண்டிருந்த சமயம் பின் வீதியில் இச்சம்பவம் நிகழ்ந்தது.தேர் குடை சாய்ந்து பின் வீதி சுவர் ஒன்றை அண்டிச் சரிந்தது. பக்தர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதாகத் தகவல் ஏதுமில்லை.

அன்னதானக்கந்தன் என்று போற்றப்படும் செல்வச்சந்நிதி உயர்ந்த சித்திரத் தேரைக் கொண்டிருந்த பெருமையை உடையது. ஆனால், 1986 வன்செயல்களின் போது அத்தேர் உட்பட கோயிலின் பல பகுதிகள் சீருடையினரால் தீயிட்டு எரிக்கப்பட்டன.

அதன் பின்னர்,கட்டுத்தேரிலேயே சந்நிதி முருகன் வீதியுலா வருவது வழமை.

இம்முறை கட்டுத்தேரை கட்டுவதில் தவறு ஏதும் நேர்ந்திருக்கலாம என்றும் அல்லது தேரை இரண்டு பக்கங்களில் இருந்து இழுத்த சமயம் ஏற்பட்ட முரண் நிலையால் அது சரிந்திருக்கலாம் என்றும் இருவேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

(ஓ-3-15-86-173)

---

## சத்துருக்கொண்டான்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 2மணிக்கு பிரதான நிகழ்வு ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வின் தமிழீழத் தேசியக்கொடியினை மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும் பொது ஈகச்சுடரினை மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பிறேமினியும் ஏற்றினர்.

அதனைத் தொடர்ந்து நினைவுரைகளும் பேரணியும் இடம்பெற்றன. சத்துருக்கொண்டானின் நாற்சந்திகளிலிருந்தும் அப்பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக் கணக்கான மக்கள பேரணியாக மலர்வளையங்களைத் தாங்கியவாறு படுகொலை செய்யப்பட்ட 184 அப்பாவிமக்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியை வந்தடைந்தனர்.

அங்கு மலர் வணக்கம் இடம் பெற்றதைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், மட்டக்களப்பு அருட் தந்தை சில்வெஸ்ரர், மட்டு -அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் மட்டு -அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் நிஷாம் ஆகியோா நினைவுரைகளை ஆற்றினர்.(ஓ-5-9)

---

## இனி நடக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்கள், அரசியல் பிரச்சினை உட்பட முக்கிய விவகாரங்கள் குறித்து நாங்கள் இரு தரப்பினரும் பேச வேண்டியிருக்கும். அதனால், அப்பேச்சுக்கள், முன்னையவற்றை விட மிக மிகக் கடினமாக அமையலாம். அத்தோடு அக்காரணத்தினால் அவை மேலும் இரண்டொரு தடவைகள் இடைநடுவில் முறிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் செபரெம்பரிலோ அல்லது ஒக்ரோபரிலோ மீண்டும் ஆரம்பமாகும் என்று இப்போதே திட்டவட்டமாகக் கூறிவிட முடியாது. எனினும், பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்பதை மட்டும் குறிப்பிட முடியும்.

இருபது வருடகால கொடூர யுத்தத்திலிருந்து மீண்டும் நாம் தீர்வு ஒன்றைக் காண வேண்டிய நிலையில் இருக்கின்றோம். எனவே, இதற்கு நீண்டகாலம் செல்லலாம். காலதாமதம ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் - என்றும் பிரதமர் அங்கு குறிப்பிட்டார்.

"அமைதி முயற்சிகள் நடைபெறும இக்காலகட்டத்தில் தங்கள் காவல் துறையின் நடுவப் பணியகத்தைத் திறந்து வைத்தல் போன்ற ஆத்திரமூட்டும் செயல்களில் புலிகள் ஈடுபடுகின்றனரே?" - என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார். "இது போன்ற பல விடயங்களுக்கு நாங்கள் பேசி இணக்கமான தீர்வுகாண வேண்டியிருக்கின்றது. அதனால் தான் இனி வரும் பேசசுக்கள் மிகமிகக் கடினமாக இருக்கும் என்று நான் கூறினேன்" - என்றார் பிரதமர்.

"அதிக பிரச்சினைகள் இருப்பதாகக் கூறுகின்றீர்கள். புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நீங்களே நேரடியாகப் பேச்சு நடத்தினால் இப்பிரச்சினைகளுக்கு சுலபமாகத் தீர்வுகாணலாமல்லவா?" - என்று பிரதமரிடம் வினா தொடுக்கப்பட்டது.

"நீண்ட காலமாக - கொடூரமாக - நடந்த இந்த இனப்போருக்கு இரண்டு பக்கத் தலைவர்களும் நேரடியாகச் சந்தித்தவுடன் தீர்வு கிட்டிவிடும் என நான் நம்பவில்லை" - என்று பதிலளித்தார் பிரதமர்.

---


**தவறிவிட்டது**

எனது 'காரியாலய அடையாள அட்டை (ஜனசக்தி இன்சூரன்ஸ)யாழ். நகருக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொடர்பு: நி.தில்லைச்சிவன்
இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
☏ 222 3827, 0777 111170 (44445)

**எமது ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு**
விஜயகாந்தின்
★தென்னவன்
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (22452)

**BRIGHTMAN**
நாவலர் வீதி, யாழ் நகர்.
A/L 2004,2005
★ புவியியல் ★
By:I.S.ஜெகன்B.A.(GEO.Sp.)
ஆரம்பம்:13-09-2003
Sat .-1.00 p.m.
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
(12) (22426)

★நாளை ஆரம்பமாகின்றது★
"நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்"
**திருமறைக் கலாமன்றம்**
நடத்தும்
**ஈழத்துக் கூத்து விழா**
காலம்: 11,12,13,14 செப்ரெம்பர் 2003
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

**கருத்தரங்குகள்**

இடம் : மறைக்கல்வி நடு நிலைய மண்டபம்.
நேரம் : மு.ப. 9.30 - 5.30 மணி வரை.
வெவ்வேறு பிரதேசக் கூத்து மரபுகள் தொடர்பான செயல் அளிக்கைகளுடன் இணைந்த கருத்தரங்குகள் அந்தந்தப் பிரதேச ஆய்வாளர்களினால் நடத்தப்படும்.

★ 11-09-2003 - மன்னார் பிரதேசக் கூத்து மரபு
- மலையக பிரதேசக் கூத்து மரபு
★ 12-09-2003 - மட்டக்களப்பு பிரதேசக் கூத்து மரபு
- வன்னிப் பிரதேசக் கூத்து மரபு
- தமிழக தெருக்கூத்து மரபு
★ 13-09-2003 - யாழ்ப்பாணப் பிரதேசக் கூத்து மரபு
★ 14-09-2003 - தேசிய அரங்கை நோக்கிய கலந்தாய்வரங்கு

**கூத்து அளிக்கைகள்**

இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு.
நேரம்: மாலை 6.45 மணி.

★ 11-09-2003 - 'அர்ச்சுனன் தபசு' மலையகம்
(புதிய பண்பாட்டு அமைப்பு அளிக்கைக்குழு -மலையகம்)
'கல்சுமந்த காவலர்கள்'- வடபாங்கு, மன்னார்.
(குழந்தை செபமாலை குழுவினர். முருங்கன். மன்னார்.)
★ 12-09-2003 - 'காமன் கூத்து'- மலையகம்
(புதிய பண்பாட்டு அமைப்பு அளிக்கைக்குழு -மலையகம்)
'கோவலன் கூத்து'- வன்னி
(மணியம் குழுவினர் -முல்லைத்தீவு)
'ஏகலைவன்'- தென்மோடி, யாழ்ப்பாணம்.
(திருமறைக்கலாமன்றம் - யாழ்ப்பாணம்)
★ 13-09-2003 - 'கீசகன் கதை'- வடமோடி, யாழ்ப்பாணம்
(நாட்டுக் கூத்து அபிவிருத்திக்குழு. வட்டுக்கோட்டை)
'கம்பன் மகன்'- தென்மோடி, யாழ்ப்பாணம்.
(திருமறைக்கலாமன்றம் - யாழ்ப்பாணம்)
★ 14-09-2003 - 'காத்தவராயன்'- சிந்துநடை
(நாட்டாரியற் கழகம். யாழ்ப்பாணம்)
'இராவணேசன்'- வடமோடி - மட்டக்களப்பு
(நுண்கலைத்துறை. கிழக்குப் பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (C30094)(32-12-18) -திருமறைக் கலாமன்றம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அந்நியரின் ஆட்சிக்கு முன்னும் பின்னும் இலங்கையில் தமிழுக்கே முக்கியத்துவம்

## 1777ஆம் ஆண்டு கண்டி - பிரெஞ்சு மன்னர்கள் தமிழிலேயே ஒப்பந்தம்

இலங்கையின் ஆரம்ப வரலாற்றைக்கூறும் பௌத்த நூலான மகாவம்சம் நாட்டின் சுதேசிகளாக நாகர் - இயக்கர் என்னும் திராவிடரையே உறுதியாகக் கூறுகிறது.

மகாவம்சம் கூறும் விஜயன் கதையைப் பௌத்த சிங்கள புத்திஜீவிகளே, கட்டுக்கதையென ஒதுக்கியுள்ளார்கள்.

இலங்கையின் ஆதிவாசிகள் - இயக்கர்கள் என்பதை மறுக்கவுமில்லை; வெறுக்கவுமில்லை.

எனவே, இலங்கையின் ஆரம்பக் குடிகளாக நாகர்களையும் -இயக்கர்களையும் பௌத்த, சிங்கள புத்திஜீவிகள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதில் இரண்டாம் பேச்சுக்கு இடமில்லை.

இவர்கள் திராவிடர்கள். முதலில் 'எலு' என்ற கொடுந்தமிழைப் பேசியவர்கள். பின்னர் செந்தமிழில் வளர்ந்தவர்கள். சைவத்தை சமயமாக ஏற்று சிவ வழிபாட்டை ஜெகமெல்லாம் வாழவைத்தவர்கள். இதனால் தென்னாட்டுடைய சிவனே எனப் போற்றப்பட்டவர்கள; பாடப்பட்டவர்கள்.

இடையில் கலிங்கம் - வங்கம் சிங்கபுரத்திலிருந்து திராவிடர்கள் 'எலு' மொழியோடு இலங்கையில் குடி அமர்ந்தனர். வந்தவர்கள் 'எலு' என்னும் கொடுந்தமிழோடு வந்தவர்கள். அவர்கள் குலவிருதாக சிங்கம் இருந்தது. எனவே, இங்கிருந்தவர்கள், வந்தவர்களை அடையாளப்படுத்த அவர்கள் குலவிருதையும் பேசும்மொழியையும் இணைத்து 'சிங்க - எலு' வினர் என்றார்கள். அதுவே காலப் போக்கில் நிலைத்துச் சிங்களவர் என்றும், மொழிக்கு சிங்களமென்றும் பதியப்பட்டது.

இதனால், இனத்தால் ஒன்றானவர்கள் பேசும் மொழியால் வேறுபட்டு - வேறினமானார்கள். இருந்தவர்களை வந்தவர்கள் துரத்தி - துன்பப்படுத்தி - ஆக்கிரமிப்புச்செய்த காரணத்தால், இருந்தவர்கள் வந்தவர்களோடு ஐக்கியப்படாமல் பிரிந்து பிளவுபட்டனர்.

வந்தவர்களும் அன்று இருந்த சைவத்தோடு இணைந்தே வாழ்ந்தார்கள். மூத்த சிவனின் மகனான தீசன் அரசனானதும் - அசோகன் இந்தியாவின் அரசனானதும் ஒரே காலப்பகுதியின் நிகழ்வுகளாகும்.

### புதிய வணக்க முறை

இவர்கள் இருவருக்குமிடையில் ஏற்பட்ட நட்பு - ஒரு புதிய வணக்க முறையை இலங்கை வரலாற்றில் ஏற்படுத்தியது. அதுவே பௌத்த மதத்தின் காலூன்றலாகும்.

மத மாற்றத்தால் மன்னனின் பெயர் மாறியது. அவன் தேவனை நம்பியதால் - தேவநம்பியதீசன் ஆனான். அவன் தந்தை மூத்தசிவன் - சைவசமயத்தில் அதிக பற்றுள்ளவன்.

தீசன மன்னனாகும்வரை சைவன், மன்னனாகி சில காலத்தின்பின் பௌததன். ஆனால் தமிழைப் பேசியவன்.

சுதேசிகளான நாகர் - இயக்கர் காலம் தொடங்கி கி.பி. 1621 ஆம் ஆண்டுவரை இலங்கையை ஆண்ட மன்னர்களின் பெயர்கள் தீசனென்றும் பாகு என்றும் இறுதியைக் கொண்டே முடிவுறுகிறது. இவை அனைத்தும் தமிழ்ப் பெயர்கள்.

இவை முடிக்குரிய பெயர்களாக இலங்கையின் நீண்ட நெடிய காலமாக அங்கீகரிக்கப்பட்டு வருவதால் - முடிசூடுபவர்கள் தங்கள் இயற்பெயரைத்துறந்து - முடிக்குரிய பெயரை ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

ஆனால், பௌத்தம் ஏற்படுத்திய உணர்வலைகளால் உந்தப்பட்ட மக்களை, அவர்கள் வழி மூலமே ஆளவேண்டி ஏற்பட்டதால் முடிசூடிய மன்னர்கள், பௌத்தத்தை ஆதரித்தார்கள்.

ஆனால், அவர்கள் ஆட்சிமொழியாகத் தமிழே இருந்தது.

தமிழை ஆட்சிமொழியாகவும் சைவத்தை வழிபாட்டு மதமாகவும் கொண்ட இலங்கை மன்னர்கள் விவரம் வருமாறு:-

1. விஜயபாகு கி.பி. 1070 - 1111
2. விக்கிரமபாகு கி.பி. 1116 -1139
3. மானபரனன் கி.பி. 1230 - 1244
4. முதலாம் கஜபாகு கி.பி. 171 - 193
5. ஐந்தாம் புவனேகபாகு கி.பி. 1344 - 2354
6. ஏழாவது புவனேகபாகு கி.பி. 1521 - 1550
7. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் கி.பி. 1777
8. ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் கி.பி. 1813

இவை பற்றி பௌத்தர்களின் சூழவம்சம் 70 ஆம் பக்கத்திலும் கிரிநமுனே 112 ஆம் பக்கத்திலும் கூறப்பட்டுள்ளன.

கோட்டை மன்னர்கள் தங்கள் ஆட்சிமொழியாகத் தமிழையே கொண்டிருநதார்கள். கண்டி மன்னர்கள் தங்கள் அரண்மனை மொழியாகவும் - வெளிநாட்டு விவகார மொழியாகவும் தமிழையே பயன்படுத்தினர்.

1937 ஆம் ஆண்டு வெளிவந்த **Historical Mahuccripities Commission** மூன்றாம் அறிக்கையில் 66 தமிழ்க் கடிதங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவந்துள்ளன.

கி.பி. 1777 ஆம் ஆண்டில் கண்டியை ஆண்ட கீர்த்தி ஸ்ரீஇராசசிங்கனுக்கும், பிரெஞ்சு மன்னன் 16 ஆம் லூயிக்கும் இடையில் ஒரு நட்பு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தம் சிங்கள மொழியிலோ அல்லது பிரெஞ்சு மொழியிலோ எழுதப்படவில்லை.

இது முழுக்க முழுக்க தமிழிலேயே எழுதப்பட்டுள்ளது. பாண்டிச்சேரி நூதனசாலையில் இதனை இன்றும் காணலாம்.

அதேபோல், 1815 ஆம் ஆண்டில் பிரித்தானியருக்கும், கண்டி கடைசி மன்னனுக்கும் இடையில் நடைபெற்ற ஒப்பந்தத்தில் இன்றைய ஜனாதிபதியின் முப்பாட்டனாரான ரத்வத்தை நிலமே தமிழிலேயே கையெழுத்திட்டுள்ளார்.

தலதா மாளிகையின் நூதன சாலையில் இதனை இன்றும் காணலாம்.

### மூன்று இராச்சியங்கள்

அந்நியரான போர்த்துக்கேயர் இலங்கையில் கால்பதித்தபோது, இலங்கையில் யாழ்ப்பாணம் - கோட்டை - கண்டி ஆகிய மூன்று இராச்சியங்களே இருந்தன.

அவற்றை சங்கிலியன், தர்மபால, ஸ்ரீவிக்கிரம இராசசிங்கன் என்போர் ஆண்டு கொண்டிருந்தனர். இந்த மூன்று மன்னர்களும் தமிழர்கள். இந்த மூன்று இராச்சியங்களிலும் தமிழ் மொழியே ஆட்சிமொழியாகும்.

"8 ஆம், 9ஆம் நூற்றாண்டுவரை இலங்கையின் தனித்துவமான சிங்கள எழுத்துவடிவம் தோன்றி இருக்கவில்லை" என்று காலநிதி எட்வேட் முல்லர் கூறுகிறார்.

இக்காலச் சிங்கள எழுத்துக்கள் தெனனிந்தியாவில் வழக்கிலிருந்த கிரந்த எழுத்தை அடியொற்றி 10 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டன. என்று சே.வி.பெண்ஹொம் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, சிங்களமொழி போதிய வளர்ச்சி அடையாததாலும் உலகில வேறுபகுதிகளில் சிங்கமொழி உபயோகமில்லாததாலும், சிங்களமொழியினால் ஆட்சிமொழி அந்தஸ்தைப் பெறமுடியவில்லை.

ஆனால், பௌத்தம் வளர்ச்சியடைந்திருந்தது. அன்று பௌத்தத்தைத் தழுவியர்கள் எல்லோருமே சிங்களவர் அல்லர். எனவே, சிங்கள மொழியின் வளர்ச்சியும் அந்நியர் ஆட்சியிலே இடம்பெற்றது.

அந்நியர் வரும் முன்னர் இலங்கையை ஆண்டவர்கள் தமிழர்களும் - பௌத்ததமிழர்களுமே ஆவர்; பௌத்த சிங்களவர் அல்லர்.

பாளி மொழியில் பௌத்த நூல்களை எழுதியவர்களும் பௌத்த தமிழர்களே அன்றி, பௌத்த சிங்களவர்கள் அல்லர்.

இலங்கையின் வரலாற்று ஆசிரியர்கள் பௌத்தத்தை ஆதரித்தவர்கள் அனைவரையும் பௌத்த சிங்களவர் என்று குறிப்பிட்டு அவர்கள் எழுதி வைத்ததால்தான் இலங்கையை ஆண்டவர்கள் சிங்களவர்கள் என்ற மாயத் தோற்றம் மகாவம்சத்திலிருந்தே ஏற்படுத்தப்பட்டுவருகிறது.

இதையே நம்பி தமிழ்ப் பேராசிரியர்களும் பார்த்தெழுதிப் பட்டங்கள் பெற்றுக்கொண்டார்களே ஒழிய - அதைப் பகுத்தறிவோடு பார்த்து பலனெழுதத் தவறிவிட்டார்கள்.

### தவறின் விஸ்வரூபம்

அந்தத தவறு விஸ்வரூபமெடுத்து இன்று தமிழுக்கே வேட்டுவைக்கிறது.

பௌத்த சிங்களவர் இலங்கையில் ஆண்டிருந்தால் - இலங்கையில சிங்களமொழி ஆட்சிமொழியாகவும் நீதிமன்ற மொழியாகவுமிருந்திருக்கும்.

வெறித்தனம் கொண்ட பௌத்தர்கள் தமிழை ஆட்சி மொழியாகவோ அல்லது நீதிமன்ற மொழியாகவோ ஏற்றிருக்கமாட்டார்கள்.

கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் இறந்த போது எந்த பௌத்த சிங்களவனும் கண்டி அரசுக்கு உரிமை கோரவில்லை.

துரைசாமி உரிமை கோரினான். ஆனால், கண்டி பௌத்தர்கள் கண்ணுச்சாமியை அரசனாக்கினார்கள்.

எனவே, பௌத்த தமிழர்களின் ஆட்சியையே பௌத்த சிங்களவர் ஆட்சியென வலியுறுத்தும் சிங்கள வெறியே இன்றைய இனவெறியின் தோற்றுவாயாகும்.

இலங்கையை போர்த்துக்கேயர் பிடித்தபோது அவர்கள் முதலில் கைப்பற்றிய பகுதி தமிழர்களின் பகுதியாகும். அடுத்துவந்த ஒல்லாந்தர்கள் அவர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றினார்கள்.

**பூ.மா.செல்லத்துரை**

ஒல்லாந்து நாட்டு ஆளுநர் ரிக்குலாப்வான் கோயன்ஸ் கி.பி. 1665 ஆம் ஆண்டு தனது உயர் அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

மட்டக்களப்பில் வாழ்வோர் எல்லோரும் மரபு வழமைகள், சமயம் முதலிய பண்புகளால் மலபார் தேசத்திலிருந்து வந்தவர்களே ஆவர். அதே போன்று யாழ்ப்பாணப் பட்டணம், திருமலை மற்றும் மேற்கிலுள்ள கல்பென்ரைன் (கல்பிட்டி) மட்டுமல்ல கங்குள் கோறனை வடபாகம் உள்ளிட்ட இடங்களில் வாழ்பவர்கள் மலபார் இனத்தவர்களே. மலபார் என்பது மலையாளத்தேசத்தையே ஆகும். யாழ்ப்பாணத்தவர்கள் அதுவரையும் சுதந்திரமாக வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வாறு அந்த ஆளுநர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

நீண்ட நெடுங்காலம் தொட்டு இலங்கையைத் தமக்குள் கூறுபோட்டு இரு வேறு தேசிய இனங்கள் ஆண்டு வந்தன. இவர்கள் சிங்களவரும் மலபார் இனத்தவர்களுமாவர்.

சிங்களவர் இலங்கையின் தெற்கு, மேற்குப் பகுதிகளிலுள்ள வளவை ஆறு தொடக்கம் சிலாபம் வரையும் ஆண்டனர்.

மலபார் இனத்தவர் வடகிழக்கு உட்பட புத்தளம் தொடக்கம் மன்னார் வரையும் கிழக்கின் குமுக்கன் ஆறுவரையும் வாழ்கிறார்கள்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார்.

### வடக்கில் தமிழ் மொழி

அடுத்து, 1813 ஆம் ஆண்டு இலங்கையில் பிரித்தானிய ஆட்சியாளர்களாக இருந்த சேர் பிறவுன்றிக், பிரித்தானிய குடியேற்ற நாடுகளின் குடியேற்ற நாடுகளின் மந்திரிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இலங்கையில் சிங்கள மொழி எவ்வளவு அவசியமோ அதுபோல வடக்கில் தமிழ் மொழியும் அவசியமாகும். புத்தளம் கல்பிட்டி முதல் மட்டக்களப்புவரை வாழ்வோர்களின் மொழி தமிழாகவே இருக்கின்றது. ஆகையால், சிங்கள மொழியுடன் தமிழ் மொழிக்கும் சமவுரிமை வழங்குகிறேன் - இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

கி.பி. 1770 ஆம் ஆண்டில் இலங்கை வந்த ரெலென்ட் என்பவர் தனது குறிப்பில் இத்தீவில் பெரும் பகுதி தமிழர்களின் வாழ்விடமாகத் தெரிகிறது.

வன்னிப் பகுதி வன்னியர்களால் ஆழப்படுகிறது. அது அவர்களின் சொந்த நாடு எனக் கூறுகிறார்கள்.

இவர்கள் சிங்கள ஆட்சிக்கு உட்பட்டவர்களல்லர். கரையோரங்களில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் தமிழ் பேசுகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 1700 ஆம் ஆண்டில் சுவைட்சர் என்பவர் இத்தீவின் மற்றக் குடிகளான தமிழர் காலி - மட்டக்களப்பு - திருகோணமலை, மன்னார் - யாழ்ப்பாணம் - அரிப்பு - கற்பிட்டி - நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் வாழ்கிறார்கள். இவர்களில் வன்னித் தமிழர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்டுள்ளார்கள் என்று கூறியுள்ளார்.

இந்த வரலாற்றுத் தரவைத் தந்தவர்கள் தமிழரல்லர். தமிழர்களின் ஆதரவாளருமல்லர். இந்த நாட்டை 450 வருடங்களாக ஆண்டு அனுபவித்து நாட்டின் சந்து பொந்துகளையும் வரலாற்றையும் நன்கு தெரிந்து தெளிந்தவர்கள, சுதேசிகள் மேல் வெறுப்போ விருப்போ அற்றவர்கள், அந்நியர்கள்.

அவர்கள் கண்டதையும் கேட்டதையும் கனகச்சிதமாக கண்ணால் கண்ட மாதிரியாகவே எழுதியுள்ளார்கள். இவற்றையெல்லாம் படித்தவர்கள்தான் இன்று ஆட்சியிலும் அரசியலிலும் இருப்பவர்கள்.

ஆனால், வடக்கு - கிழக்கைத் தமிழர்களின் பிரதேசம் என 1933 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் விசாரணை சபைமுன் சாட்சி கூறியவர்கள் கண்டிச் சிங்கள மகா சபையினர். அவர்கள் இதையும் மறந்துவிட்டார்கள்.

தெற்கில் வாழ்ந்த தமிழர் என்ன ஆனார்கள்? அவர்களையும் கடற்கோள் அழித்துவிட்டதா?

இல்லை. கண்டியரசனான இராசசிங்கன் செய்த சதியினால் தமிழரெல்லாம் பௌத்தர்களாகி சிங்களவராகிவிட்டார்கள். அது எப்படி?

### சிவனொளி பாதமலை

150 வருடங்களுக்கு மேலாக சிவனொளி பாதமலையில் நிர்வாகம் சைவசமயத்தவர்களிடம் இருந்தது. ஆனால், கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் அதை பௌத்தர்களின் நிர்வாகத்துக்கு மாற்றினான்.

சிவனொளிபாத மலை ஆரம்பத்தில் முழுக்கமுழுக்க சைவர்களின் நிர்வாகத்திலே இருந்தது என்பது பாதிரியார் எஸ்.ஜீ.பெரேராவின் குறிப்பிலிருந்து தெரியவருகிறது.

பாதிரியார் பெரேராவின் காலக் குறிப்பு போர்த்துக்கீசரின் ஆட்சிக் காலத்தின் பிந்திய கணிப்பாகும்.

போர்த்துக்கீசரின் ஆட்சி ஆரம்பத்தின் பின் சிவனொளி பாதமலை 150 வருடங்களாக இந்துக்களின் நிர்வாகததிலிருந்தது. கண்டியை ஆண்ட கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் பௌத்தத்தைத் தழுவியதால் ஏனைய இந்துக்களிடமும் மதமாற்றத்தை ஏற்படுத்த அவர்களின் நிர்வாகத்திலிருந்த சிவனொளிபாத மலையை பௌத்தர்களின் நிர்வாகத்திற்கு மாற்றினான்.

இவனின் காலத்தில் 17 ஆம் நூற்றாண்டுவரை சைவர்களின் திருவிழாவாக நடைபெற்றுவந்த கண்டி தலதாமாளிகைப் பெரஹரா பௌத்த விழாவாக மாற்றப்பட்டது.

இவ்வாறு கண்டியில் 20 வருடமாகச் சிறையிலிருந்த ரொபேர்ட் நொக்ஸ் தனது இலங்கையின் சமயங்கள் என்ற நூலில் கூறியுள்ளார்.

அதேபோல, கதிர்காமத்தின் நிர்வாகமும் சைவர்களிடமிருந்து மதம் மாறியவர்கள் கைக்கு பின் தோன்றிய பரம்பரை தமிழைவிட்டு சிங்களத்தை முழுமையாக ஏற்று பௌத்த சிங்கள இனமாக மாறியது.

### பன்முக கலாசாரம்

இலங்கை ஒரு பன்முகக் கலாசாரத் தன்மை கொண்ட நாடு. பன்முக சமூக அமைப்புகளைக் கொண்ட நாடு.

இதனை பௌத்தர்கள் குறிப்பாக பௌத்தபிக்குகள் ஏற்றுக்கொள்ளத்தவறியமையையே இன்று நாடு எதிர்நோக்கியுள்ள இனநெருக்கடிக்கு முழுக் காரணமாகும்.

அதுமட்டுமன்றி, தனியொரு இனத்துக்குரிய நாடு என்ற கருத்தாலே நாடு பிளவை நோக்கியுள்ளது என்பது கலாநிதி ஜெயதேவ உயன்கொடவின் கருத்து.

தமிழர்களின் கோரிக்கை புதியதல்ல. வரலாற்று ரீதியானது மட்டுமல்ல. இலங்கையை ஆண்ட ஆழ்கின்ற சகல கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு உறுதி செய்யப்பட்ட உண்மை ஆகும்.

பண்டா - செல்வா, டட்லி - செல்வா, ஸ்ரீமாவோ - செல்வா ஆகிய ஒப்பந்தங்கள் மூலமும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் மூலமும் உறுதி செய்யப்பட்ட உண்மை.

அதன்பாற்பட்ட உண்மையானதும் உறுதியானதுமான அரசியல் அலகையே இடைக்கால நிர்வாகமாகப் புலிகள் கேட்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது.

அன்று சர்வதேசத்தினரின் குரலுக்குப் புலிகள் மதிப்புக் கொடுத்துப் போரை நிறுத்தாவிடில் புலிகள் தனிநாட்டை பெற்றுத் தமிழருக்குச் சொந்த தாயகத்தை உருவாக்கி இருப்பார்கள்.

எனவே, தனிநாட்டைத் தடுத்த சர்வதேசம் அதற்கு ஈடான அரசியல் அலகைத் தமிழருக்கு வழங்க ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். அல்லது புலிகளைத் தன்வழி செல்ல ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவேண்டும்.

### ஆற்றைக் கடக்கும்வரை

சிங்களத் தலைவர்கள் எப்போதுமே ஆற்றைக்கடக்கும் வரை அண்ணன் தம்பி உறவு கொள்வார்கள். ஆற்றைக் கடந்து விட்டால் நீ யாரோ, நான் யாரோ என்பார்கள். இது அவர்கள் பிறவிக்குணம்.

புத்தபெருமான் மானிட வர்க்கத்தை இனம், மதம், கட்சி, குலம் என்றெல்லாம் பாகுபடுத்திப் பார்க்கவில்லை. மனிதப் பிறவிகள் அனைவரையும் சமமாக சம அந்தஸ்தோடு வாழவேண்டும் எனக் கூறியுள்ளார். தமிழர்களை ஏமாற்றிக்கொண்டு அரசியல் நடத்த சிங்களத் தலைவர்கள் பழக்கப்பட்டுவிட்டார்கள். தமிழர்களின் வாக்குகளைப் பெற மட்டும் நலமாகப் பேசி நம்பவைத்து வாக்கைப் பெற்றதும் அவர்களைக் கைவிடும் சுபாவம் பல சிங்களத் தலைவர்களிடம் காணப்படுகிறது.

இவ்வாறு கூறியிருப்பவர்கள் வேறு யாரும் அல்ல. பாம்பின் காலை பாம்பே அறியும் என்பது போல ஹப்பிட்டிகமசியனே கோரளைகளின் பிரதான சங்கநாயக்கரான சந்தன்னகம அத்தஸ்சிதேர் தான் மேற்கண்டவாறு கூறினார். அவர் சிங்களத் தலைவர்களை நன்கு புரிந்தவர். தெரிந்து அறிந்தவர். அதனால் அவ்விதம் கூறினார்.

சிங்களத் தலைவர்களை நம்பும் நிலை என்றும் இருந்ததில்லை. மீண்டும் ஒரு ஏமாற்றத்தை தாங்கிக் கொள்ளும் நிலையும் தமிழர்களுக்கு இல்லை.

ரணிலின் அரசு ஆரம்பித்த சமாதானக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கிய சூடான நேரத்தில் இலங்கையின் முன்னாள் அமெரிக்கத் தூதர் றெட்சிற்றா சோப அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் புலிகளின் அபிலாசைகளுக்கும் அரசு தன் கைவசம் வைத்திருக்கும் திட்டங்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது எனக் கூறியிருந்தார்.

இவற்றையெல்லாம் சர்வதேச சமூகம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

இலங்கை ஆரம்பத்தில் தமிழர்களின் தாய் வீடு. இடையில் வந்தவரையெல்லாம் வரவேற்று வாழ்வு கொடுக்க முனைந்ததால் தம் வாழ்வையே கேள்விக்குறியாக்கி விழிக்கிறார்கள் அவர்கள்.

ஆதிமுதல் இன்றுவரை தமிழர்கள் இலங்கையின் சொந்தக்காரர்கள். பாதியிலே வந்தவர்கள் பகைவராகி படாதபாடு படுத்துகிறார்கள்.

இலங்கையை ஆண்ட அந்நிய ஆட்சியாளர்கள் நாட்டை விட்டு மூட்டைகட்டிப் போகும்போது நாடு யாருக்குச் சொந்தமென்று தாங்களே எழுதி வைத்த சரித்திரச் சான்றுகளைக்கூட சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் கூறவில்லை.

அந்நிய ஆட்சியிலும் 1815ஆம் ஆண்டுவரை தமிழரின் தனி ஆட்சி இலங்கையில் இருந்தது. அந்நியர் வந்தபோது இலங்கையை ஆண்டவர்கள் தமிழர்கள்.

ஆண்ட தமிழர்களை அநாதைகளாக்கியவர்கள் பிரித்தானியர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொங்கிறீற் கற்கள், மணல், சல்லி விற்பனைக்குண்டு. தொடர்பு:- இ.சேகர், 162, அரசடி வீதி (டயனா கொமினிகேசன் முன்பாக), நல்லூர். T.P. 3146, 0712 347473. (22416)

அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- செ.சிவசம்பு, இல.101, இராஜவீதி, கோப்பாய்(22431)

புடைவைக் கடை பாவனையிலிருந்த பழைய மர அலுமாரிகள், சோகேஸ்கள் . விற்பனைக்குண்டு. தொடர்பு:- 55, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (22430)

இரண்டு மாதம் நிரம்பிய அழகிய கறுப்பு, மண்ணிற பொமேரியன் நாய்க குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- தாஸ், சம்பந்தர் லேன், வட்டுக்கோட்டை. (22412)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக கோழிகள் உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (22223)

புறோயிலர் 1Kg 160/= சுத்தம் செய்யப்பட்டது 1Kg 240/= மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 1)மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். 2) பொன்னாலை வீதி, விதானை வளவு, மானிப்பாய். (22437)

நிறைகூடிய தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. விலை குறைக்கப்பட்டுள்ளது. தினமும் சுத்தம்செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (22310)

## நிலைய பொருத்தம்

வீட்டிலும், தொழில் இடத்திலும் நிலையப்பொருத்தம் இல்லாதபடியால் ஏற்படக்கூடிய குறைபாடுகளை நிவர்த்திசெய்து கொள்ளவும், புதுமனை நிலையம் பார்க்கவும் நீங்கள் அணுகவேண்டிய முகவரி:- V.N.G.யோகராஜ் மனைபொருத்தம் சாத்திரியார் (மதுரை), 44/1, யாழ். வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.T.P.077-6082534. (C-30085)

## கார் விற்பனைக்கு

15 சிறி, Hyundai-Stellar G.S.L Model கார் நல்ல நிலையில் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு:- உடுவில் வீதி, மானிப்பாய் (ஆஸ்பத்திரிக்கு அருகில்). (22403)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், கட்டுடையில் (கேலன் காமகுளம்) வீடு சகல வசதிகளுடனும விற்பனைக்குண்டு. தொடர்பு:- பிள்ளைகள் இல்லம், மானிப்பாய். (22419)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கோவில் வீதியில் மேல்மாடி வீடு வாடகைக்குண்டு. வெளிநாட்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும். தொடர்பு:- 072-2773979. (22418)

சிறிய தொழில் ஸ்தாபனம் நடத்துவதற்கும், பெண்கள் (பல்கலை மாணவிகள்) மாத்திரம் தங்குவதற்கான வீடு, அறைகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு:- இல.220, கஸ்தூரியார் வீதி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்). (22404)

## வாடகைக்கு

இல.144, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை அரசடியில் K.K.S. வீதிக்கு மிக அண்மையில் அமைந்த பாதுகாப்பான, விசாலமான கடை ஒன்று வாடகைக்கு உண்டு. (பாமஸி, புத்தகக்கடை, கணனிக் கடை விரும்பத்தக்கது) (22405)

## தவறிவிட்டது

56/25, பூமகள் வீதி, அரியாலையைச் சேர்ந்த கி.மங்கயற்கரசி (இல.468602172V), கி.அஜித்தா (இல.827364410) ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள், விசேட அடையாள அட்டைகள் யாழ். நகரில் தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். (22394)

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த விஸ்வநாதன் சிவசுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 551402134V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொட்டிலடி, சங்கானை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (22390)

## காணி விற்பனைக்கு

65,கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள ஒரு பரப்புக் காணியுடன் கூடிய வீடும், 13/4 பரப்புக் காணியுடன் கிணறும் விற்பனைக்குண்டு. தனித்தனியாக பிரித்துக் கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். க.பரராஜசிங்கம், 65, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (22415)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரசாங்க எழுது வினைஞராகக் கடமையாற்றும் 30 வயதுடைய, செவ்வாய்க் குற்றமற்ற, 28 கிரகபாவமுள்ள மணமகனுக்கும் 32 வயதுடைய, செவ்வாய்க்குற்றமற்ற, 6 கிரகபாவமுடைய பயிற்றப்பட்ட ஆசிரியருக்கும் மணமகள் தேவை. தொடர்பு:- விள. இல.2032, மே/பா உதயன். (22425)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1965இல் பிறந்த, செவ்வாய்த் தோஷமற்ற, 23 கிரகபாவம் உடைய அரசாங்க வங்கியில் பகுதித தலைவராகக் கடமைபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. தொடர்பு:- விள.இல. 2031, மே/பா உதயன். (22424)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969இல் பிறந்த, செவ்வாய்க்குற்றமுள்ள, கிரகபாவம் 41உடைய B.com. ஆசிரியைக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகக்குறிப்பு, குடும்ப விவரத்துடன். தொடர்பு: விள.இல. 2030, மே/பா உதயன். (22423)

## பெற்றுக்கொள்ளவும்

சங்கானை, கேசன் இலத்திரனியல நிறுவனத்தில் திருத்துவதற்காக ஒப்படைக்கப்பட்ட பொருள்களை எதிர்வரும் 30.09.2003அம் திகதிக்கு முன்னதாகப் பெற்றுககொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

*பிரதான வீதி,*
*சங்கானை.* (22422)

- உரிமையாளர். (21-19-17)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அமரர்

### சிற்றம்பலம் சிவப்பிரகாசம்



(ஓய்வுபெற்ற கமநல சேவைத் திணைக்கள வெளிக்கள உத்தியோகத்தர்)
(கிளாக்கர் ஐயா)

கடந்த 13.08.2003 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சி.சிவப்பிரகாசம் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 12.09.2003 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச்செய்திகேட்டு உடன் எமது இல்லத்திற்கு வருகை தந்து எமது துயரத்தில் பங்குகொண்டு ஆறுதல்கூறியோருக்கும் தொலைபேசி, தொலைநகரி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், இறுதிக்கிரியைகளின்போது பங்குகொண்டு பலவிதங்களிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியங்களில் கலந்துகொண்டவர்களுக்கும் இன்னும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

- குடும்பத்தினர்
இல.83, 8ஆம் வாய்க்கால்,
உருத்திரபுரம்.

(22439) (26-19-17)


# SKY கம்பியூட்டர் சிஸ்ரம்

## யாழ். மாணவ உலகுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!



- MS OFFICE - இருமாத காலம் ரூ. 1500/=
- HARDWARE - ஆறுமாத காலம் ரூ. 6000/=

**கணனி பயிற்சி நெறிகளைக் கற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா!**

அப்படியாயின்

- கணனி விசேட நிபுணர்கள் மூலம் கற்றுத் தரப்படும்.
- தவணைமுறைக் கட்டணத்தில்
- எதிர்வரும் 15.09.2003இற்கு முன் பதிவு செய்பவர்களுக்கு 15% சலுகை வழங்கப்படும.
- கற்கைநெறி முடிவில் எமது - கொழும்பு - தலைமைக்காரியாலய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

எம்மிடம் கணனிகளும் பெற்றுக்கொள்ளலாம். 6 மாத உத்தரவாதம் விலை ரூபா 15000/= முதல்............

15" மொனிற்றர் விலை ரூ.6000/=

(C/30083)

**SKY** COMPUTER SYSTEMS
109, KANDY ROAD, CHUNDIKULY, JAFFNA. (கச்சேரிக்கு அருகில்)

(21-17-19)


## வேலை வாய்ப்பு

இரும்பு சார்பான கேற், கிறில், கடைச்சல் வேலைகளுக்கு அனுபவம் உள்ளவர்களும் பழகவிரும்புபவர்களும் தேவை. தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்றவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தொடர்பு:-

**லிங்கோ நுண்பட்டறை**
சட்டநாதர் வீதி, யாழ்ப்பாணம்.

(22401) (21-17-19)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
10
-
[illegible]
-
1923



உதிர்வு
12
-
08
-
2003

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த

### திருமதி சித்தன் கண்மணி

காலம்போட்ட விதை கண்மணியாய் நீ பிறந்தாய்
கணவன் கைப்பிடிக்க கண்ணகியாய் நீ வாழ்ந்தாய்
கண்ணைவிட்டு அகலாத காரியங்கள் நீ செய்தாய்
காலன் கரம் நீட்ட கைகோர்த்துப் போனதென்ன.

நாளை (11-09-2003) வியாழக்கிழமை நடைபெறவுள்ள அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மிகவும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி துரையன் செல்லம்மா (மகள்)
லாலா சோப் வீதி,
அச்சுவேலி வடக்கு.

- குடும்பத்தினர்.

(22434)(21-19-17)

உ
ஓம்
ஸ்ரீ காமாட்சி அம்பாள் துணை

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
வளரும் சுபமங்களகரமான சுபானு வருடம் ஆவணித் திங்கள் 25ஆம் நாள் நாளை (11.09.2003) வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் 10.15 மணிவரையுள்ள துலா லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்,.

துரை திருநாவுக்கரசு தம்பதிகளின்
சிரேஷ்ட புதல்வன்
**ஜெயராமன் (ஜெயா)**
அவர்களுக்கும்



ஆ.கதிரமலை தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வி
**உமாதேவி (உமா)**
அவர்களுக்கும்

ஸ்ரீ காமாட்சி அம்பாள் திருவருள் துணை கொண்டு திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் குடும்ப சகிதம் தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமண நிகழ்வில் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பையே நேர்முக அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

அன்றைய தினம் வரவேற்புபசாரம் மாலை 5.30 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திருமதி தி.சிவபாக்கியம் (தாயார்).
திரு.தி.ஜெயகரன் (கரன் - சகோதரன்).
திரு.திருமதி நகுலேஸ்வரன் (சகோதரி குடும்பம்).
(கண்ணன் + பாமா)
இல.155, சிவப்பிரகாசம் வீதி,
வண்.வட மேற்கு, யாழ்ப்பாணம்.
T.P. இல.: 0777- 210029

திருமதி கதிரைமலை குடும்பம்.
திரு.திருமதி மோகனராஜ் (சகோதரர் குடும்பம்).
இல.73, பெரியதம்பிரான் வீதி,
வண்.வடமேற்கு,
யாழ்ப்பாணம்.
T.P. இல.: 021 222 5922

*(இரு வீட்டார் அழைப்பு)* (22438) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு பாடசாலைகளில் விசேட நிகழ்ச்சிகள்

சாய்ந்தமருது,செப்.10

இம்மாதம் 25 ஆம் திகதி இலங்கையில் அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு நாட்டில் உள்ள பாடசாலைகளில் கல்வி, மனிதவள, கலாசார அமைச்சு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குசெய்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கிடையே சமாதான, சகவாழ்வு முக்கியத்துவம் பற்றி உணர்த்துவதற்காக கல்வி, மனிதவள, கலாசார அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு கோட்ட, வலய, மாகாண மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை இம்மாதம் 22 ஆம் திகதி நடத்துமாறு கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். செப்ரெம்பர் 21ஆம் திகதி பொது விடுமுறைத் தினமாக உள்ளமையால இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச சமாதானத்தின் இந்த வருடத்துக்கான குறிக்கோள்களாக:-

★ சர்வதேச பிரஜைகளின் அங்கத்தவர்களில் ஒருவராகவும், கூட்டமாகவும், ஒன்றாகவும் வாழ்வது பற்றிய சகவாழ்வு மனப்பாங்குகளை மாணவர்களிடையே உருவாக்குதல்.

★எமது நாட்டின் வன்செயல்களுக்குச் சாதகமான பல்வகைப் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதும், அதிலிருந்து விலகிக்கொள்ளும் தேவையைப் பாடசாலை மாணவர்கள் விளங்கிக்கொள்வதும்.

★ மனிதன் புவிக்குரிய ஒரு நபராக இருப்பதேயொழிய புவியின் ஒரே உரிமையாளன் அல்லாததால் பூமியில் அட்டகாசங்கள் செய்யக்கூடாதென்ற மனப்பாங்கினை ஏற்படுத்தல்.

என்பன கல்வி அமைச்சினால் இனங்காணப்பட்டுள்ளன. இந்தக் குறிக்கோள்களை வலியுறுத்தும் விதமாக பாடசாலைகளில் விசேட கலைக்கூடம், மாணவர்களின் பேச்சுக்கள், விசேட சொற்பொழிவுகள், மதப்பெரியார்களின கருத்துரைகள் என்பன இடம்பெறும்.

இம்மாதம் 22 ஆம் திகதி பாடசாலைகளில் மாணவர்களுக்கு சர்வதேச சமாதானப் பிரகடனத்தை வாசித்தல், கல்வி அமைச்சரின் சமாதானம் பற்றிய விசேட செய்தியை எடுத்துக் கூறுதல், சமாதான கீதம் இசைத்தல், மூவின மாணவர்களும் ஒன்றுகூடி சமாதானம் பற்றி உரையாடல் போன்று பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படவேண்டுமென கல்வி அமைச்சின் செயலாளர் வீகே. நாணயக்கார பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

(ம)

# யாழ். குடாநாட்டில் உற்பத்தியாகும் ஐஸை சந்தைப்படுத்த முடியாத நிலை

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யபடும் 'ஐஸ்'இனை சந்தைப்படுத்த முடியாத நிலை உள்ளது என்று கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் 'ஐஸ்'இன் உற்பத்திச் செலவு அதிகமாக இருப்பதாகவும் இதனால் அதனை விற்பனை செய்ய முடியாமல உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தென்னிலங்கையிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு 'கூலர்' வாகனங்கள் மூலம் மீன்களை கொள்வனவு செய்ய வருகின்றவர்கள் அங்கிருந்து 'ஐஸ்' கட்டிகளை எடுத்துவந்து குறைந்த விலையில் இங்கு விற்கிறார்கள்.

இதனால் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஐஸை சந்தைப்படுத்த முடியாத நிலை உள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் பற்றி அண்மையில் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற திணைக்களத் தலைவர்கள் கூட்டத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

(ம-ரி)

குடாநாட்டு புனரமைப்புப் பணிகளுக்கென

# வடமராட்சி கிழக்கில் மீண்டும் மணல் அள்ளுவதற்கு அனுமதி

யாழ்ப்பாணம்,செப்.10

குடாநாட்டின் புனரமைப்புப் பணிகளுக்குத் தேவையான மணலை வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து பெற்றுக்கொள்ள யாழ். செயலகம் மீண்டும் அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தந்த கனியவள ஆய்வாளர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம் சில நிபந்தனைகளுக்கிணங்கவே மணல் அகழ்வற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெள்ளை நிற மணல் அகழ்வதும், இரண்டு மீற்றருக்கு குறைவான உயரமுடைய இடத்தில் மணல் அகழ்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

மணல் பெறவேண்டியுள்ள திணைக்களங்கள், அபிவிருத்தி சபைகள், புனர்நிர்மாணப் பணியகங்கள் என்பன வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு அபிவிருத்திச் சங்கத்தின் அனுமதி பெற்ற பின்னரே மணல் ஏற்றமுடியும்.

மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவின் கீழானதொரு சேவையாகவே இந்த மணல் வழங்கும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

மணல் ஏற்றும் வாகனங்கள் மணல் பெறச்செல்லும் பாதைக்குரிய அனுமதிக்காக 100 ரூபா செலுத்தி அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தப் பணம் அப்பகுதி வீதிப் புனரமைப்பிற்கும், மரநடுகைக்கும் பயன்படுத்தப்படவுள்ளன.(ம-12-5-70)



சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கியின் நடவடிக்கைகளைக் கணனி மயப்படுத்தும் நிகழ்வு சமீபத்தில் நடைபெற்றபோது தேசிய சேமிப்பு வங்கியின் அகில இலங்கைக்கான தகவல் தொழில்நுட்ப உதவிப் பொது முகாமையாளர் ஈ.கே.ராஜலால் வாடிக்கையாளர் ஒருவருடன் சேவையை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம் : தெல்லிப்பழை செய்தியாளர்)

## மாதர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ். அத்தியடிப் பகுதியில் அண்மையில் மாதர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. ஆயுர்வேதக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் தெரிவும் அங்குரார்ப்பணமும் இடம்பெற்றது.

இந்த அமைப்பினூடாக வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பெண்கள் கணவனை இழந்த குடும்பங்களிலுள்ள பெண்கள் ஆகியோருக்கு சுயதொழில் வாய்ப்புக்கான உதவிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-30)

# திருநெல்வேலி நவீன சந்தையில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள்

## முறையிட்டும் பயனில்லையாம்

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ். திருநெல்வேலி நவீன சந்தைப் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சந்தை மேல்மாடிக் கட்டடப் பகுதியிலேயே சுகாதார நிலைமை மிகவும் மோசமாக உள்ளதாகவும் -

இது தொடர்பாக பல தடவைகள் நல்லூர் பிரதேச சபையிடம் முறையிட்டும் பயன் எதுவுமில்லை எனவும் -

அங்குள்ள வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

சந்தைக் கட்டடத்துக்கென மலசலகூடம் மற்றும் குடிதண்ணீர் போன்ற வசதிகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை. சந்தைக் கட்டடச் சுற்றுப்புறம் எதுவும் சுத்திகரிக்கப்படுவதில்லை என்று நவீன சந்தைக் கட்டட கடை உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நவீன சந்தைக் கட்டடத் தொகுதிக் கடைகளுக்கு கேள்வி கோரப்பட்டபோது மூன்று மாதத்துக்குள் பணத்தொகையைச் செலுத்தமுடியும் எனக் கூறப்பட்டதாகவும் -

ஆனால், பின்னர் முழுத் தொகையையும் ஒரு வாரத்துக்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் -

பணத்தை அறவிடுவதில் அக்கறை காட்டிய நல்லூர் பிரதேச சபை நிர்வாகம், தங்களுக்குரிய அடிப்படை வசதிகளைக் கூட நிறைவேற்றித் தரவில்லை எனவும் -

கடை உரிமையாளர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - நவீன சந்தை மேல்மாடிக் கடை உரிமையாளர்கள் இரவு 8 மணி வரை கட்டட வாயிலைத் திறந்து வைத்திருக்குமாறு கோரியபோதும், காரணம் எதுவுமின்றி 6 மணிக்கு முன்னரே கட்டட வாயில் பூட்டப்படுவதாகவும் கூறப்பட்டது. (ம-9)

# மிதிவெடியில் சிக்கி குடும்பஸ்தர் காயம்!

யாழ்ப்பாணம்,செப்.10

விறகு வெட்டச் சென்ற சமயம் மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் தனது வலது காலை இழந்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று பகல் 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரியாலை, முள்ளிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னையா பாஸ்கரன் (வயது - 26) என்பவரே காலை இழந்தவராவார். (ம-12-9)

# பளைக் கல்விக் கோட்டத்தில் 6 பாடசாலைகள் புனரமைப்பு

தென்மராட்சி,செப்.10

பளைக் கல்விக் கோட்டத்தில் ஆறு பாடசாலைகள் 150 லட்சம் ரூபா செலவில் மாகாணக் கல்வி அமைச்சினால் புனரமைக்கப்படவுள்ளன.

சோரன்பற்று ஸ்ரீ கணேசா வித்தியாலயம், இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கோயில் வயல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மசார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சோரன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, முகாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் புனரமைப்புக்கே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தினால் சேதமடைந்த இப்பாடசாலைகளில் புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கவும் தளபாடங்கள் கொள்வனவு செய்யவும் இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக கல்விக் கோட்டத்தினர் தெரிவித்தனர்.

மாகாணக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் அண்மையில் இங்கு விஜயம செய்து பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் விபரங்களை மதிப்பீடு செய்து சென்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-117)

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில்

# 4ஆண்டுகள் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

ஏறாவூர்,செப்.10

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகள் சேவையாற்றிய ஆசிரியர்கள் 2004ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றத் திட்டத்தின் கீழ் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம்செய்யப்படவுள்ளனர்.

- இவ்வாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்தார்.

வசதியான பிரதேசங்களில் ஆறு ஆண்டுகள் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

53 வயதைப் பூர்த்திசெய்த ஆசிரியர்கள் தங்களது சுயவிருப்பத்தின் பேரில் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்காதவிடத்து அவர்களை இடமாற்றம் செய்வது தவிர்க்கப்படவுள்ளது.

அரசாங்க வைத்திய அதிகாரியின் வைத்திய சான்றிதழின் பிரகாரம் விசேட வைத்தியக் காரணங்கள் தொடர்பாக இடமாற்றம் கோரும் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படவுள்ளதாகவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மாரைப் பொறுத்தவரையில் அவர்களது விருப்பமின்றி இடமாற்றம் வழங்கப்படமாட்டாது. எனினும், கர்ப்பிணித் தாய் இடமாற்றம் கோரினால் வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் கணவன், மனைவி ஆகியோர் இணைந்து வாழவேண்டிய அவசிய தேவை ஏற்படுகிறதா? அப்படியாயின் அத்தகையோரின் இடமாற்ற விண்ணப்பங்கள் சாதகமான முறையில் பரிசீலிக்கப்படும்.

- இவ்வாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் மேலும் தெரிவித்துள்ளார்.

## காரைநகரில் வைத்திய சேவை

குடும்ப புனர்வாழ்வு நிலையத்தினால் நடத்தப்படும் நடமாடும் வைத்திய சேவை இன்று காலை 9 மணிக்கு காரைநகர் டாக்டர் தியாகராசா மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

போரினால் உடல், உள பாதிப்பிற்குள்ளானோர், இராணுவ துன்புறுத்தல்களுககு உள்ளானோர் மற்றும் வைத்திய சிகிச்சைகள் பெறவேண்டியோர் இவ்வைத்திய சேவையில் பயனடைய முடியும். (ம-12-ரி)

தந்தையின் மரணச் சடங்குக்காக

# வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவரது நகைகள், பணம் மயானத்தில் மாயம்

அச்சுவேலி,செப்.10

தந்தையின் இறுதிக்கிரியைகளை நிறைவேற்றுவதற்கு வெளிநாட்டில் இருந்து வருகை தந்த மகனின் வெளிநாட்டு குடியுரிமை தொடர்பான முக்கிய ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம், தங்க நகைகள் உள்ளிட்ட உடைமைகள் மயானத்தில் வைத்தே திருடப்பட்டன.

அச்சுவேலி இடைக்காட்டில் அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்ற மகன் தந்தையின் மரண வீட்டிற்காக அங்கிருந்து வந்திருந்தார். தான் கொண்டுவந்த கடவுச்சீட்டு, வெளிநாட்டு பிரஜாவுரிமைச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், ஆள் அடையாள அட்டை, காசோலைகள், வெளிநாட்டுப் பணம், தங்க நகைகள் உள்ளிட்ட பொதியை அவர் தனது மைத்துனரிடம் கையளித்திருந்தார்.

கோண்டாவில் பகுதியில் குடியிருக்கும் மைத்துனன் வீட்டில் அவற்றை வைத்துவிட்டுச் செல்வது பாதுகாப்பில்லை என நினைத்து அவற்றைத் தம்முடன் எடுத்துவந்து மரணச் சடங்கின் போது அந்தப் பொதியைத் தன்னுடனேயே வைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

மயானத்தில் இறுதிக்கிரியை நடைபெற்றபோது தனது மோட்டார் சைக்கிளில் அந்தப் பொதியை வைத்துவிட்டு இறுதிக்கிரியைகளுக்கு உதவி செய்யச் சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த பொதி மாயமாகி இருந்தது.

பொதியில் இருந்த வெளிநாட்டு வதிவிடம் தொடர்பான ஆவணங்களும் ஒரு பகுதி தங்க நகைகளும் யன்னல் ஊடாக மரணச் சடங்கு நடைபெற்ற வீட்டின் அறைக்குள் பின்னர் வீசப்பட்டிருந்தன. மிகுதிப் பொருள்கள் இதுவரை மீட்டக்கப்படவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலீஸில் புகார் செய்யப்பட்டது. பொலீஸார் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்துவருகின்றனர்.

(ம-11)

# கிழக்கு பல்கலையில் முதற்றடவையாக இசை, நடன பட்டப்படிப்புகள் ஆரம்பம்

காரைதீவு,செப்.10

சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி, கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட பின்பு வரலாற்றில் முதற்றடவையாக இசை, நடனம் ஆகிய துறைகளில் பட்டப் படிப்பை மேற்கொள்ள 50மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

கிழக்குப் பல்கலை நுண்கலைப் பிரிவுப் பீடாதிபதி பேராசிரியர் சி. மௌனகுரு மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

2003ஏப்ரலில் நடந்த ஜீசிஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்ற 50 பேர இந்த முதலாவது கல்வியாண்டு அணியில் சேரும் வாய்பைப் பெறவுள்ளனர்.

இதுவரை காலமும் இசை மற்றும் நடனத்துறையில் பட்டப்படிப்பை மேற்கொள்ளவேண்டுமானால் யாழ். பல்கலைக்கழகத்திற்குச் செல்லவேண்டியிருநதது. ஆனால், இம்முறை முதறடவையாக கிழக்குப் பல்கலை விபுலானந்த நுண்கலை கல்லூரியில் பட்டப்படிப்பு வாய்ப்பு கிடைத்துள்ளது. இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது. எதிர்காலத்தில் மேலும் மூன்று பிரதான நுண்கலைப் பிரிவுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பளையில் டெங்கு [illegible]ப்பு

தென்மராட்சி, செப்.10

பளைப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையினை பளை சுகாதாரப் பிரிவினரும், பளைப் பிரதேச சபையினரும் ஆரம்பித்துள்ளனர்.

பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள், வீதிகள், சந்தைகள், பொது இடங்கள் ஆகியவற்றில் நீர் தேங்கக்கூடிய தகர, பிளாஸ்ரிக் ரின்கள், சிரட்டைகள், ரயர், கோப்பைகள், பொலித்தீன் என்பன சேகரிக்கப்பட்டும் -

டெங்கு நுளம்புகள் உள்ள பகுதிகள் இனங்காணப்பட்டு டெங்கு குடம்பிகள் அழிக்கப்பட்டும் வருகின்றன.

டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்குகள், சுகாதாரக்கல்வி ஆகியவை கிராமங்கள்தோறும் சுகாதார உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவின் பிரதிநிதிகள் ஆகியோரால் நடத்தப்பட்டு வருவதாகவும் பளைப் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர் வீ.இராசதுரை தெரிவித்தார்.

(ம-117)

# தேவை

- பில்கிளாக்
- சப்பிளையர்

(பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்)

தொடர்பு:
**ஹோட்டல் றொலெக்ஸ்**
340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
(குகன் விருந்தகம்)

(22436)(21-19)

# திறப்பு விழா

**DORA MULTI COMPLEX**

என்னும் எமது புதிய நிறுவனம்

இன்று (10-09-2003) புதன்கிழமை காலை 6மணி முதல் 7.00 மணி வரையுள்ள சுபவேளையில் 'சதாபொன்ஸ்' நிறுவன இயக்குநர் திரு.மு.சுந்தரலிங்கம் (சமாதான நீதிவான்) அவர்களால் மங்களகரமாகத் திறந்துவைக்கப்படும்.

அன்பர்கள் அனைவரையும் திறப்பு விழா வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

- கோ.சஞ்ஜீவன்.

(சி-30090) (21-14-19)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி தனவீரசிங்கம் மனோன்மணி
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கந்தையா நகுலேஸ்வரி**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/கோப்பாய் நாவலர்
தமிழ் வித்தியாலயம்.

(22429) (26-14-19)





LG
Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD,
JAFFNA.
TEL: 021-222-5766


## அச்சுவேலி வடக்கு ஸ்ரீ முருகன் சி.க.வ.கூ.சங்கம்

# மீதிகளை உறுதிப்படுத்தல்

அச்சுவேலி வடக்கு ஸ்ரீ முருகன் சி.க.வ.கூ.சங்கத்தின் 01.07.1995-30.06.1997 காலப்பகுதிக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டு இருப்பதனால் சங்கத்துடன் தொடர்புடைய அங்கத்தவர்கள் தங்கள் க/கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்களைச் சங்கப் பொருளாளராகிய செல்வி வேலாயுதம் அன்னலட்சுமியிடம் 13.09.2003 அன்று ஒப்படைத்து மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொருளாளர்.

(22383)(21-14-17)

# மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் 2003ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 10ஆம் நாள் இன்று (10-09-2003) புதன்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் 12.00 மணி வரையுள்ள சுபவேளையில

யாழ்ப்பாணம் பிரதான வீதி,
131ஆம் இலக்கக் கட்டடத்தில்
எம்மால் புதிதாக அமைக்கப்பெற்றுள்ள

## பி.ஜே.பர்னான்டோ

மூக்குக் கண்ணாடியகம், பல்கட்டும் நிலையம்

என்னும் ஸ்தாபனத்தை இறையருள்துணைகொண்டு ஆரம்பித்து நடத்துவதற்கு நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பித்து எம்மை மகிழ்விக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

131, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தலைமையகம்: பி.ஜே.பர்னான்டோ.
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-30087) (21-14-17)

தங்கள் நல்வரவை இனிதே நாடும்:
திரு.லயன் A.ஜெயக்குமாரனும்
பாரியாரும் பிள்ளைகளும்.

# மகாகவி பாரதி விழா 2003

## அழைப்பு



இடம்:- யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்:- இன்று (10.09.2003) புதன்கிழமை
பிற்பகல் 2.30 மணி.
தலைவர்:- தலைவர், தமிழ் மன்றம்,
யாழ்ப்பாணக்கல்லூரி.

பிரதம விருந்தினர்கள்:- பேராசிரியர் சி.மௌனகுரு
(தலைவர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம் இணைப்பாளர், சுவாமி விபுலானந்தர் இசை நடனக்கல்லூரி)
பேராசிரியை சித்திரலேகா மௌனகுரு
(மொழியியற்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

### நிகழ்ச்சிகள்

- மங்கள விளக்கேற்றல்
- இறை வணக்கம் :- வண.A.ஜெயகுமாரன்
- தமிழ்த்தாய் வணக்கம்
- ஆசியுரை:- பேராயர் அதிவண. கலாநிதி.சு.ஜெபநேசன்
- வரவேற்புரை:- N.A.விமலேந்திரன் (அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி)
- தலைமையுரை:- க.சுகாஸ் (தலைவர், தமிழ் மன்றம்)
- சிறுவர் பாடல்
- அறிமுகவுரை:- A.குமாரவேல் (இயக்குநர், பட்டப்படிப்புக்கள்பிரிவு)
- பிரதம விருந்தினர் உரை:-
  பேராசிரியர் சி.மௌனகுரு
  "வள்ளுவன், இளங்கோ, கம்பன் வரிசையிற் பாரதி"
  பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு
  "இருபத்தோராம் நூற்றாண்டுச் சவால்களும் பாரதியின் சிந்தனைகளும்"
- இசை நாடகம்
  யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் கழகமும் யாழ். முன்னணி இசை நாடகக் கலைஞர்களும் இணைந்து வழங்கும்
  "பாஞ்சாலி சபதம்"
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/30082)

யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் மன்றம்.



620, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

# மிருதங்க அரங்கேற்றம்

சங்கீதரத்தினம் திரு. எம். சிதம்பரநாதன்,
இசைக் கலைமணி-நல்லூர். க.கண்ணதாசன்
ஆகியோரின் மிருதங்க மாணவனும்
எமது சிரேஷ்ட புத்திரனுமாகிய

## செல்வன் நடராஜா சதீஸ்குமார்

அவர்களின் மிருதங்க அரங்கேற்றம்

காலம் : 14.09.2003 ஞாயிறு பிற்பகல் 3.30 மணி
இடம் : நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலாமண்டபம்

பிரதம விருந்தினர் பேராசிரியர்
சு.மோகனதாஸ் அவர்கள்
(துணைவேந்தர் - யாழ். பல்கலைக்கழகம்)

கலை ஆர்வலர்களை
அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி
நடராஜா
குடும்பத்தினர்



UTHAYAN Graphics (14-17)

(22399)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org